பக்கங்கள்: முப்பத்து இரண்டு + 6

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 22 ஞாயிற்றுக்கிழமை (07.08.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 254



09 தெரு விளக்கு பொருத்தவா வந்தார்?




17 கட்டாய சூழலில் ஒப்புதல் வாக்குமூலம்



19 இனிமையான பாடகர்



31 சாதித்தது இலங்கை



கனகராயன்குளத்தில் அமைக்கப்பட்டுவரும் விகாரையின் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

## வடக்கு எங்கும் சிங்கள வாசம்

### நேரில் வந்து பார்த்த பத்திரிகையாளர் கருத்து

கொழும்பு, ஒக. 7

இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களின் ஊடாகப் பயணித்த போது சிங்கள ஆதிக்க மனோநிலையைப் பிரதிபலிக்கின்ற பல்வேறு நடவடிக்கைகளை அவதானிக்க முடிந்தது என்று இந்தியாவின் 'தி வீக்எண்ட் லீடர்' என்ற இணையத் தளத்தில் அதன் செய்தியாளர் கொழும்பில் இருந்து எழுதியுள்ளார்.

''நாம் சுவாசிக்கும் இடமெல்லாம் சிங்கள வாசம் வீசியது'' என்று அவர் வடக்கு நிலைமை குறித்து வர்ணித்துள்ளார்.

பக் 31

# அமெ. போர் விமானங்கள் இலங்கை வானில் அதிரடி

## அனுமதி ஏதும் இன்றிப் பறந்தன

## அரசு எதிர்ப்பு; கடும் கண்டனம்

கொழும்பு, ஒக. 7

**அமெரிக்க கடற்படைக்குச் சொந்தமான 10 போர் விமானங்கள் கடந்த வாரம் இலங்கை வான் பரப்புக்குள் அத்துமீறிப் பறந்துள்ளன. இது குறித்து விசனம் அடைந்துள்ள இலங்கை தனது கண்டனத்தையும் கடும் எதிர்ப்பையும் தெரிவித்துள்ளது. இது நாட்டின் இறைமையை மீறும் செயல் எனவும் தெரிவித்துள்ளது.**

தென்கிழக்காசியக் கடற்பரப்பில் நிலைகொண்டுள்ள அமெரிக்க விமானந் தாங்கிக் கப்பலில் இருந்து கிளம்பிய போர் விமானங்களே இலங்கையின் வான்பரப்புக்குள் அனுமதி ஏதுமின்றித் திடீரெனப் புகுந்து வெளியேறின என்று வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்க விமானங்கள் 10 இலங்கை வான் பரப்பைக் கடந்து சென்றமையை பேதுருதாலகாலவில் உள்ள விமானப் பறப்புக் கட்டுப்பாட்டுத் தலைமையகம் உறுதிப்படுத்தியது. இலங்கை விமானப் படையினரும் இதனை உறுதி செய்துள்ளனர்.



(ஆவணப்படம்)

அனுமதி இன்றிச் சில விமானங்கள் கடந்த வாரம் இலங்கை வான் பரப்பில் பறந்தன என்பதை பொதுமக்கள் வானூர்தி கட்டுப்பாட்டுச் சபையும் ஏற்றுக்கொண்டுள்ளது.

பக் 31

## கூட்டமைப்பினரின் பதவி ஏற்பு நிகழ்வு யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஒக. 7

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களது பதவியேற்பு வைபவம் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு - கிழக்கில் பெரு வெற்றி பெற்றது. வெற்றிபெற்ற சபை உறுப்பினர்களுக்கான பதவியேற்பு

பக் 31

## எண்ணெய் அகழ்வுப் பணி மன்னாரில் நேற்று ஆரம்பம்

புத்தளம், ஒக. 7

மன்னார் கடல்படுகையில் எண்ணெய் அகழ்வுக்கான பணிகள் இந்திய நிறுவனத்தால் நேற்று ஆரம்பிக்கப்பட்டன என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ புத்தளத்தில் வைத்து ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த முயற்சியில் வெற்றி பெற்றால், எரிபொருள்களுக்காக மற்றைய நாடுகளில் தங்கியி

பக் 31

## நிதி நெருக்கடியில் யுஎன்எச்சிஆர் உதவிகள் தடைப்படும் அபாயம்

### வன்னியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கே அதிகம் பாதிப்பு ஏற்படும் ஏதுநிலை

கொழும்பு, ஒக. 7

வடக்கில் இடம்பெயர்ந்த மற்றும் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு தொடர்ந்தும் பெருமளவு உதவிகளை வழங்க வேண்டி உள்ள நிலையில், கடுமையான நிதி நெருக்கடியை எதிர்கொண்டிருப்பதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் (யுஎன்எச்சிஆர்) அறிவித்துள்ளது.

இதனால் வடக்கில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான உதவிகள் தடைப்படும் அபாயம் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

''வடக்கில் மனிதாபிமானத் தேவைகள் மிகப்பெரிய அளவி ல் இருக்கின்றன.

பக் 31

## அரசுடன் தொடர்ந்து பேசமுடியாத இக்கட்டு நிலைக்கு வந்துவிட்டோம்

### நிலைமையை விளக்குகிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்

கொழும்பு, ஒக. 7

இலங்கை அரசுடன் தொடர்ந்தும் பேச முடியாத முட்டுக்கட்டை நிலைக்கு வந்து விட்டோம் என்று தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

இனப்பிரச்சினைக்கு அரசு முன்வைக்கும் தீர்வு குறித்த மூன்று முக்கிய விடயங்களை இரு வாரங்களுக்குள் தெளிவுபடுத்துமாறு அரசுக்கு கூட்டமைப்பு நிபந்தனை விதித்தமை குறித்து விளக்கும் போதே அவர் இப்படிக் கூறினார்.

''ஆட்சி அதிகாரக் கட்டமைப்பு, மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கு இடையிலான அதிகாரப் பங்கீடு, நிதி மற்றும் வரி அறவீடுகள் தொடர்பான அதிகாரங்கள் குறித்து அரசு விளக்க வேண்டும் என்று நாம் இப்போது கேட்டிருக்கிறோம். இவற்றுக்கு அரசு பதிலளித்தால் பேச்சுக்களை மீண்டும் அரசுடன் ஆரம்பிக்க முடியும்'' என்றார் சுமந் திரன்.

பக் 31

குறைந்த கட்டணத்தில் பயணக் காப்புறுதிகள், பயணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள...
0777380557 - 0773629799
AIR MARK Travels & Tours
IATA

உலகத் தரம் வாய்ந்த டைல்களை யாழ். நகரில் நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ள ...




நவீன் செரமிக்
Naveen Ceramic
#212, பலாலி வீதி, யாழ்ப்பாணம் ☎ 021 222 0033 / 021 222 0044
#5, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் ☎ 0212224777 / 0212224888
Metro Engineering (Pvt) Ltd

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
07 ஓகஸ்ட் 2011 ஞாயிற்றுக்கிழமை

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




கிளி, முல்லை மாவட்டத்தில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படுவதுடன் ஏனைய மாவட்டங்களில் தெளிவான காலநிலை நிலவலாம்.

# ஆசிரியர் இடமாற்றத்தில் சிக்கல்களைத் தவிர்க்க விசேட நடைமுறைகளைப் பின்பற்றத் தீர்மானம்

## மாகாணக் கல்விப் பணிப்பாளர் - இலங்கை ஆசிரியர் சங்கம் சந்திப்பில் முடிவு

யாழ்ப்பாணம், ஓக.7

ஆசிரியர் இடமாற்றத்தின் போது ஏற்படும் சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில் விசேட நடைமுறைகளை கடைப்பிடிப்பதற்கு தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நேற்றுமுன்தினம் மாகாணக் கல்வித் திணைக்களத்தில் இடம்பெற்ற இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுக்கு இடையிலான கலந்துரையாடலின்போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

* ஆசிரியர் இடமாற்றத்துக்கான விண்ணப்ப முடிவுத் திகதி அடுத்த மாதம் 9 ஆம் திகதி ஆகும். (9.09.2011)

* ஏற்கனவே ஆசிரியர் இடமாற்றத்துக்காக விண்ணப்பித்த ஆசிரியர்கள் உட்பட சகல ஆசிரியர்களும் புதிதாக இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

* இடமாற்றங்கள் தொடர்பான சுற்றறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அவை பாடசாலைகளின் ஆசிரியர்கள் பார்வைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

* குறித்த கல்வி வலயம் ஒன்றில் ஒரே பாடசாலையில் 6 வருடங்கள் தொடர்ச்சியாக கடமை புரிந்தவர்கள் 01.01.2012 இல் பாடசாலை அமைந்துள்ள வலயத்தின் இன்னொரு பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

* தரம் ஐந்து, உயர் தரம் வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் மூன்றாம் தவணை ஆரம்பத்தின்போது வேறு பாடசாலைக்கு இடமாற்றப்பட வேண்டியது கட்டாயமானது. இந்த விடயம் தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர்கள் விரைந்து செயற்பட வேண்டும்.

* இந்த இடமாற்றங்கள் தொடர்பாக மாகாணத் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்காக வலயக் கல்விப் பணிப்பாளர்கள் காத்திருக்க தேவையில்லை என மாகாணக் கல்விப் பணிப்பாளர் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

* வலய மட்ட இடமாற்ற சபைகளில் மாகாண கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் பிரசன்னமாக இருக்க இந்த முறை விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சீரான இடமாற்றத்துக்கு இது உதவும் என்று எமது சங்கம் கேட்டதற்கு இணங்கவே இந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது.

* மேன்முறையீட்டு விண்ணப்பங்கள் மாகாண திணைக்கள மேற்பார்வையின் கீழ் இந்த முறை பரிசீலிக்கப்படவுள்ளன.

* ஆசிரியர்கள் விரும்பும் சந்தர்ப்பத்தில் மேலதிக விண்ணப்பப் படிவம் ஒன்றை 'மேலதிக பிரதி' எனத் தலைப்பிட்டு மாகாணக் கல்விப் பணிப்பாளருக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் சில ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் உரிய அதிகாரிகளின் பரிசீலனைக்கு அனுப்பப்படாததன் விளைவாகவே இந்த நடைமுறை ஆகும்.

இந்த சந்திப்பின்போது 2012 ஆம் ஆண்டுக்கான யாழ். மாவட்டத்திலிருந்து வன்னிப் பிரதேச பாடசாலைகளுக்கான பதிலீட்டு ஆசிரியர் இடமாற்றம் மற்றும் வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாகவே கலந்துரையாடி முடிவு எடுக்கப்பட்டது.

இதில் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர் - என்றுள்ளது.

(த-14)

### தட்டுப்பாட்டை நீக்குவதற்கு

## பாகிஸ்தானில் இருந்து வருகிறது சிமெந்து

கொழும்பு, ஓக. 7

பாகிஸ்தானிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ள ஒரு இலட்சம் 'கோ°ப்' சிமெந்துப் பைக்கற்றுகள் நாளை திங்கட்கிழமை இலங்கையை வந்தடையவுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

தற்போது சந்தையில் நிலவும் சிமெந்துத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கும், நுகர்வோரைப் பாதுகாப்பதற்கும் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமெனவும் பாகிஸ்தானில் இருந்து கொள்வனவு செய்யப்படும் முதல் தொகுதி சிமெந்து இது எனவும் அமைச்சர் மேலும் கூறினார்.

எதிர்காலத்தில் கூட்டப்பொருள் கூட்டுத்தாபனத்தினாலும் சிமெந்து இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படவுள்ளதால் சிமெந்து தட்டுப்பாடு ஏற்படுவதற்கு எவ்வித வாய்ப்பும் இல்லை எனவும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

சிமெந்தைப் பதுக்கி வைத்துள்ள வர்த்தகர்கள் கைது செய்யப்படுவார்கள் அவ்வாறானவர்களைக் கைது செய்யும் சுற்றிவளைப்புக்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதால் பதுக்கி வைத்துள்ளவர்கள் உடன் அவற்றைச் சந்தைக்கு விடுமாறும் அமைச்சர் அறிவித்துள்ளார்.

(த-22)



யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் அகில இலங்கை சைவ மாநாடு நேற்றுமுன்தினம் நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் ஆரம்பமானது. இதில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்ட சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் நல்லூர் சா.சரவணன், சைவ பரிபாலனசபையின் தலைவர் த.சண்முகலிங்கன் உட்பட முக்கிய விருந்தினர்கள் அமர்ந்திருக்கின்றனர். (த-319)

## 35 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

தென்மராட்சி, ஓக. 7

ஜேர்மன் தொழில்நுட்ப வலய நிறுவனத்தின் அங்கமான ஜீ.ஐ.ஸற் பிரிவினர் யாழ். மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் பெண்களைக் குடும்பத் தலைவியாகக் கொண்ட குடும்பங்கள் மற்றும் ஊனமுற்றோர் 35 பேருக்கு வாழ்வாதார உதவிகளை அண்மையில் வழங்கியுள்ளனர்.

மீளக்குடியமர்ந்த பிரதேசங்களில் உள்ள சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக சங்க அங்கத்தவர்களுக்கு கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, சிறு வியாபாரம், பாய் அடித்தல், விவசாயம், தையல் போன்றவற்றுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் வாழ்வாதார உதவி பெற்றவர்களை அம்பாந்தோட்டை பகுதிக்கு அழைத்துச் சென்று அங்கு உதவிகள் பெற்றவர்களின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக செயலமர்வினையும் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-207)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு தனியான பிரதிப் பொலிஸ்மா அதிபர்

கொழும்பு, ஓக. 7

**நாட்டில் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகளின் தொடர்பாடலுக்கென பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவிவிஜேகுணவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.**

டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல், நுளம்புகள் பெருகுவதற்கு இடமளிக்கும் நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தல் ஆகியவற்றுக்காகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலொன்றின்போதே இந்த நியமனம் வழங்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.ஹெட்டியராய்ச்சி, சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பான டாக்டர் ஹசித்த திசேரா மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

உள்ளூராட்சி நிறுவனங்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸ் சுற்றாடல் பிரிவுகளை ஒருங்கிணைத்து டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்தல், நுளம்புகள் பெருகுவதற்கு இடமளிக்கும் இடங்களைச் சுற்றி வளைப்புக்கள் மூலம் கண்டறிந்து அவ்வாறான சுற்றாடலைப் பேணி வருவோருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்தல், கண்காணிப்புப் பணிகளைச் செய்தல் என்பன பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களுள் அடங்குவதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

(த-22)

## இளைஞர் சேவை மன்ற அலகு அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஓக. 7

வலி.தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நவாலி வடக்கு நவாலி தெற்கு பிரதேசத்துக்கான "தேசிய இளைஞர் சேவை மன்ற உப அலகுகள்" அங்குரார்ப்பண நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும்.

நவாலி வடக்கு கிராம அலுவலர் அ.தனபாலரத்தினம் தலைமையில் புலவர் முகாம் மண்டபத்திலும், நவாலி தெற்கு கிராம அலுவலர் கு.எழில்செல்வன் தலைமையில் நவாலி தெற்கு கிராம அலுவலர் இல்லத்திலும் இடம்பெறும்.

(த-302)

# நிகழ்வுகள்

### கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம், ஓக 7

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையின் பழைய மாணவர் பேராசிரியர் மா.கருணாநிதியின் கௌரவிப்பு விழா இன்று மாலை 4:30 மணிக்கு அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையின் அதிபர் தலைமையில் இடம்பெறும்.

இதில் பாராட்டுரைகளை யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் அநாதரட்சகன், கொழும்பு பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளர் மா.சிவபாதம், பொதுத் திறைசேரியின் உதவிப் பணிப்பாளர் க.கமலேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களாகிய கலாநிதி திருமதி ஜெயலக்சுமி இராஜநாயகம், ரூபவாஹினிக்' கூட்டுத்தாபன முன்னாள் பணிப்பாளர் எஸ்.வன்னியகுலம், யாழ். பல்கலைக் கழக பொருளியல் துறைத்தலைவர் பேராசிரியர் வி.பி.சிவநாதன், பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் வழங்குவர்.

(ஓ-319)

### கல்விமாணி விரிவுரை

யாழ்ப்பாணம், ஓக 7

கல்விமாணி 2ஆம் வருட மாணவர்களின் கற்கை நெறி வகுப்புக்கள் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய பிராந்திய நிலையத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு இணைப்பாளர் சி.தயாபரன் தெரிவித்துள்ளார்.

(ஓ-311)

### ஆசிரியர் செயலமர்வு

பருத்தித்துறை, ஓக 7

வடமராட்சி கல்வி வலயம் நூலகத்தினூடாக வாசிப்புத் திறனை மேம்படுத்தல் தொடர்பான செயலமர்வு ஒன்றை நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை புலோலி மெ.மி.த. பாடசாலையில் நடத்தவுள்ளது.

இந்தச் செயலமர்வுக்கு ஆரம்பக்கல்வி ஆசிரியர் இருவரை அனுப்பி வைக்குமாறு வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார்.

(ம-190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குகநாதன் மீதான கொலைவெறித் தாக்குதல் ஜனநாயகத்தின் குரல்வளையை நசுக்கும் செயல்

## வைகோ கடும் கண்டனம்

யாழ்ப்பாணத்தில் 'உதயன்' பத்திரிகையின் ஆசிரியர் ஞானசுந்தரம் குகநாதன் மீது சிங்கள அரசு குண்டர்களை ஏவி கொலை வெறித் தாக்குதல் நடத்தியது ஜனநாயகத்தின் குரல்வளையை நசுக்கும் கொடுஞ்செயல் என ம.தி.மு.க.பொதுச்செயலாளர் வை.கோபாலசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

பல ஆண்டுகளாக ஈழத்தமிழர் நலனுக்காகவும், ஜனநாயக உரிமைகளுக்காகவும், எந்த அடக்குமுறைக்கும் அஞ்சாமல், கருத்துக்களை வெளியிட்டு வரும் உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் குகநாதன், பத்திரிகை அலுவலகத்தில் இருந்து வீடு திரும்பும் வழியில் கடுமையாகத் தாக்கப்பட்டு பலத்த காயங்களோடு யாழ்ப்பாணம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உள்ளார். அவரைக் கொல்ல வேண்டும் என்ற நோக்கிலேயே ஆயுதங்களைக் கொண்டு தாக்கி உள்ளனர்.

சிங்கள அரசின் அராஜகத்தை வெளிப்படுத்தி, விமர்சித்து எழுதியதாலும் உதயன் செய்தி ஆசிரியர் தாக்கப்பட்டு இருக்கிறார். கடந்த சில ஆண்டுகளாகவே ஞானசுந்தரம் குகநாதனின் உயிருக்கு ஆபத்து இருந்து வந்துள்ளது. தற்போது கொலை வெறித் தாக்குதலில், சிகிச்சையில் அவர் உயிர் பிழைத்து வந்தாலும் எந்த நேரமும் அவரது உயிருக்கு ஆபத்து நேரக்கூடும்.

அண்மையில் நடந்த உள்ளூராட்சிச் சபைத்தேர்தலில், தமிழர் பகுதிகளில் ராஜபக்ஷ அணி தோற்கடிக்கப்பட்டதாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றதாலும் இலங்கை ஜனாதிபதிக்கும் அவரது கூட்டாளிகளுக்கும் ஏற்பட்டுள்ள ஆத்திரத்தின் விளைவுதான் இந்தத் தாக்குதல்.

பத்திரிகைச் சுதந்திரத்தை, ஒழிக்கின்ற வேலையில் இலங்கை அரசு தொடர்ந்து ஈடுபட்டுவருகின்றது. 'சண்டே லீடர்' ஆசிரியர் லசிந்த விக்கிரமசிங்க, ஊடகவியலாளர் தராக்கி சிவராம் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டனர்.

ராஜபக்ஷவின் காட்டு ஆட்சியில் உள்நாட்டுப் பத்திரிகைகளுக்கு சுதந்திரம் இல்லை. வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படுவதேயில்லை. உதயன் செய்தி ஆசிரியர் தாக்கப்பட்டதன் மூலம் ராஜபக்ஷ அரசின் கோரமுகம், மீண்டும் வெளிப்பட்டு உள்ளது.

உலகெங்கும் பத்திரிகைச் சுதந்திரத்தையும் மனித உரிமைகளையும் காக்க விரும்புவோர் அனைவரும், சிங்கள அரசின் அராஜகத்துக்கும், சிங்கள இனவாதக் குண்டர்களின் வன்முறை களுக்கும் எதிராகப் பலத்த கண்டனம் எழுப்ப வேண்டும் - என்றுள்ளது.

# இந்து குருமார் ஒன்றியம் கண்டனம்

மூத்த பத்திரிகையாளர் ஞா.குகநாதன் இனம் தெரியாதோரால் தாக்கப்பட்டமை மிகுந்த வேதனை அளிக்கின்றது. ஜனநாயக சூழலுக்கு விரோதமான செயலாக நடந்துள்ளது. எமது கருத்துக்களை சுதந்திரமாக கூற முடியாத சூழல் உருவாகியுள்ளது. இத்தகைய சூழல் தொடரா வண்ணம் இருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். குகநாதன் அவர்கள் மிக விரைவில் சுகமடைந்து தனது பணிகளை ஆற்ற இறைவனை வேண்டி பிரார்த்திக்கிறோம்- என்று சர்வதேச இந்துமத குரு மார் ஒன்றியம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# ஊடக சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்ட பெரும் அச்சுறுத்தலான தாக்குதல்

## காரைதீவு பிரதே சபை உறுப்பினர்

''சிரேஷ்ட ஊடகவியலாளரும், உதயன் நாளிதழின் செய்தி ஆசிரியருமான ஞா.குகநாதன் மீதான மிலேச்சத்தன தாக்குதல் ஊடக சுதந்திரத்திற்கு விடுக்கப்பட்டுள்ள பெரும் அச்சுறுத்தலாகும்''

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தரும், காரைதீவு பிரதேச சபைத் தேர்தலில் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டு முதன்மை விருப்பு வாக்குகளுடன் தெரிவாகியுள்ளவருமான செல்லையா இராசையா விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் அறிக்கையில் மேலும் பின் வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''ஜனநாயகமும், ஊடகசுதந்திரமும் நாட்டில் பேணப்பட்டுவருவதாக உரத்துக் கூறப்படுகின்ற போதிலும், இந்த நாட்டில் ஊடக சுதந்திரம் அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

இதுவரை எத்தனையோ ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டும், அச்சுறுத்தலுக்குள்ளாகியும், கொலைசெய்யப்பட்டும் வருகின்றபோதும், அதன் சூத்திரதாரிகள் எவரும் கண்டுபிடிக்கப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்பட்டதாக அறியவில்லை.

இந்த நிலையில்தான் யாழ்.மண்ணில் உதயன் செய்தியாசிரியரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான குகநாதன் மீதான காட்டுமிராண்டித்தனமான தாக்குதலும் இடம்பெற்றுள்ளது.

மனிதநேயமிக்க, ஊட கஜனநாயகத்தை விரும்பும் எவரும் இந்தக் கொடூர சம்பவத்தை ஜீரணிக்க முடியாத நிலையிலேயேயுள்ளனர்.

ஊடகங்கள் நடுநிலையில் நின்று செய்திகளை வெளியிடுவது, சமூகத்தைக் காட்டிக்கொடுக்கும் சுயநலக் கும்பல்களுக்குச் சிம்ம சொப்பனமாகவே இருக்கும்.

அவ்வாறான ஒரு வெளிப்பாட்டின் எதிரொலிதான் குகநாதன் மீதான தாக்குதலாகக் கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இத்தகைய நிலைமை குறிப்பாக உதயன் நிறவனத்தின் மீதும், அதன் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்கதைபோல் இடம்பெற்ற வண்ணமேயுள்ளன. ஆனால் அரசு உருப்படியான நீதி நடவடிக்கைகளை முன்னெடுத்து சூத்திரதாரிகளை நீதியின் முன் நிறுத்துவதாக இல்லை.

இத்தகைய கொடூரக் கும்பலின் அடாவடித்தனம் தொடர்ந்தவண்ணமேயுள்ளமை கவலை தரும் விடயமாகும்.

எனவே ஊடகவியலாளர்களுக்கு உரிய பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசு முன்வரவேண்டும். குகநாதன் மீதான தாக்குதல் சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்த பாதுகாப்புத் தரப்பு இன்னும் தாமதம் காட்டக் கூடாது-இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (30)

# ஊடகச் சுதந்திரம் என்பது வெறும் வாய்ச்சொல்லில் மட்டும்தானா?

## வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர்

உதயன் பத்திரிகையின் மூத்த செய்தி ஆசிரியர் காடையர்களின் பலத்த தாக்குதலுக்குள்ளாகிய செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தவர்களுள் நானும் ஒருவர். மிலேச்சத்தனமான இந்தத் தாக்குதலை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இவ்வாறு வலி.மேற்குப் பிரதேச சபைச் உறுப்பினர் திருமதி நா.ஐங்கரன் விடுத்துள்ள கண்டனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

ஜனநாயகத்தை, ஜனநாயக வழியிலே அன்றிலிருந்து இன்று வரை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகின்ற உதயன் பத்திரிகை நிறுவனத்தின் ஊடகப் பணியை இவ்வாறான செயற்பாட்டினால் ஓர் முடிவுக்குக் கொண்டு வரலாம் என்ற நிலைப்பாட்டில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை யாவரும் அறிந்திருப்பர்.

இந்தப் பத்திரிக்கை நிறுவனம் கடந்த காலங்களில் தனது ஊடகப் பணிக்காகப் பல உயிர்களைக் காவு கொடுத்துள்ளனர். இந்தச் செயற்பாடுகள் உதயன் நிறு வனத்துக்கு எதிராகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந்தத் தாக்குதலை மேற்கொண்டவர்கள் இனங்காணப்பட வேண்டும். சட்டத்தின் முன் நிறுத் தப்பட வேண்டும். தண்டிக் கப்பட வேண்டும். ஆனால் இது நடக்குமா என்பது கேள்விக் குறி. தண்டிக்கப்படாவிட்டால் இவர்களின் இந்தச் செயற்பாடு மீண்டும் மீண்டும் நடை பெற ஏதுவாகும். ஊடகவியலாளர் களுக்கு ஏற்பட்டுள்ள அச்ச நிலையை ஓர் முடிவுக்கு கொண்டுவரவும், சுதந்திரமான ஊடகத்துறையை உருவாக்குவதற்கும் இவர்கள் தண்டிக்கப் பட வேண்டியவர்கள்.

இந்தத் தாக்குதலால் துன்புற்றிருக்கும் ஆசிரியர் குகநாதன் அவர்களுக்கும், அவரின் குடும்பத்துக்கும் ஆசி வேண்டியும், ஆசிரியர் நலமாகி மீண்டும் பணியைத் தொடரவும், இவ்வாறான சம்பவங்கள் இனி மேலாவது இடம் பெறாமல் இருப்பதற்கும் வலிகாமம் மேற்கு மக்களின் சார்பாக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் - என்றுள்ளது.

# செய்தி ஆசிரியரைத் தாக்கியவர்கள் சட்டத்தின்முன் நிறுத்தப்பட வேண்டும்

பத்திரிகை வரலாற்றில் ஊடக நெறிக் கோவைக்கு இணங்கச் செய்தியாளராக வலம் வந்த குகநாதன் தனது ஆற்றல் மேம்பாட்டினால் உதயன் செய்தி ஆசிரியராக வளர்ந்து தேசியத்தின் வளர்ச்சிக்காக உழைத்தவர். இவரது எழுத்தாற்றல் அவரது சிந்தனை என்பன தமிழ் தேசியத்துக்கு வித்திட்ட வண்ணமே இருந்தன.

குகநாதனின் எழுத்தாற்றலை விரும்பாத ஒரு பிரிவினரே மிலேச்சத்தனமாகத் தாக்கியுள்ளனர்.

இவ்வாறு மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளன தலைவரும் மத்தியஸ்த சபை சிரேஷ்ட உறுப்பினருமான க.முதலியார் தெரிவித்துள்ளார். உதயன் செய்தி ஆசிரியர் மீதான தாக்குதல் குறித்து வெளியிட்ட கண்டனத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

குடாநாட்டிலும் சரி, ஏனைய மாவட்டங்களிலும் சரி குகநாதனைத் தெரியாத அலுவலர் கிடையாது. அந்தளவுக்கு சமூகத்தோடும் ஏனைய அரச மற்றும் பொது நிறுவனங்களோடும் நெருங்கிய தொடர்பு பட்டவர்.

செய்தியை மக்கள் புரியும் வகையாக வழங்கி வந்த குகநாதன் உதயனின் சிரேஷ்ட செய்தி ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்றுவலம் வந்தவர். குகநாதன் மீதான தாக்குதலை நடத்தியவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் என்பது எல்லோரதும் கவலையாக உள்ளது - என்றுள்ளது. (ம-30)

# குகநாதன் மீதான தாக்குதல் ஜனநாயகத்துக்கு விழுந்த பேரடி

## வலி.வடக்குப் பிரதேச சபை உறுப்பினர் ஹரிகரன்

உதயன் செய்தி ஆசிரியர் ஞானசுந்தரம் குகநாதன் தாக்கப்பட்டமை கருத்துச் சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்கும் விழுந்த பேரடியாகும். இவற்றுக்கு உடன் முடிவு கட்ட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் காங்கேசன்துறைக் கிளையின் இணைச் செயலாளருமாகிய சி.ஹரிகரன்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது நாட்டைப் பொறுத்த வரையில் ஜனநாயகம், கருத்துச் சுதந்திரம் என்பன வெறுமனே பேச்சளவில் - சொல்லளவில் - மட்டுமே காணப்படுகின்றன. அவை மறைக்கப்பட்டுப் பல தசாப்த காலங்கள் ஆகிவிட்டன. இற்றைக்கு 20 வருடங்களுக்கு முன்பிருந்து கூட யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரையில் ஊடகத் துறை என்பது மிகவும் அடக்கப்பட்ட துறையாகவே காணப்படுகின்றது.

நாட்டில் இடம்பெறுகின்ற அராஜகங்களை - அடக்குமுறைகளை -அக்கிரமங்களை - படம் பிடித்துக் காட்டுகின்ற ஊடகவியலாளர்களும் தாக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றார்கள்.

அந்த வரிசையில் துணிச்சலோடு தமிழ் பேசும் மக்களுக்கு இடம்பெறுகின்ற அக்கிரமங்களை - தட்டிக்கேட்ட - கேட்கின்ற - உதயன் பலமுறை தாக்கப்பட்டுள்ளான். 2000ஆம் ஆண்டு 'சீல்' வைக்கப்பட்டான். அவனது பணியாளர்களான சுரேஸ்குமார், ரஞ்சித்குமார், பாஸ்கரன், ரஜிவர்மன் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

எமது கட்சி தேர்தலில் பெரு வெற்றியீட்டியுள்ளது. தேர்தல் காலத்தில் எமக்கு நடைபெற்ற வன்முறைகள் அனைத்தையும் உதயன் துணிச்சலோடு மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் எடுத்துக் கூறியுள்ளான். எமது இந்த வெற்றியை ஜீரணிக்க முடியாத - உதயனின் நடுநிலை தவறா கருத்துச் சுதந்திரத்தைப் பொறுக்க முடியாத சில தீய சக்திகள் இவ்வாறான ஒரு செயற்பாட்டை மேற்கொண்டுள்ளன.

தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் அக்கிரமங்கள், அடாவடித்தனங்கள் என்பவற்றை உலகுக்குப் படம் பிடித்துக் காட்ட அவர் தயங்கவில்லை.

இவற்றுக்கு உடன் முடிவு கட்ட வேண்டும். அனைத்துத் தரப்பினரும் ஒன்றுசேர்ந்து இவ்வாறான ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதன் மூலம் இவற்றுக்கு முடிவு கட்ட வேண்டும் - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானைக்கு உணவு அனுப்பிய ஜனாதிபதி

ஆசியாவிலேயே நீளமான தந்தங்களையுடைய கொம்பன் யானை எனக் கருதப்பட்ட ''மில்லன் கொட ராஜா'' என்று அழைக்கப்பட்ட யானை கடந்த மூன்றாம் திகதி உயிர் நீத்தது.

அதன் பற்கள் தேய்ந்து போனதன் காரணமாக உணவை உண்ண இயலாத நிலையில் மில்லன் கொட ராஜா சுகயீன முற்றிருந்தது.

அது சுகப்படுத்துவதற்காக தலைமை பௌத்த குருமாரை வரவழைத்து பௌத்தமத ''பிரித்'' பாராயணம் செய்வித்து யாகங்களையும் நடத்துவதற்கான ஒழுங்குகளையும் அதன் உரிமையாளரான எஸ்.ஆர்.ஏ. மில்லன் கொட மேற்கொண்டிருந்தார்.

இறக்கும் போது 72 வயதைக் கடந்திருந்த 'ராஜா'வின் சுகநலம் பற்றி அக்கறை செலுத்திய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போஷாக்கு மிக்க உணவுத் தொகைகள் மற்றும் மருந்துவகைகளையும் வழங்கி வனப் பாதுகாப்பு அமைச்சரான எஸ்.எம்.சந்திரசேனவை மொல கொடையிலுள்ள மில்லன் கொடைவின் இல்லத்துக்கு அனுப்பி வைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-22)


## கண்ணீர் அஞ்சலி

மன்ற உறுப்பினர் கு. பிரணவராசா
(பிரணவன் இன்டஸ்ரீஸ், சாவகச்சேரி)
அவர்களின் பாசமிகு தந்தையார்
**அமரர் தாமோதரம்பிள்ளை குணரத்தினம்**
அவர்கள் (05.08.2011) இல் காலமானார்.
இவரின் மறைவுக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.
சாவகச்சேரி தொழில் வணிகர் மன்றம்

## மரண அறிவித்தல்கள்

### D.C. பரமானந்தம்



கல்வியங்காடு செங்குந்தா வீதியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட டேவிற் கந்தையா பரமானந்தம் (05.08.2011) வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான நொத்தாரிஸ் டானியல் கந்தையா-செல்லம்மா (முன்னாள் அதிபர், காசிப்பிள்ளை வித்தியாலயம்) தம்பதியரின் மகனும், கிறிஸ்ரி கந்தையா (பூண்டுலோயா), காலஞ்சென்றவர்களான பெல்லா, சீவகிரீடம் மற்றும் வைத்திய கலாநிதி சாள்ஸ் விவேகானந்தன் (U.K), காலஞ்சென்ற கலாநிதி எஸ்.சி. அருளானந்தம் மற்றும் சத்தியதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சிறிதேவி, சின்னத்துரை மற்றும் பொன்மலர், கிறேஸ் (U.K), தவமலர் (கனடா), டானியல் பாக்கியநாதன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (09.08.2011) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

36, மார்ட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.
(6594)
தகவல்:
திருமதி ஜோதி குலநாயகம்
(மருமகள்)

### நவரட்ணம் நாகேஸ்வரி



அளவெட்டி, அலுக்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட நவரட்ணம் நாகேஸ்வரி (05.08.2011) வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற நவரட்ணத்தின் அன்பு மனைவியும் நேசரத்தினம், இராசேந்திரம், இராஜேஸ்வரி, கனகரட்ணம் காலஞ்சென்ற நகுலேஸ்வரன் மற்றும் நகுலேஸ்வரி, வசந்தகுமாரி, சறோஜினி ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 9 மணிக்கு மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அலுக்கை கிழக்கு,
அளவெட்டி.
(6581)
தகவல்:
குடும்பத்தினர்.

### இராமநாதன் பேரின்பராசா

காரைநகர், இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமநாதன் பேரின்பராசா (27.07.2011) அன்று லண்டனில் காலமானார். அன்னார் இராமநாதன் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் சுகந்தன் (பிரான்ஸ்), சசிக்குமார் (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவசுப்பிரமணியம் (U.K) பத்மநாதன் (U.K) செல்வராணி(U.K) புஸ்பராணி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.08.2011) ஞாயிற்றுக்கிழமை **Hendon Crematorium or Golders Green Cermatorium, U.K** இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இடைப்பிட்டி, காரைநகர்.
தகவல்:
மனைவி, மக்கள்.

## House for sale

வண்ணார் பண்ணையில் பொன்னப்பா லேனில் வீடு விற்பனைக்கு உண்டு.
உடன் தொடர்பு: 0778241799.
முக்கியமாகத் தரகர் தேவையில்லை.

## காணி விற்பனைக்கு

கோப்பாயில் இராச வீதியில் கல்வியியல் கல்லூரிக்கு அருகாமையில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0771936594, 0771710787

## காணி விற்பனைக்கு

சங்குவேலியில் வீட்டுடன் 7½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. காணியில் வருமானம் தரக்கூடிய மரங்களும் உண்டு.
தொடர்பு:077 2543113, 075 9543113

## Spoken English & Grammar

(வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்)
By: Mr.B.Ruban (A/L Eng. Teacher &BBA)
More Details: 077 9785749

## பிரத்தியேக வகுப்புகள்

கணிதம் (MATHEMATICS)
தமிழ்மொழி மூலம் / ஆங்கில மொழி மூலம் } 06 முதல் O/L வரை
O/L Day Class (துரித மீட்டல்) தொ.பே: 077 6253876

## வாழ்வின் சகல சௌபாக்கியங்களும் தரும்

### சோ.கூ.றே.மணிமேர்க்கஸ் பெட்டகம்

கடன்தொல்லை, கல்வியில் முன்னேற்றமின்மை, வேலையின்மையும் பணக்கஷ்டமும், திருமணத் தடை, கொடிய நோய்களின் அவஸ்தை போன்ற வாழ்வின் மிக முக்கிய 5 பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு.

**மனை, கடை, மற்றும் சகல வியாபார ஸ்தாபனங்களிலும் வைக்க உன்னத பலன் கிடைக்கும்.**

விலை ரூபா 5100.00 மட்டும்.

எம்மிடம் ஓடர்செய்து பெற்றுக்கொண்டவர்களில் சிலர் பயன்படுத்த ஆரம்பித்து சில தினங்களுக்குள் சிற்சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தொலைபேசி மூலம் சான்று கூறுகின்றனர்.

உங்கள் இருப்பிடங்களுக்குத் தருவிப்பதற்கு அழையுங்கள்.
077 1399950.

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், குருநகர்ப் பிரதேசத்தில் (பெரிய கோயில், புனித பத்திரிசியார் கல்லூரிக்கும்) அண்மையில் அமைந்துள்ள மலசலகூடம், கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 785, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 4042255
தொடர்புகொள்ளும் நேரம்:
(மு.ப. 10.00 - பி.ப. 4.00)

## Car For Sale

Nissan TIIDA, Doctor used, 2007/12,F/O, Auto low milage, AMW warranty period,Brand New, Excellent Condition.
T.P- 0777315473

## காணி விற்பனைக்கு

குளப்பிட்டி- ஆனைக்கோட்டை பஸ் போக்குவரத்து வீதியில் உயரப்புலம் பிள்ளையார் கோயிலுக்கும் சனசமூக நிலையத்துக்கும் நடுவில் J.P கணேசவேல் வீட்டுக்கு முன்பாக 5½பரப்பு வெற்றுக் காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. பிரித்தும் கொடுக்கலாம்.
தொடர்பு: 0775116194, 2598664

## மணமகள் தேவை

யாழ்.கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த றோமன் கத்தோலிக்க, உயரம் 5' 6'', 29 வயதுடைய M.B.B.S. டாக்டருக்கு படித்த மணப்பெண் தேவை.
தொடர்பு: 021 3210788

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.
(6293)



## Canadian Hairdressing Academy & Salon

For internationally Recognised Qualification
Highly Recognised for Immediate Foreign Employment and Higher Education Opportunities In "CANADA, USA, UK"

பயிற்சிகள்
- Canadian Certificate
- City & Guilds
- N.V.Q. Level IV
- Canadian Salon Diploma
- Advanced Hair Cutting
- Nail Art, Professional,
- Nail Technicians
- Crash Courses

வகுப்புகள் கிழமை நாட்களிலும் விடுமுறை நாட்களிலும்

Canadian Salon & Academy
தொடர்பு 077 - 93 95 356

Payments can be done in installments
salon will be opened daily for registered students to practice

## 45 ஆம் நாள் அஞ்சலி

24.06.2011 அன்று காலமான எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்
அமரர் **விசுவநாதன் மாணிக்கவாசகர்**
அவர்களின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.
ஆசிரியர் கழகம்,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

## எப்பொழுதும் ஆரோக்கியமாகவும், ஆனந்தமாகவும் வாழ வாழும் கலைப்பயிற்சி

The Art of Living



மூச்சுப்பயிற்சி,
பிராணாயாமம்,
சுதர்சனகிரியா, யோகாசனம்
மற்றும் தியானம்.

இடம் : 132 பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
திகதி : 08.08.2011 திங்கட்கிழமை (நாளை)
நேரம் : பிற்பகல் 5 மணி (அறிமுக உரை)

**அனைவரும் வருக பயன் பெறுக.**

தொடர்பு: 0777740593
0770474757

## பதவி வெற்றிடங்கள்

கொழும்பில் பிரபல்யம் வாய்ந்த
**Swedish Trading Company(Pvt)Ltd.** (Viking House, 191, Galle Road, Mount Lavenia) இல்

**மருத்துவப் பிரதிநிதி பதவிக்கான வெற்றிடம்**

**தகைமை:**
G.C.E. (A/L) க.பொ.த(உ/த) த்தில் விஞ்ஞானப் பாடத்தில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
ஆங்கில அறிவு மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

*தகைமை உடையவர்கள் 10.08.2011 புதன்கிழமை மு.ப.10 மணிக்கு கீழ்வரும் முகவரிக்கு உங்களது கல்வித்தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் சமுகம்அளிக்கவும்.*

Vanikaa Medicals
203,Hospital Road,
Jaffna.
(C/2454)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு

வடபகுதியை - யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களையும் - சேர்ந்த சுமார் 6,000க்கும் அதிகமான வேலையற்ற பட்டதாரிகள் இப்போது உள்ளனர் என்பது புள்ளி விவரம். முதற்படியாக, அவர்களில் 272 பேருக்கு வடக்கு மாகாண சபையில் நியமனம் வழங்கப்படவுள்ளது. அதன் பொருட்டு நடத்தப்பட்ட திறன் அறியும் போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் 377 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர். நேற்றும், நேற்றுமுன்தினமும் (5ஆம் 6ஆம் திகதிகளில்) நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டன.

பட்டதாரிகளுக்கான அரசதுறை நியமனம் 2009 ஆம் ஆண்டு வரை மாகாண மட்டத்தில் அன்றி தேசிய ரீதியாகவே வழங்கப்பட்டது. அந்த வகையில் 1999 ஆம் ஆண்டில் பத்தாயிரம் பட்டதாரிகளுக்கும், 2005 ஆம் ஆண்டில் நாற்பதாயிரம் பட்டதாரிகளுக்கும் வேலை வாய்ப்புகள் தேசிய மட்டத்தில் வழங்கப்பட்டன.

ஆனால் இந்த வருடத்தில் புதிய நடைமுறை ஒன்று அறிமுகப் படுத்தப் படுகிறது. மாகாண மட்டத்தில் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படுகிறது. அதுவும் புதிதாக, அரசு வடக்கில் இந்த முறையை நடைமுறைப்படுத்துகிறது. அரசாங்கத்தின் வடக்கின் வசந்தம் எழுச்சித் திட்டத்தின் பொருட்டே இந்த விசேட ஏற்பாடு என்று சொல்லப்படுகிறது.

வடக்கில் சுமார் ஆயிரம் பட்டதாரிகள் தொழில் இன்றிக் கஷ்டப்பட, அவர்களில் 272 பேருக்கு மட்டும் வேலை வாய்ப்பு வழங்குவது என்பது வடக்கின் வசந்தத்துக்குரிய விசேட ஏற்பாடா அல்லது இது மேலும் பலருக்கும் தொழில் வாய்ப்புக்கு வகை செய்யுமா என்ற ஆதங்கம் வேலை வாய்பற்றோரிடையே ஏற்பட்டுள்ளது. அது இயல்பானதும்கூட.

அரசாங்கத்தின் 'கிழக்கின் உதயம்' விசேட அபிவிருத்தித் திட்டத்துக்குக் கூட, மாகாண மட்டத்தில் பட்டதாரிகள் பணிக்கு அமர்த்தப்படவில்லை. அவ்வாறிருக்க வடக்கின் வசந்தத்தில் அதீத அக்கறை கொண்டு, அரசு 272 பட்டதாரிகளுக்கு மட்டும் வேலை வாய்ப்பு வழங்கி, எஞ்சியவர்களைக் கைவிட்டு விடுமா என்ற பதில் இல்லாத வினா எமது பிரதேசப் பட்டதாரிகளிடம் பூதாகரமாக எழுந்து அவர்களின் ஆன்மாவைக் குலுக்குகிறது.

272 பேருக்கான நியமனத்துடன் வடக்கின் வசந்தத்தின் பட்டதாரிகள் விசேட வேலைவாய்ப்பு முறை கைவிடப்பட்டுத் தமது நிலை 'அம்போ' ஆகிவிடுமா என்றும் அவர்கள் குலை நடுங்குகிறார்கள்! மொத்தத்தில் இது அரசின் ஒரு கண்துடைப்பு நடவடிக்கையா என்ற கிலேசமும் அச்சமும் வடக்கின் வேலையற்ற பட்டதாரிகள் மத்தியில் மலைபோல் எழுந்துள்ளன!

இதற்கிடையில், வடமாகாணத்தைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்கென வடமாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு நடத்திய போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் எல்லோரையும் திணுக்குறவும் அதேவேளை கவலைகொள்ளவும் வைத்துள்ளன!

வடமாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு நடத்திய போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டதாரிகளில், எழுபது சதவீதமானோர் 40 புள்ளிகளைத் தானும் பெற்றுப் பரீட்சையில் சித்தியடையத் தவறிவிட்டார்கள் என்ற தகவல் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களை மட்டுமன்றி, அவர்களின் பெற்றோர்களை மட்டுமின்றிச் சமூக நலன் விரும்பிகளையும் மனச்சோர்வுற வைத்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் பொது அறிவு, நுண்ணறிவு என்பவற்றில் மிகவும் மந்த நிலையில் இருப்பதை அவர்களின் விடைத் தாள்கள் புலப்படுத்துகின்றன என்று மனம் வருந்தினார் உயர் அதிகாரி ஒருவர். பரீட்சைக்குத் தோற்றிய சுமார் 5,000 பட்டதாரிகளில் சுமார் 3,500 பேர் அடிப் படைத் தகைமையான நாற்பது புள்ளிகளைக்கூடப் பெறவில்லை என்று அவர்களின் எதிர்காலம் குறித்து வேதனையும் பச்சாதாபமும் கொண்டார் அவர்.

இத்தகைய நிலைக்குத் தனியனே பட்டதாரிகளிடம் மட்டும் குறைகாண முடியாது. பல்கலைக்கழகக் கல்வி முறையும், பல்கலைக் கழக ஆசான்களும் பட்டதாரிகளின் இந்தப் பரிதாப நிலைக்கு காரணிகள் என்பது தவறன்று. பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கான பாடவிதானத்துடன் மட்டுமன்றி பல்வேறு விடயங்கள் சார்ந்த அறிவுசார் தேடல்களுக்குப் பட்டதாரி மாணவர்களுக்குத் தூண்டுகோலாகச் செயலாற்ற வேண்டியவர்கள், வலுவூட்டிகளாக விளங்க வேண்டியவர்கள் பல்கலைக்கழக ஆசான்களே.

மகன் அல்லது மகள் பட்டப்படிப்பு மேற்கொள்கிறார், அவரின் படிப்பில் பாடசாலை காலம் போன்று நாம் தலையிடக்கூடாது என்று பெற்றோர்களும் ஒதுங்கிவிடலாகாது. மூன்று வருட அல்லது நான்கு வருடக் கல்வி முடிந்ததும் அவர் மதிப்புக்குரிய, பெறுமதியான பட்டத்துக்குரியவராகப் போகிறார், அவரது படிப்பு விடயத்தில் சீண்டக்கூடாது என்ற எண்ணத்துடன் பெற்றோர்களில் மிகக் கூடுதல் வீதத்தினர் ஒதுங்கிக் கொள்கிறார்கள்.

அதுபோன்றே, பல்கலைக்கழக ஆசிரியர்கள் பலரும் பாட விதானத்துக்குள்ளேயே தமது விரிவுரைகளை நடத்துகிறார்கள். மாறிவரும் உலக நடப்புகளுக்கு இசைவான அறிவு சார் தேடல்களுக்கு திசைமுகப்படுத்த வேண்டிய மேலதிக பொறுப்பு பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கே அதிகம்.

வெறும் புத்தகப் பூச்சிகளாக மட்டும் கல்வி பயில்வதோடு நிறுத்தாது, ஆளுமை, புதிய சிந்தனை, தலைமைத்துவப் பண்பு, நுண்ணறிவுத் தேடல், சுயதிறன் விருத்தி, நிர்வாகத்திறன் விருத்தி, மனிதமேம்பாடு, வாண்மை விருத்திச் செயற்பாடுகள், சாதுரியம் ஆகியவற்றை சுயமுயற்சியுடன் பட்டதாரி மாணவர்கள் தேடவேண்டும்.

வெறும் சான்றிதழ் பட்டம் மட்டும் வாழ்க்கைக்கு எதுவும் தராது. பாடவிதானம், குறிப்பேடு என்பவற்றுக்குள் மட்டும் சுற்றிக்கொண்டிருக்காமல், உலக மாற்றத்துக்கும் சமூக வளர்ச்சிக்கும் ஈடுசெய்யும் வகையில் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் தனது அறிவு விருதிக்கான சகல வகைத் தேடுதல்களையும் நாடிஓட வேண்டும்.

பல்கலைக்கழக மாணவர்கள் தமது செயல் திறன்களையும் ஏனைய அறிவுசார் தேடல்களையும் உயர்த்திக்கொள்ளாவிடில், தனிப்பட்ட முறையில் அவர்கள் மட்டுமன்றி, அவர்கள் சார்ந்துள்ள சமூகமும் மிகப்பெரியளவில் பாதிப்புறும்; பின்னடைவு காணும்.

ஆகவே இந்தக் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு பல்கலைக்கழகம், பல்கலைக்கழக ஆசான்கள், பட்டதாரி மாணவர்கள், அவர் தம் பெற்றோர் ஆகிய தரப்புகள் விழிப்புடனும் பொறுப்புடனும் முன்னோக்கி நடக்க வேண்டும்.

பல்கலைக்கழக கல்வி பயிலும் மாணவர்களை, எமது பிரதேசத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் உதவுபவர்களாக்க முற்குறிப்பிட்ட தரப்புகள் கூட்டு முயற்சியுடன் உழைக்க வேண்டும். அதற்குத் தேவையான விழிப்புணர்வுடனான சமூகப்பொறுப்பும், தூரநோக்கும் சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் பிறக்காவிடில், எமது எதிர்காலச் சந்ததியின் சமூக அசைவியம் கேள்விக்குரியதாகி விடும். அதற்கு இடம்தரவேண்டாமே.

இந்தக் குறைபாடு குறித்து தூரநோக்குடன், குறுகிய வட்டத் தைவிட்டு நீங்கி ஆக்கபூர்வமான நோக்குடன் ஆய்வு செய்யப்பட வேண்டியமை தவிர்க்க முடியாத பணியாகும்.

# வவுனியா தெற்குப் பாடசாலைகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் சிங்கள ஆசிரியர்

## நியமனங்களை யாழ். நகரில் வைத்து ஆளுநர் வழங்கினார்

யாழ்ப்பாணம், ஒக .7

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளில் சிங்களப் பாடம் கற்பிப்பதற்காக ஒப்பந்த அடிப்படையில் 10 சிங்கள ஆசிரியர்களுக்கான நியமனங்களை வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, வடமாகாணப் பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி ஆகியோர் நேற்றுமுன்தினம் வழங்கினார்கள்.

யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் அழகியல் பட்டதாரிகளுக்கான சந்திப்பு ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வைத்தே சிங்கள ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளில் சிங்களம் கற்பிப்பதற்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதால் ஒப்பந்த அடிப்படையில் 10 சிங்கள ஆசிரியர்களுக்கு நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டதாக ஆளுநர் இந்த நிகழ்வில் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.இளங்கோவன், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி பொன்னம்பலம், வட மாகாண கலாசார, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் என்.சிறிதேவி ஆகியோர் கலந்துகொண்டனர். (த-311)

# 'உலகைக் காப்போம்' சைக்கிள் சுற்றுலா விரைவில் யாழில் இருந்து ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக 07

சுற்றுச்சூழலை அழிவுகளிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு 'உலகைக் காப்பாற்றுவோம்' எனும் தொனிப் பொருளில் சைக்கிள் சுற்றுலா ஒன்று யாழ்ப்பாணத்திலிருந்து விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

புவி வெப்பமடைவதால் உலக அழிவுகள் ஏற்படுகின்றன. இரசாயன கழிவுகளால் பூமிக்கும் மனிதர்களுக்கும் தீங்குகள் ஏற்படுகின்றன. அவற்றை ஈடுசெய்யும் பொருட்டே இந்த சைக்கிள் சுற்றுலாவினை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம் எனத் தெரிவித்தார் இதன் ஏற்பாட்டாளர் கா.ராஜரட்ணசிங்கம் குணசேகர.

யாழ்.பொதுநூலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.இங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சுற்றுச் சூழலில் மனிதர்களுக்கு ஏற்படும் அழிவுகளை மாற்றீடு செய்யும் பொருட்டு யாழ்ப்பாணத்திலிருந்து இந்தச் சுற்றுலா ஆரம்பமாகவுள்ளது.

இந்தத் திட்டத்தை 5 வருட திட்டமாக செயற்படுத்தவுள்ளோம். முதலில் இலங்கையைச் சுற்றி சைக்கிள் பவனி வந்ததன் பின்பு, உலகம் முழுவதிலும் உள்ள 40 நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து உலக சாதனை படைப்பதே எமது எண்ணமாக உள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பமாகவுள்ள சைக்கிள் சுற்றுலாவுக்கு ஒரு குழு சேர்ந்துள்ளது. கழகங்கள் ஊடாக எமக்கு ஆதரவு தேவை. அத்துடன் அன்பளிப்பு, நன்கொடைகள் என்பவற்றையும் நாம் எதிர்பார்க்கின்றோம்-என்றார். (த-311)

# அரச காணிகள் மோசடியாக விற்பனை ஜனாதிபதி செயலணி தீவிர விசாரணை

கொழும்பு, ஒக. 7

புத்தளம், வனாத்தவில்லுவ பிரதேசத்திலுள்ள ஆயிரக் கணக்கான ஏக்கர் அரச காணிகள் துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி விசேட செயலணி மேற்கொண்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

விசேட இணையத்தளமொன்றை உருவாக்கி பிரமாண்டமான முறையில் நடந்து வந்த இந்த கள்ள வியாபாரத்தில் அரச அதிகாரிகள் பலரும் சம்பந்தப்பட்டிருப்பதாக ஜனாதிபதி செயலணி வட்டாரங்கள் தெரிவித்தன.

துண்டு துண்டாகப் பிரிக்கப்பட்ட இந்தக் காணிகளில் தென்னங்கன்றுகள் நடப்பட்டு ஓரளவு வளர்ந்த பின்பே விற்பனை செய்யப்பட்டுள்ளன எனவும் ஒரு பேர்ச் காணி 13 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது.

இதனால் அரசாங்கத்துக்கு கோடிக்கணக்கான ரூபா நட்டமேற்பட்டுள்ளதாகவும் இந்த வியாபார பிரதம சூத்திரதாரியை தேடிப் பிடிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக செயலணி வட்டாரங்கள் தெரிவித்தன. (த)

# யாழ்ப்பாணத்தில் நேற்று சிறைக் காவலர் தேர்வு

யாழ்ப்பாணம், ஒக 7

சிறைச்சாலைத் திணைக்களத்துக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்களை ஆள்சேர்ப்புச் செய்வதற்கான உடற்தகுதிகாண் பரீட்சை நேற்று யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் காலை 8மணி தொடக்கம் பிற்பகல் 4மணிவரை இடம்பெற்றது.

சிறைச்சாலைகள் அத்தியட்சகர் சந்திர ஏக்கநாயக்கவின் வழிப்படுத்தலில் நேற்று நடைபெற்ற இந்தப் பரீட்சையில் யாழ்ப்பாணத்தில் இருந்து பலர் கலந்துகொண்டனர்.

இந்தப் பதவிக்கு 752 பேர் விண்ணப் பித்திருந்ததாகவும், 17 பேர் தகுதியற்றவர்கள் எனக்கருதி அவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாகவும், ஏனைய விண்ணப்பதாரிகள் நேற்று வருகை தந்து தகுதிகளை நிரூபித்ததாகவும் அங்கு கடமையில் இருந்த சிறைச்சாலை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சையில் கலந்துகொண்ட ஆண், பெண் இருபாலாரின் கல்வித் தகுதிகள், ஓட்டவேகம், உடல் அளவு என்பன பரிசீலிக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (த-319)

# இரணைமடுக்குள நீர்விநியோகம் கொழும்பில் ஆய்வுக் கலந்துரையாடல்

கிளிநொச்சி இரணைமடுக்குளத்திலிருந்து நீரை யாழ். மாவட்டத்துக்கு கொண்டுவரும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் முன்னேற்றப் பணிகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தவை வருமாறு:-

இரணைமடுக்குள நீர்விநியோகம் தொடர்பான கலந்துரையாடல் கொழும்பில் எதிர்வரும் 12 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதற்கான முன்னோடி முன்னேற்ற ஆய்வுக் கலந்துரையாடலை நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் நடத்தினோம்.

இந்த வேலைத் திட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்தத் திட்டத்தில் குறித்த சில இடங்களில் நிலையங்கள் அமைக்க வேண்டியுள்ளது. இதற்கான காணிகள் தெரிவு செய்யும் வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாகத் தெரிவித்தார். (ஒ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கந்தர் செல்லையா (செட்டியார்)



புத்தூர் கிழக்கு, குமாரசாமி வீதி, புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் செல்லையா (செட்டியார்) 04.08.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தர்-சீதாதேவி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் சின்னாட்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும் தெய்வானைப் பிள்ளை, காலஞ்சென்றவர்களான சோதி, பொன்னம்மா, பரமு, சின்னத்தம்பி ஆகியோ ரின் அன்புச் சகோதரனும் கந்தையா (கந்தராசா), அன்னலட்சுமி, ஜெயலட்சுமி, (ஆசிரியை, புத்தூர் சோமா ஸ்கந்த கல்லூரி), கருணானந்தம், பரமசிவம் (கனடா), பஞ்சலிங்கம் (கனடா ) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவநேசன் (சட்டத் தரணி), புஸ்பராணி, வசந்தி, மாலா (கனடா), கலா (கனடா), சுரேஸ் (ப.நோ. கூ.சங்கம், தெல்லிப்பழை) ஆகியோரின் அன்பு மாமனும் துஸ்யந்தன் (கனடா), கிருசாந்தி (கனடா), தபோதரன் (கனடா), ரமேஸ்தரன் (சட்டக் கல்லூரி மாணவன்), கோகிலராஜ், அனுஷா, யசிதா, கயிதா, நிதுஷா, ஜலிசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் தேனுஜன், (கனடா), திவ்வியன், (கனடா), நியாசன் (கனடா), றம்சன் (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.08.2011) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குடும்ப மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புத்தூர் கிழக்கு,
குமாரசாமி வீதி, புத்தூர். (சி/2452)

தகவல்:
குடும்பத்தினர்.

## பொன்னுத்துரை பிலோமினம்மா



சரவணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பிலோமினம்மா 05.08.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம்- சவுனம், சவிராசி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர் களான அந்தோனி-மரியை மற்றும் சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான தங்கலெட்சுமி, துரைஐயா, செல்லம்மா, சின்னராசா மற்றும் சின்னமணி, மாணிக்கம், பூமணி, இராசதுரை காலஞ்சென்ற றூபி மற்றும் இராசத்தி, அல்பிரட் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிறில் காலஞ்சென்றவர்களான ராசம், தங்கராசம் மற்றும் செல்வநாயகம், மேரி இராஜேஸ்வரி, இராசநாயகம், ஞானேஸ்வரி, ஞானசீலி, சகாஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயும்,நொபிலீன், டொமினிக், ஜெம்மா காலஞ்சென்ற குணமாலை மற்றும் வவா, ஜெசிமா, லூயிஸ், அருள், பாஸ்கரன் ஆகி யோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (08.08.2011) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு புனித இராயப்பர் சின்னப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நாரந்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முங்கானப்புலம்,
சரவணை மேற்கு,
வேலணை. (6582) (27)

தகவல்:
குடும்பத்தினர்.

## காசிப்பிள்ளை தேம்பாமலர்



சிவன்கோயிலடி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கலைநகர், வட்டு. வடக்கு, சித்தங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காசிப்பிள்ளை தேம்பாமலர் 04.08.2011 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளையின் அன்பு மனைவியும், வேலுப்பிள்ளை- அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற இராமு- மாணிக்கம் தம்பதியரின் இளைய மகளும், நற்குணராஜா, சறோஜினி, யோகநாதன் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ் சென்றவர்களான சிவபாக்கியம், இலட்சுமிப்பிள்ளை, நாகமுத்து, அன்னம்மா மற்றும் இரா.சத்தியவான் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் செ.இராசலிங்கம் கலைநகர், வட்டு. வடக்கு, சித்தங்கேணியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

"தாய்தந்தை இல்லம்",
கலைநகர், வட்டு.வடக்கு,
சித்தங்கேணி. (6583)

தகவல்:
பேறாமகன்
செ.இராசலிங்கம்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமானNo: 1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் (12.8.2011) அன்று விநியோகம் செய்யப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.
சிற்றி பாம் ரேடேர்ஸ்
ஆடியபாதம்வீதி, கல்வியங்காடு
T.P.0212221158

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராய் சைவத்தமிழ் பாடசாலைக்கு பின்புறமாகவுள்ள 3¾ பரப்புக்காணி உடன் விற்பனைக் குண்டு.
தொடர்புகளுக்கு :
0774744635

## கட்டடம் வாடகைக்கு

ஸ்ரான்லி வீதியில் யூனியன் வங்கியின் முன்பாக, நான்கு மாடிகளைக் கொண்ட கட்டடம் வாடகைக்கு உண்டு.
(தேவைக்கு ஏற்ப பகுதியாகவும் கொடுக்கப்படும்)
தொடர்பு : 077 2247428

## தவறிவிட்டது

இணுவில்மேற்கு செட்டிவளவுலேன் எனும் முகவரியுடைய கலாநிதி சிவானந்தன் என்பவரின் தேசிய அ.அ (606361114V), சுன்னாகம் இலங்கை வங்கிப் புத்தகம் (இல-2158 1926), டைட்டோ CC48 மோட்டார் சைக்கிள் பதிவுத் துண்டுகள், 0779006777 எனும் இலக்கமுடைய தொலைபேசி, இராணுவ அ. அட்டை, தொழிலாளர் அட்டை ஒரு தொகைப் பணம் என்பன அடங்கிய கறுப்பு நிற சிறிய கைப்பேஸ் 05.08.2011 காலை 8 மணிக்கு மருதனார் மடம் ஆஞ்சநேயர் கோயிலுக்கும் பல்லப்ப வைரவர் கோயிலுக்கு மிடையில் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் சுன்னாகம் ப.நோ. கூ. சங்கத்திலோ, யாழ்ப்பாணம் அண்ணா கோப்பி கடையிலோ மருதனார்மடம் ஆஞ்சநேயர் கோயிலிலோ தொடர்பு கொள்ளவும்.

ஆ. சிவானந்தன். (C/2453)

வீசா சேவை: UK Student Visiting வீசாவில் செல்வதற்கான ஏற்பாடுகள் மற்றும் சகல வீசாக்களுக்குமான ஆலோசனை Financial Sponsorship என்பன .
தொடர்பு: 0725223808

## தேவை

எமது புத்தகசாலையில் பணிபுரிய விற்பனையாளர்கள் உடனடியாகத் தேவை. ஆர்வமுள்ளோர் நேரில் வரவும்.
Book Lab.
இராமநாதன் வீதி,
பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.
தொலைபேசி
021 222 7290
077 200 2015

## வேலையாள் தேவை

யாழ். நகரின் பிரபல தனியார் கிளினிக்குக்கு 18 வயதுக்கு மேற்பட்ட க.பொ.த. சாதாரணதரத்தில் சித்தியெய்திய பெண் வேலையாள்கள் தேவை. தகைமை உடையோர் சுய விவரக்கோவையுடன் இல.514/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 09.08.2011 செவ்வாய்க் கிழமை காலை 9மணிக்கு சமுகம் தரவும்.
மேலதிக தொடர்புகளுக்கு:
0776569960.

## மணமகள் தேவை

யாழ். இந்து உயர்குலம், லண்டன் வதிவிட உரிமை பெற்ற 1976 ஆம் ஆண்டு உத்தரம் 1ம் பாதம் 20 பாவம், உயரம் 5' 8" உடைய மணமகனுக்கு 1984 ம் ஆண்டுக்குப் பின்னர் உயரம் 5'2" க்கு மேல் 5' 4" க்குள் படித்த அழகான நிறமான மெல்லிய பெண் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. ஸ்பொன்சர் செய்து எடுக்கப்படும். 0775388785

## காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் விவசாய பாடசாலையின் எல்லையில் 3½ பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.
உடன் தொடர்பு கொள்ளவும்
T.P 0774912596

## காணி விற்பனைக்குண்டு

திருநெல்வேலிச் சந்திக்கு அருகாமையில் பலாலி வீதியில் சம்பத் வங்கிக்கு (Sampath Bank) அருகில், பெற்றோல் நிலையத்திற்கு முன்பாக மடத்தடி ஒழுங்கையில் (கராஜ் (Garage) ஒழுங்கையில்) 3 2/3 பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0112366175, 0777268668

## விற்பனைக்கு

7அடி உயரம் கொண்ட இரண்டு தட்டு LOVE BIRDS கூடு ரூபா 5000/=, BOOK SHELFரூபா 4000/=, 3 துவிச்சக்கர வண்டிகள் ரூபா 3500இலிருந்து. அத்துடன் முதிர்ந்த பலாமரம், மாமரம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776172707, 0773344405.

## வீடு விற்பனைக்கு

வதிரிச் சந்தியிலிருந்து ½ கி.மி.தூரத்திலுள்ள நெ.மெ. மி.த.க பாடசாலைக்கருகில் 3½ பரப்புக் காணியுடன் கூடிய 3 அறைகள் உள்ள சகல வசதிகளுடன் வீடு விற்பனைக்குண்டு.
அழகு நிலா - வதிரி, கரவெட்டி.
T.P: 0783968853, 0771547603, 0213210549

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
12 . 04 . 1948



விண்ணில்
19 . 07 . 2008

### அமரர் நடராஜா சத்தியசீலன்

எப்படி மறப்பேன் என்னோடு நீ இருந்து
ஏற்றமிகு வாழ்வு தந்து உற்றத்தார்
வெறுத்தாலும் பட்சமாய் உடனிருந்து .
உறவுகள் யாருமின்றி தனிமையாய்
நான் தவித்திருந்த வேளை ஆண்டவனே
தம்பிள்ளைகளை எம்மிடம் அனுப்பி
ஆற்றித் தேற்றி உம் பணிகள் யாவும்
சிறப்புற செய்ததை எப்படி மறப்பேன்.

நெருக்கமான சூழ்நிலையில் என் கணவன் மரணப் படுக்கையில் இருந்தவேளை தனிமையாய் நான் தவித்த வேளை எனக்கு பக்கபலமாக இருந்து ஆறுதல் கூறி எனக்கு உதவிய திருச்சபை குடும்பத்தினருக்கு நன்றி கூறுகின்றேன்.

நல்லூர். (6579)

மனைவி
ச. அன்னலட்சுமி

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
03.12.1941



மறைவு:
09.08.2006

### அமரர் கந்தையா குணரத்தினம் (J.P.U.M)

சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்

வார்த்தைகள் வருகுதில்லை எம் வம்ச விளக்கே!
பண்புக்கும் பாசத்துக்கும் பணிந்தவனே
உண்மைக்கும் உழைப்புக்கும் உதாரணமே
உறவுகளைக் கைகொடுத்து உயர்த்திவிட்டாய்
எம் உள்ளத்தில் நின் நினைப்பை நிறுத்திவிட்டாய்
பிறருக்காய் வாழ்ந்து இறப்பை வென்றாய்
வானுலகம் கண்டும் வாழ்வு கொண்டாய்
வாழ்த்தும் வருங்காலம்
வழிநடக்கும் உம் பாதையில்
வருத்தத்தோடு வணங்குகிறோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக.

(சி/2197)(-3919-21)

குடும்பத்தினர்.
அவுஸ்திரேலியா
E-Mail:gunamfamily@gunam.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன் சிமெந்து ஆலைச் சூழலில் மிதிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக.7

வலி.வடக்கில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படாத உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் தற்போது மிதிவெடி அகற்றும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறையில் உள்ள சிமெந்து ஆலையை மீளவும் ஆரம்பிப்பதற்காக அதன் சுற்றாடலில் மிதிவெடிகளை அகற்றும் பணி கடந்தவாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பிராந்திய மிதிவெடி செயற்பாட்டு அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆனையிறவு உப்பளத்தை அண்டிய பகுதிகளில் புதைக்கப்பட்டிருந்த வெடிபொருள்கள் முற்றாக அகற்றப்பட்டுள்ளன. அந்தப் பிரதேசங்கள் தற்போது செயலக நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன. மேலும் யாழ்ப்பாணம் சிறுத்தீவு, குருசடித்தீவு ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வந்த மிதிவெடி அகற்றும் பணிகளும் நிறைவடைந்துள்ளன.

வலி.வடக்கில் தற்போது கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பின்னகர்த்தப்பட்டுள்ள உயர்பாதுகாப்பு வலயச் சூழலில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் காங்கேசன்துறை சிமெந்து ஆலையை மீண்டும் இயக்க வசதியாக அதனை அண்டிய பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்றும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தனர். (த-15)

# கரம்பைக்குறிச்சி பொதுக்கிணறு தற்போது மக்கள் பாவனைக்கு

கொடிகாமம், ஒக. 7

கரம்பைக்குறிச்சி அம்மா கடைச் சந்தியில் இருந்த நல்ல தண்ணீர் பொதுக்கிணறு தற்சமயம் பொதுமக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக இந்தக் கிணறு பாதுகாப்புத் தரப்பினரின் பாதுகாப்பு வலயத்தில் உள்ளடக்கப்பட்டு இருந்தது. இந்தக் காலகட்டத்தில் பிரதேச மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் பல வித சிரமங்களை அனுபவித்தனர்.

அண்மையில் இந்தப் பிரதேசம் பாதுகாப்புத் தரப்பினரால் பொதுமக்களுக்குக் கையளிக்கப்பட்டமையை அடுத்து மேற்படி கிணறு பொதுமக்கள் பாவிக்கக்கூடியதாக உள்ளதுடன் தற்சமயம் நாளாந்தம் அதிகமான பொதுமக்கள் மேற்படி கிணற்றில் இருந்து குடிதண்ணீர் பெற்றுச் செல்வதைக் காணக்கூடியதாகவும் உள்ளது.

அந்தக் கால கட்டத்தில் இந்தக் கிணறு அமைந்திருந்த இடத்தில் சுமைதாங்கி ஒன்று கட்டப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-122)

# மாற்று ஆற்றல் உடையோருக்கு இலவச தையல் பயிற்சி வகுப்பு

## 'ஜெய்ப்பூர்' நிறுவனம் நடத்துகிறது

யாழ்ப்பாணம், ஒக. 7

யாழ்.மாவட்டத்தில் உள்ள மாற்று ஆற்றல் உடையவர்களுக்கு இலவச தையல் பயிற்சி வகுப்புகள் செப்ரெம்பர் முதலாம் திகதி யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் நிறுவன தொழிற் பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் அந்தந்தப் பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர் மூலம் கோரப்பட்டுள்ளன. மாற்று ஆற்றல் உடையவர்களை ஊக்கப்படுத்தி இந்தப் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றச் செய்யுமாறு பிரதேச சமூக சேவை அலுவலர்களை மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வலியுறுத்தியுள்ளார்.

புனர்வாழ்வு பெற்று விடுதலையான முன்னாள் போராளிகளும், சுயதொழில் விண்ணப்பதாரிகளும் இந்தப் பயிற்சி நெறியில் உள்வாங்கப்படுவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு மாதங்கள் பயிற்சிகள் நடைபெறுமெனவும் பயிலுநர்களுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுமெனவும் ஆர்வமுள்ளவர்கள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுகளில் உரிய படிவங்களைப் பெற்று எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் 'ஜெய்ப்பூர்' நிறுவனம், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறும் அறிவித்துள்ளார்.

பயிற்சி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படுவதுடன் தையல் பயிற்சியின் பின்னர் தனியார் நிறுவனங்களின் கொடுப்பனவுடனான தொழில் முறைப் பயிற்சியும் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையும், ஜெய்ப்பூர் நிறுவனமும் இணைந்து இந்தப் பயிற்சி நெறிகளை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-207)

## சுகமான வாழ்வுக்கு...



உதவட்டும்: பேராசிரியர் மருதையனார் கந்தப்பு எழுதிய 'மூளை நரம்பியல் சிகிச்சை' என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. வடக்குக் கிழக்கு மாகாண முன்னாள் சுதேச மருத்துவப் பணிப்பாளர் பேராசிரியர் எஸ். பவானி தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மன்னார் மாவட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை நூலின் முதற் பிரதியை தொழிலதிபர் சங்கரப்பிள்ளை கைலாசப் பிள்ளைக்கு வழங்கி வெளியிட்டு வைக்கிறார். (த-14)

# கூட்டுறவு தின விழா இன்று காரைநகரில்

காரைநகர், ஒக.7

காரைநகர் பிராந்திய சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் நடத்தப்படும் 89 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா காரைநகர் அல்ரின் வீதியில் அமைந்துள்ள பிராந்திய சபைக் காரியாலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க காரைநகர் பிராந்தியத் தலைவர் சு.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் செ.இலகுநாதனும், சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் தபாலக தபால் அதிபர் சி.குமாரவேலு, தியாகராசா மத்திய மகா வித்தியாலய அதிபர் பொ.சிவானந்தராசா, யாழ்ற்றன் கல்லூரி அதிபர் திருமதி லி.கமலாம்பிகை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-250)

# படையினரால் அமைக்கப்பட்ட ஐந்து வீடுகள் பயனாளிகளுக்கு

## கடந்த முதலாம் திகதி கையளிப்பு

வரணி,ஒக.7

பாதுகாப்புப் படையினரால் அமைக்கப்பட்ட வீடுகள் வரணி வடக்கு கிராம அலுவலர் பிரிவில் உரிய பயனாளிகளுக்கு கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை வைபவரீதியாக வழங்கப்பட்டன.

5 பயனாளிகள் இந்த வீடுகளைப் பெற்றுக்கொண்டனர்.

சிமெந்துக் கற்களால் அமைக்கப்பட்ட இந்த வீடுகள் இரண்டு அறைகள், மற்றும் சமையலறையுடன் கூடியதுடன் கூரை அஸ்பெஸ்டஸ் சீற்றினால் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் கழிப்பறைகள் வேறாக அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

வரணி வடக்கு, கறுக்காய், குறண்டிப்பிட்டி ஆகிய இடங்களை வசிப்பிடமாகக் கொண்ட வறுமைக் கோட்டிலுள்ள குடும்பங்களுக்மே இவ்வாறான வீடுகள் அமைத்துக் கொடுப்பட்டதாக இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (த-313)

# நூலகர்களுக்கான செயலமர்வு

பருத்தித்துறை, ஒக.7

வடமராட்சிக் கல்வி வலயத்தினுள் பாடசாலைகளின் நூலகம் தரப்படுத்தலும் வாசிப்பு மாத செயற்பாடுகளும் தொடர்பான செயலமர்வு நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு புலோலி மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலையில் அமைந்துள்ள ஆசிரியர் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வுக்கு பாடசாலையிலுள்ள ஆசிரிய நூலகர், நூலகப் பொறுப்பாளர் ஆகிய இருவரையும் தவறாது அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-19)

# கடற்படையின் மத்திய நிலையத்துடன் தமிழில் தொடர்புகொள்ள முடியாத நிலை

## அழ்கடலில் தொழில் செய்யும் மீனவர்கள் சிரமம்

யாழ்ப்பாணம், ஒக. 7

ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் போது படகுகளிலிருந்து கடற்படையின் தொடர்பாடல் மத்திய நிலையத்துடன் தொடர்புகொள்ளும்போது தமிழ் தெரிந்த உத்தியோகத்தர்கள் அங்கு இன்மையால் தாம் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருவதாகவும் எனவே, மத்திய நிலையத்தில் தமிழ் தெரிந்த உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வடமராட்சி இன்பருட்டி மீனவர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனை நேற்று முன்தினம் வடமராட்சி இன்பருட்டி கடற்றொழிலாளர் சங்கத்தினர் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர். இந்தப் பேச்சின் போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடும் வள்ளங்களில் கடற்படையின் மத்திய நிலையத்துடன் தொடர்புகொள்ளும் தொடர்பாடல் வலையமைப்புக் காணப்படுகின்றது. இந்தத் தொடர்பாடல் வலையமைப்பினூடான தொடர்பாடல்கள்சிங்களம் மற்றும் ஆங்கில மொழியிலேயே இடம்பெறுகின்றன. இந்த மொழிகள் எமக்குத் தெரியாமையால் நாம் உரிய வகையில் தொடர்பாடல்களை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் நாம் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றோம். ஆபத்தொன்று ஏற்பட்டால்கூட உரிய வகையில் தொடர்பாடலை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. எனவே தமிழ் மொழிமூலம் தொடர்பாடலை மேற்கொள்ளும் வகையில் தொடர்பாடல் மத்திய நிலையத்தில் தமிழ் தெரிந்த உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

இந்த விடயம் தொடர்பாக மீன்பிடித் தொழிற்றுறை அமைச்சர் ராஜித சேனரட்ணவுடன் கலந்து உரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளிடம் உறுதியளித்துள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## ஆறுமுகம் நாகலிங்கம்

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், ஊரெழு கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நாகலிங்கம் கடந்த (5.08.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம் - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தங்கரத்தினத்தின் பாசமிகு கணவரும் சித்திரவேல், சுப்பிரமணியம், பார்வதிப்பிள்ளை, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுசிலாதேவி, தேவராசா, சாந்தினிதேவி, ரஞ்சினிதேவி காலஞ்சென்றவர்களான மோகனராசா, வினோதினிதேவி ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2011) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 1.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக ஊரெழு பொக்கணை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: நா.தேவராசா (தேவன்)
ஊரெழு கிழக்கு, ஊரெழு (6577)

## 24 மணிநேர விநியோகம்

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையம் கடந்த 25 ஆம் திகதி முதல் 24 மணிநேர சேவையை வழங்கி வருகின்றது.

வாடிக்கையாளர்கள், பொது மக்கள் எரிபொருள்களை பெறுவதில் எதிர்கொண்ட நெருக்கடிகளைக் குறைப்பதற்காக இந்த சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது என கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர் எஸ். நேசராஜா கூறியுள்ளார். (ம-313)

## வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்

யாழ்.மாநகரசபை எல்லைக்குள், யாழ். பஸ் நிலையம் அருகாமையில், மின்சார நிலைய வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய விசாலமான வீடு வாடகைக்கு உண்டு. அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு : 071 8265663, 077 9213609

## விற்பனைக்கு

ஓடியோ டெக், பழைய நடுத்தர பக்திப் பாடல் CD, Records, றெக்கோடர் (Speed Machine - 3 Cassette - In 5 Min) லெமினேசன் Machine (மின்சாரம் இன்றிப் பாவிக்கக் கூடிய Cool Lamination) என்பன விற்பனைக்கு உண்டு
தொடர்பு : 0777 328279

# PERMIT HOLDERS

## CAR FOR A CHEAPER PRICE

njhlh;GfSf;F
**077-3754040**



TOYOTA PREMIO - 4.0 MILLION
TOYOTA ALLION - 3.9 MILLION
TOYOTA AXIO - 3.4 MILLION

## SMART KINGS (PVT) LTD

DIRECT IMPORTERS OF JAPANESE VEHICLES
684,Colombo Road, Kurana,Negombo. TEL:031-5678901,031-5678902

கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ்
இல 11.A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்மாட் கிங்ஸ்
gpiwNtl; ypkpl;ll;
684> nfhOk;G Nwhl;> Fwz> ePh;nfhOk;G.
njh.,y : 031-5678901> 031-5678902



# மகளிருக்கான 15 நாள் Facial, அழகுக்கலை வகுப்புகள்



- வீட்டிலிருந்தவாறே தொழில் புரிய விரும்பும் நங்கையரே!
- வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!
- இல்லத்தரசிகளே! மற்றும் ஆர்வமுள்ள மகளிரே!

இதோ உங்களுக்காக

- முக அழகுக் கலை (Facial):- (B)பஞ்சாறாஸ் Saffron, Papaya மற்றும் Gold, சொக்கலேற், தமக்குத் தாமே Facial செய்தல் உட்பட 10 வகையானவை.
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 6 முறைகளில் சேலை அணிதல்,

அழகு சாதனப் பொருட்களின் அறிமுகப்படுத்தல், செய்முறை தொடர்பான குறிப்புகள் (Notes) மற்றும் போதிய விளக்கங்களுடனான செயன்முறைப் பயிற்சிகள்.

**முடி சீராக்குதலும் கூந்தல் வடிவமைப்புகளும் (HAIR DRESSING & STYLING)**

- 50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், (Straightening) முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், 3 வித முடி வெட்டுதல்கள். தமக்குத்தாமே முடி வெட்டுவதற்கான பயிற்சி, Perming, தலைக்கு எண்ணை மசாஜ் செய்தல்.

மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

- தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ், சுரிதார், Skirts, சட்டைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற பயிற்சிகள்

மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது

**ஆரம்பம் - 10-08-2011 புதன் காலை 10.00 மணி**

## கலாலயா

பயிற்சியகம் 1985–2011
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் – யாழ்ப்பாணம்

மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.



# த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் ஸ்தாபனத்தின்

## மாபெரும் ஆடித் தள்ளுபடி

அனைத்து புடவை வகைகளும் சிறப்பு விலைக்கழிவில்

(எதிர்வரும் 17.08.2011 வரை) 10 நாள்கள்

அதிரடி விலையில் அசத்தலான தெரிவுகளுக்கு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ★ பிளவுஸ் | 450/= | 350/= | 600/= | 400/= | | |
| ★ ஸ்கேட் | 600/= | 400/= | 800/= | 400/= | | |
| ★ பஞ்சாபித் துணி | 1000/= | 800/= | 1500/= | 1000/= | 2000/= | 1500/= |
| ★ கவுண் | 300/= | 200/= | 550/= | 350/= | 900/= | 600/= |
| ★ ஒஸ்கா சாறி / சாரதி சாறி | 1650/= | 1000/= | | | | |
| ★ நைலக்ஸ் பிறின்ரட்சாறி | 600/= | 400/= | | | | |
| ★ பெஸ்றவல் சாறி | 5000/= | 2500/= | | | | |
| ★ கொட்டன் வொயில் சாறி. | 1800/= | 1250/= | | | | |
| ★ T.சேட் | 750/= | 500/= | | | | |
| ★ சோட்ஸ் | 700/= | 350/= | | | | |

த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
44,42, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

# கணினி மற்றும் வர்த்தகத் துறைகளில் பட்டதாரியாக அரிய சந்தர்ப்பம்!

மிகக் குறைந்த கட்டணத்தில் அரச அங்கீகாரமுடைய **BRITISH** பல்கலைக்கழக சான்றிதழைப் பெறுங்கள்!

**1. B.Sc. in Computer Science**
**2. B.Com. with Computer Application**

தகமை-HND/HNDA / Adv. Diploma அல்லது A/L அல்லது O/L
காலம்- 01 வருடம் காலம்- 02 - 03 வருடங்கள்

**3. Post Graduate Diploma in Computing >> M.Sc.**
தகமை- Any Degree காலம்- 01 வருடம்

வங்கிக் கடன் வசதிகள், வேலைவாய்ப்பிற்கான ஆலோசனைகள் நேரில்!

**NORTH LANKA IIT**
#113, Laxan Plaza, Navalar Road, Jaffna.
Phone: 0215677774

**NEW BATCH ஆரம்பம்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெருவிளக்கு பொருத்தவா யாழ்ப்பாணம் வந்தார் மஹிந்த?

உள்ளூராட்சிச் சபைகளுக்கான அதிகார உச்ச வரம்பு தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் வெளிப்படுத்தி உள்ள கருத்துகள் சாதாரண பொதுமக்கள் மத்தியில் மட்டுமல்ல புத்திஜீவிகள் மற்றும் அரசியல் விமர்சகர்கள் மத்தியில் கூட ஒரு குழப்பநிலையை ஏற்படுத்தியுள்ளன.

ஆரம்ப காலத்தில் உள்ளூராட்சிச் சபைகள் என்பன ஒரு கிராம இராச்சியம் என்றே மதிக்கப்பட்டன. கிராம சபைகள், பட்டினசபைகள், நகரசபைகள், மாநகர சபைகள் எனப் படிப்படியாக வரையறுக்கப்பட்டிருந்தன.

கிராமங்கள் உட்பட மாநகரங்கள் வரை அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளும் இந்த சபைகளின் ஊடாகவே திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்டன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது இரண்டாவது பதவி காலத்துக்கான தேர்தல்களின் போது மீண்டும் இந்த கிராம இராச்சிய முறையை கொண்டுவருவேன் என்று உறுதியளித்தார். ஜனாதிபதியின் இந்தப் பிரசாரம் மக்கள் மத்தியில் பெரும் பாராட்டைப் பெற்றது.

கிராமசபைகள், பட்டினசபைகள் என்ற நிலைமை மாறி பிரதேசசபைகள், நகரசபைகள், மாநகரசபைகள் என எல்லை வகுக்கப்பட்டிருந்த போதும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கடந்த முப்பது வருடங்களாக நிலவிய அசாதாரண சூழ்நிலையினால் இந்தப் பிரதேசங்களில் இந்த சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படாமல் இருந்தன.

எனினும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற வகையில் தனது அதிகாரங்களைப் பயன்படுத்திய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களை வெற்றிகரமாக நடத்தி முடித்து விட்டார்.

உள்ளூராட்சிச் சபைகளுக்கான வேட்பு மனுத் தாக்கலின்போது ஏற்பட்ட சில தவறுகளினால் வடக்கில் அரச தரப்பினால் தாக்கல் செய்யப்பட்ட ஒட்டுமொத்த வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டன. இதனால் வடக்கில் தேர்தல்கள் பிற்போடப்பட்டு நீதிமன்றம் வரை சென்று நிராகரிக்கப்பட்ட அதே வேட்புமனுக்கள் மீண்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டு கடந்த ஜூலை 23 ஆம் திகதி தேர்தலும் நடத்தப்பட்டது.

ஏற்கனவே நடத்தப்பட்ட உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் தென்பகுதியில் ஜனாதிபதியின் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு 90 வீதமான சபைகளை வாரிச் சுருட்டிக்கொண்டது.

அதேவேளை யாழ். மாவட்டம் தவிர ஏனைய வடக்குக் கிழக்கு பிரதேசங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏனைய பெரும்பான்மை கட்சிகளை எல்லாம் பின்தள்ளி 13 உள்ளூராட்சிச் சபைகளைக் கைப்பற்றிக் கொண்டது. யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த அரசுக்கு இது அதிர்ச்சியைக் கொடுத்து விட்டது.

இதனால் உஷார் அடைந்த ஜனாதிபதி வடக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் களம் அமைத்து செயற்பட்டார்.

தென்பகுதியில் வெற்றியடைந்தது போல் வடக்கிலும் எப்படியாவது வெற்றி பெறவேண்டும் என வியூகம் அமைத்து செயற்பட்டார்.

தனது சகோதரர் பஸில் ராஜபக்ஷ, தனது மகன் நாமல் ராஜபக்ஷ உட்பட அனைத்து அமைச்சர்களையும் பிரசார நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணத்தில் நிலை நிறுத்தியதோடு, ஜனாதிபதியும் மூன்று தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கிநின்று சூறாவளிப் பிரசாரம் செய்தார்.

தேர்தல் சட்ட விதிகளின்படி எதையெதையெல்லாம் செய்யக்கூடாதோ அவற்றையெல்லாம் செய்தார்கள் அரச தரப்பினர். தொழில்வாய்ப்புத் தருவதாக நேர்முகப் பரீட்சைகளை நடத்தினார்கள். திறப்பு விழாக்கள், அடிக்கல் நடும் வைபவங்கள், அன்பளிப்புக்கள், நன்கொடைகள் எனக் கோலாகலக் கொண்டாட்டங்களுக்குக் குறைவில்லை.





ஜனாதிபதி தலைமையிலான குழுவினர் இப்படியெல்லாம் அதீத பிரயத்தனம் செய்த போதும் வடபகுதி மக்கள் இவர்களுக்கு நல்ல சாட்டையடி கொடுத்து விட்டனர். கிழக்கைப் போன்று வடக்கிலும் அரசுக்குப் பலத்த அடி அல்ல இடியே விழுந்து விட்டது.

இதில் ஒரு வியப்பு என்னவென்றால் இந்தச் சபைகளின் அதிகாரங்களைக் கைப்பற்ற வேண்டும் என்று ஒரு பெரும் யுத்தமே புரிந்த பொருளாதார அபிவி ருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ 'எட்டாப் பழம் புளிக்கும்' என்றது போல் இந்த உள்ளூராட்சிச் சபைகளுக்கு தெருவிளக்குப் போடவும் தண்ணீர் குழாய் பூட்டவும் தானே முடியும். இதற்குமேல் இந்தச் சபைகளுக்கு அதிகாரம் ஏதும் இல்லை என்று கூறியிருக்கிறார்.

தேர்தல் தோல்வியைச் சகித்துக்கொள்ள முடியாததாகவே அவரது இந்தக்கூற்று அமைந்திருந்தது என்பது அனைவருக்கும் தெரியும்.

வடக்கில் தேர்தல் மேடைகளில் பேசிய ஜனாதிபதி, 'நான் உங்கள் சகோதரன்'. இது எமது நாடு, நாம் எல்லோரும் ஒரே குடும்பம். உங்களுடைய பிரதேச நடவடிக்கைகளை நீங்களே பொறுப்பேற்று செய்யவேண்டும். எனவே வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் உங்கள் சகோதரர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்று தமிழில் பேசி அசத்தினார்.

ஆனால் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரோ தேர்தலில் தோற்றவுடன் தெருவிளக்குப் பொருத்தவும், தண்ணீர்க் குழாய் பொருத்தவும்தான் இந்த சபை கள் என்கிறார்.

அதேவேளை தென்பகுதியில் வெற்றியடைந்த உள்ளூராட்சி சபைகளின் பிரதி நிதிகளை அலரிமாளிகைக்கு அழைத்து பாராட்டிய ஜனாதிபதி 'நீங்கள் ஒவ்வொருவரும் அரசின் பிரதிநிதிகள், எனது நேரடிப் பிரதிநிதிகள், உங்களுக்கு பெரும் பொறுப்புக்கள் இருக்கின்றன. உங்கள் பிரதேச அபிவிருத்திகளை நீங்களே மேற்கொள்ள வேண்டும். நீங்கள் ஏதாவது தவறு விட்டால் அது என்னையும் அரசையும் பாதிக்கும்' என்று அறிவுறுத்துகின்றார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூட்டமைப்புக்கு வாக்களித்த மக்கள் இனிமேல் தான் அதன் பலனை அனுபவிக்கப் போகின்றனர் என்று ஆருடம் கூறுகின்றார்.

ராஜபக்ஷ சகோதரர்களின் மாறுபட்ட கருத்துக்களும், அமைச்சர் டக்ளஸின் கூற்றும் மக்கள் மத்தியில் பெரும் சந்தேகத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி உள்ளன.

அபிவிருத்தித் திட்டங்களுக்கு இத்தனை கோடி ரூபா ஒதுக்கி உள்ளோம் எனச்சுட்டிக் காட்டப்பட்டன. அமைச்சர் டக்ளஸ் கூறுவதைப் பார்த்தால் அந்த அடிக்கற்கள், அத்திபாரங்கள் எல்லாம் அப்படியே மண்ணோடு மண்ணாகி விடுமோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

இரா. புத்திரசிகாமணி

எது எப்படியோ ஒரு பொறுப்பு வாய்ந்த அரசு மினி தேர்தல் ஒன்றில் ஏற்பட்ட தோல்விக்காக ஒரு சமூகத்தையே பழிவாங்கி விடக்கூடாது என்பதே புத்தி ஜீவிகளின் ஒன்றுபட்ட கருத்து. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

SRI LANKA RED CROSS SOCIETY

உலகளாவிய மட்டத்தில் மனிதநேயம் கொண்ட செஞ்சிலுவைச் சங்கமும் சர்வதேச செஞ்சிலுவை செம்பிறைச் சங்கங்களின் இணைந்த செயலாற்றுத் திட்டத்தில் இணைந்து கடமையாற்ற விரும்பும் உற்சாகமானவர்களிடமிருந்து தொழில்நுட்ப அலுவலர்களுக்கான விண்ணப்பங்கள் இருபாலாரிடமிருந்தும் கோரப்படுகின்றன.

| பதவி விவரம் | கல்வித் தராதரம், அனுபவம் | கடமையும் பொறுப்புக்களும் |
|---|---|---|
| தொழில்நுட்ப அலுவலர் (Wat-san) சேவைக்கான இடம் யாழ்ப்பாணம் HRM 473 | * தேசிய தொழிநுட்பப் பத்திரம் (NCT) அல்லது கட்டுமானப் பொறியியற்றுறையில் தொழில்நுட்பச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தராதரம்<br>* ஆகக் குறைந்தது 3 வருட அனுபவம் நீர்விநியோகம் மற்றும் சமூக பொதுச் சுகாதார விடயங்களில். | *நீர்விநியோகம், சமூக பொது சுகாதார பொறியியலாளர் அவருக்கு ஒத்தாசையாக தரவுகளையும் மற்றும் வேண்டும் விவரங்களையும் பருத்தித்துறைப் பிரதேச செயலர் பகுதியில் மீள குடியேற்றப்பட்ட பகுதிகளில் இருந்து சேகரித்து மேற் குறிப்பிட்ட பொறியியலாளருக்கு உதவவேண்டும். அத்துடன் மீள் குடியேறியவர்களுக்கான நீர் மற்றும் பொதுசுகாதார கட்டுமான பணிகளைச் செயற்படுத்த வேண்டும். பதவியேற்போர் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தேசிய தலைமையகத்துடனும் மற்றும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையுடனும் மிகவும் நெருங்கய தொடர்பு வைத்து தமது கடமையை நிறைவேற்ற வேண்டும். |

வேண்டப்படும் துறைசார் வல்லுமையும் உயர்ந்த பண்புத் திறமையும்:
- அபிவிருத்தி தொடர்பான திட்டமான விளக்கத் தன்மையையும் இணைந்த முகாமைத்துவமும், சமூக மேம்பாட்டிற்கான இயலுமை திறன்கள் எதிர்பார்க்கப்படுகிறது.
- தாமாக திறம்பட செயல்படுத்துதலும், சுயமாகத் தன்னை முன்னெடுக்கும் தன்மையும் எதிர்பார்க்கப்படுகிறது.
- தொடர்பாடல் தன்மை எதிர்பார்க்கப்படுகிறது.
- கூட்டாக இணைந்து செயற்பட்டு நல்ல திறம்பட்ட முடிவை பெறக்கூடிய தன்மை எதிர்பார்க்கப்படுகிறது.
- கடமைச் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்குத் தக்கதாய் தம்மை ஆக்கிக்கொள்ளும் பொறுப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

சகலருக்கும் பின்வரும் விடயங்கள் பொருந்துவனவாக அமைய வேண்டும்.
- செஞ்சிலுவைச் சங்கம் / செம்பிறை சங்கம் ஆகிய அமைப்புகளின் அடிப்படை கோட்பாடுகளை கடைப்பிடித்தல்.
- செஞ்சிலுவை / செம்பிறைச் சங்கங்களின் நன்னம்பிக்கையினையும் கௌரவத்தையும் பாதுகாக்கக்கூடிய வகையில் செயற்படல்.
- தங்களின் இயலுமைக்கு ஏற்றவாறு கடமைகளை நிறைவேற்ற வேண்டும்

நியமனமானது ஒப்பந்த அடிப்படையினதாகும், திட்டத்திற்கான தேவை ஏற்படின் காலவரை நீடிக்கப்படலாம்.

தேர்ந்து எடுக்கப்படும் விண்ணப்பதாரர் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர், எனவே தயவு செய்து தங்களது விண்ணப்பத்தை 12.08.2011 முன்னதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

Director General,
Sri Lanka Red Cross Society,
104, Dharmapala Mawatha, Colombo 07.

(c/2409)(38)

தயவுசெய்து கடித உறையில் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடவும்.

## மணி விழா நாயகனை வாழ்த்துகின்றோம்



இடம்: இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி
காலம்: 14.08.2011 பி.ப. 2 மணி
(ஞாயிற்றுக்கிழமை)
பேராசிரியர் க.தேவராஜா அவர்கள்
பேராசிரியரின் அன்புள்ளங்கள் இதனைத்
தனிப்பட்ட அழைப்பாகக் கருதி சமுகம் தரவும்

பௌர்ணமி நிலவைப் பார்த்துப் பார்த்துளம் வேர்த்த வானம்
எந்தனின் இருட்டின் மேலாம் ஏதுந்தன் வெளிச்சம் என்றே
தந்தமெய்த் தடைகள் - மேலாம் தாங்கொணாத் துயர்கள் எல்லாம்
வந்திடும் போதும் வென்றே வளர்மதி யானீர் வாழி!

வாழ்த்துவோர்: தேவா மணிவிழாச் சபை

Kalaimagal International College, Kokuvil

## காணி விற்பனைக்குண்டு

கொக்குவில் பொற்பதி றோட்
உடையார் வீதியில் (100மீற்றர்
தூரத்தில்) நல்ல தண்ணீர்க் கிணற்றுடன்
கூடிய (நில. பர 09) ஒன்பது
பரப்புக்காணி விற்பனைக் குண்டு.
பகுதியாகவும் பிரித்துக்
கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
0773621166, 0776354229

(6415)

## கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்
## Engineers & Contractors

★ எல்லாவிதமான கட்டட வடிவமைப்பு
Building Design of all Types
★ உள்ளக வடிவமைப்பு Architectural Interior Design
★ கட்டடங்களுக்கான பரிமாணங்களும் விலை மதிப்புக்களும்
Building Quantities and Estimates மேற்கூறப்பட்ட வேலைகள்
துரித கதியிலும் உத்தரவாதத்துடனும் செய்துகொடுக்கப்படும்

தொடர்பு: திரு.K.மகாலிங்கம்-J.P, (Quantity Surveyor)
இல.86, நீதிமன்ற வீதி, மல்லாகம்.(நீதிமன்றம் முன்பாக)
தொ.பே: 0776272151



# முதலாம் ஆண்டு
# நினைவுநாள்

1929 - 2010

அருட்பெரும் ஜோதியிற் கலந்து நிறைந்த
எங்கள் அன்புத் தந்தை, குருநாதர் முன்னறி தெய்வம் திருமுருக

## சபாபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை

அவர்களது

முதலாம் ஆண்டு நினைவுப் பூஜை வழிபாடுகள் எமது
'பழமுதிர்ச்சோலை' இல்லத்தில் நாளை (08.08.2011) திங்கட்கிழமை
(தமிழுக்கு ஆடிமாதம் 23 ஆம் திகதி) மு.ப. 10 மணிமுதல் நடைபெற
இருப்பதால் அன்பர்கள், உறவினர்கள் அனைவரையும் இந்தப்
பிரார்த்தனை நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும்
பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'பழமுதிர்ச்சோலை;
கரணவாய் மேற்கு, கரவெட்டி.
021 226 3918

திருமதி வி.எஸ்.தாமோதரம்பிள்ளை
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா நகரசபைக் காணியினுள் கடைகள் அமைக்க கடும் எதிர்ப்பு

வவுனியா, ஒக.7

வவுனியா பட்டாணிச்சி புளியங்குளம் முஸ்லிம் மையவாடி அமைந்துள்ள நகரசபைக்குச் சொந்தமான காணியினுள் கடைகள் நிர்மாணிப்பது தொடர்பாக வவுனியா நகரசபையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கிடையில் கடும் வாக்கு வாதங்கள் நடந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வவுனியா நகரசபையின் உபதலைவரான எம்.எம்.ரதன் தெரிவிக்கையில்:

நகரசபைக்குச் சொந்தமான மன்னார் வீதியிலமைந்துள்ள முஸ்லிம் மைய வாடிக்குள் 26 கடைகள் மற்றும் கலாசார மண்டபம் அமைப்பதற்கு நகரசபையின் அனுமதி கோரப்பட்டது.

ஆனால் உள்ளூராட்சிச் சட்டத்தின் 12 ஆவது விதியின் பிரகாரம் இதனை மேற்கொள்ள முடியாதென நகரசபையின் விசேட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு அவ்வாறே அனுமதி கோரியவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

மீண்டும் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்ற நகரசபையின் மாதாந்தக் கூட்டத்திலும் இந்த விடயம் தொடர்பாகக் கேள்வி எழுப்பப்பட்டது. ஆனால் பெரும்பான்மையான சபை உறுப்பினர்களின் ஆதரவுடன் இந்தக் கேள்வி தொடர்பான கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

ஆனால் சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தாம் கடைகளை அமைக்கப்போவதாகக் கூறியதைத் தொடர்ந்து நகரசபைத் தலைவர் கடந்த 29 ஆம் திகதி வவுனியா பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பாக முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தார்.

பின்னர் கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியூதீன் நகரசபைத் தலைவரைத் தனியாக அழைத்து மிரட்டியதால் அந்த முறைப்பாடு நகரசபைத் தலைவரால் மீளப் பெறப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

இந்த நிலையில் கடந்த இரண்டாம் திகதி நகரசபையின் விசேட கூட்டமொன்று இந்த விடயத்தை ஆராய்வதற்கெனக் கூட்டப்பட்டது. இதன்போது ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் பின்வரும் தீர்மானங்கள் சபையில் நிறைவேற்றப்பட்டன. அமைச்சர் றிசாத் பதியூதீன் நகரசபைத் தலைவருக்கு மிரட்டல் விடுத்தமை கண்டிக்கத்தக்கது, நகரசபைக்குச் சொந்தமான காணியில் நகரசபையின் அனுமதியின்றி எவ்வித கட்டடப் பணிகளும் இடம்பெறலாகாது, எந்தக் காரணம் கொண்டும் அந்த இடம் முஸ்லிம் மையவாடிக்கென வழங்கப்படலாகாது, நகரசபைச் செயலாளர் வே.வசந்தகுமாரை நகரசபை உறுப்பினரான அப்துல்பாரி மிரட்டியமை கண்டனத்துக்குரியது மற்றும் தற்போதைய தீர்மானம் தற்போது கட்டப்பட இருக்கும் கடைகளுக்கானதே தவிர ஏற்கனவே கட்டப்பட்ட கடைகளுக்கானதல்ல என்பவையே அந்தத் தீர்மானங்களாகும்.

மேலும் இந்தப் பிரச்சினை தொடர்பாக வவுனியா நகர சபையால் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணை இந்த மாதம் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-4)

## ஆலயத் திருவிழா

மன்னார்,ஒக 7

மன்னார் மறை மாவட்டம் செட்டிகுளம் பெரிய கட்டு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளதாக செட்டிகுளம் பங்குத் தந்தை அருட்திரு பேனோ அலெக்சான்டர் சில்வா தெரிவித்தார்.

இந்த ஆலயத் திருவிழா கடந்த 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இன்று காலை 7.15 மணியளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை தலைமையில் திருவிழா திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டுத் திருச் சொரூபப் பவனியும் இடம்பெறவுள்ளது.

(க-601)

## மன்னார் மடுத் தேவாலயத்தில் திருவிழா

மன்னார், ஒக. 7

மன்னார் மடுத்தேவாலயத்தின் இந்த ஆண்டுக்கான ஒகஸ்ட் மாதத் திருவிழா நேற்று சனிக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது என ஆலயப் பரிபாலகர் அருட்தந்தை எமிலியான்ஸ்பிள்ளை தெரிவித்தார்.

இந்தத் திருவிழாவுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

குடிதண்ணீர், சுகாதாரம், பாதுகாப்பு, தங்குமிடம் போன்ற விடயங்களில் கூடிய கவனம் செலுத்தி அவற்றுக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இத்தத் திருவிழாவின் போது தொடர்ந்து நவநாள் திருப்பலிகள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 15 ஆம் திகதி இறுதி நாளாகும். இம்முறை ஏழு லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் ஆலயத்தில் கூடுவார்கள் எனத்தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-601)

## கிளிநொச்சியில் ஆடைத் தொழிற்சாலை

கிளிநொச்சி, ஒக. 7

கிளிநொச்சி அறிவியல் நகரில் நிறுவப்படவுள்ள பெரியளவான ஆடைத் தொழிற்சாலை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

அறிவியல் நகரில் உள்ள 15 ஏக்கர் நிலப்பரப்பில் மாஸ் அக்ரிவ் என்ற ஆடைத் தொழிற்சாலை நிறுவனம் தனது தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. அது தொடர்பான கலந்துரையாடலே இடம் பெற்றது.

அதில் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன், மாஸ்அக்ரிவ் நிறுவனத்தின் உயர்அதிகாரிகள், இலங்கை முதலீட்டுச்சபையின் வடபகுதி அலுவலக உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அந்த நிறுவனத்துக்கான அடிக்கல் இந்த மாத இறுதிக்குள் நடப்படவுள்ளது. நிறுவனத்தில் வேலைவாய்ப்புப் பெறவுள்ள வடபகுதியைச் சேர்ந்தவர்களுக்கு பயிற்சி வழங்குவது உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாகவும் இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

நிறுவப்படவுள்ள இந்த ஆடைத் தொழிற்சாலை மூலம் ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்க முடியும் என அந்த நிறுவனம் எதிர்பார்க்கிறது. (க-14)

## எட்டிப்பார்க்காத வசந்தம்...



யார் காரணம்?: கிளிநொச்சி அக்கராயன் அ.த.க. பாடசாலையின் மோசமாகச் சேதமடைந்த கட்டடம் ஒன்றினுள்ளேயே மாணவர்கள் சிலர் இன்னும் கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். (410)

## புதுக்குடியிருப்பில் மீள்குடியமர்வு

முல்லைத் தீவு, ஒக 7

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட உடையார்கட்டு தெற்கு, உடையார் கட்டு வடக்கு, வள்ளுவர்புரம், தேராவில், சுதந்திரபுரம் கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களில் மீள்குடியமர்வுக்காக சொந்த இடத்துக்குச் செல்ல விரும்பும் நண்பர்கள், உறவினர்களுடன் தங்கியுள்ள குடும்பங்கள் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மீள்குடியமரக் கூடிய ஆயத்தங்களுடன் உடையார்கட்டு மகா வித்தியாலயத்துக்குச் சமுகம் அளிக்குமாறு முல்லைத் தீவு அரச அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்துடன் தாங்கள் இது வரை காலமும் தங்கியிருந்த கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு அப்பகுதி உதவி அரச அதிபரால் மேல் ஒப்பமிட்டு விடுப்புக் கடிதம் சமர்ப்பித்து தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

(க)

## முல்லை. இளைஞன் மீது படையினர் தாக்கு

முல்லைத்தீவு, ஒக. 7

முல்லைத்தீவு கொக்குளாய் கருநாட்டுக் கேணிப்பகுதியில் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட இளைஞர் ஒருவர் முள்ளியவளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மு.ப. 11.30 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மார்க்கண்டு ஜெயானந்தன் (வயது 22) என்ற இளைஞனே சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

அந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது: மேற்படி பகுதியில் இரு குடும்பங்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக அங்கு சென்ற இராணுவத்தினர் கூடியிருந்த மக்களை அடித்து விரட்டியுள்ளனர்.

அதன் பின் இராணுவத்தினர் இளைஞரைப் பிடித்துச் சென்றனர் என்று சம்பவத்தை நேரில் பார்த்த மக்கள் தெரிவிக்கின்றனர். அந்தப் பகுதியில் உள்ள இராணுவ முகாமுக்கு பிடித்துச் செல்லப்பட்ட இளைஞர் இராணுவத்தினரால் கடுமையான முறையில் தாக்கப்பட்ட நிலையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பின்பு தனது வீட்டுக்கு வந்த இளைஞர் வாந்தி எடுத்ததுடன் மயங்கி விழுந்ததை அடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதே பகுதியில் கடந்த மாதமும் ஒருவர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டதாக அப்பகுதி மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

குடும்பத்தகராற்றில் இராணுவம் தலைப்போடுவதை நிறுத்த உதவுமாறு அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-6)

## நெல் வயல்களில் தத்திகளின் தாக்கம்

கிளிநொச்சி மாவட்டத்தில் கபிலநிறத் தத்திகளின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கபிலநிறத் தத்திகள் நெற்பயிரைப் பாதிக்கும் பிரதான பீடைகளில் ஒன்றாகும். இவை நெற்பயிரின் அடியிலிருந்தே தாவரச் சாற்றை உறிஞ்சிக் குடிப்பதால் மட்டங்கள் உலர்ந்து பயிர்கள் காய்ந்து விடுகின்றன. இது தத்தி எரிவு எனப் பொதுவாக அழைக்கப்படும்.

தத்திகளால் பாதிக்கப்பட்ட நெல் வயல்களில் பின்வரும் அறிகுறிகளைக் காணமுடியும். நீர் மட்டத்தில் வெள்ளை நிறச் செதில்கள் மிதக்கும், வயலில் பயிர்கள் அடர்த்தியாகவுள்ள பகுதியைப் பிடித்து அவதானிக்கும் போது அடிப்பகுதியில் இளம் மஞ்சள் நிறமான சிறிய பூச்சிகள் காணப்படுவதை அவதானிக்கலாம். இதன் தாக்கம் அதிகளவில் உள்ள வயல்கள் தொட்டம் தொட்டமாக எரிந்தது போன்று தோற்றமளிக்கும். வயலில் உள்ள நீரை முற்றாக வடித்து விடுதல், பயிர்கள் மீது சூரிய வெளிச்சம் விழுமாறு பயிர்களைப் பிரித்து விடல் போன்றவற்றின் மூலம் கபில நிறத் தத்திகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

மேலும் பயிரின் அடிப்பகுதியில் தத்திகள் அதிகளவில் காணப்படுவதால் சிபார்சு செய்யப்பட்ட பூச்சி நாசினிகளைப் பயிரின் அடிப்பகுதி நன்கு நனையும்படி விசிறுதல் வேண்டுமெனக் கிளிநொச்சி பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) தெரிவித்துள்ளார். (க)

## நீர்ப்பாசன புனரமைப்பு வேலைகள்

முல்லைத்தீவு, ஒக. 7

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு முல்லைத்தீவு மாவட்டத்தில் வடமாகாண சபையின் ஊடாகப் பல நீர்ப்பாசன புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ளவுள்ளது. முரண்பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகாலக் கருத்திட்டத்தில் அடிப்படைச் சமுதாயத்துக்கான சேவைகளை மேம்படுத்தல் என்பதன் கீழ் இவ்வேலைகள் நடைபெற உள்ளன.

இலங்கை அரச நிதியின் மூலமும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் மூலமும் இந்த நீர்ப்பாசன புனரமைப்பு வேலைகள் நடைபெறவுள்ளன.

மடவாள சிங்கம் நீர்ப்பாசன அணைக்கட்டு வேலைகள், வாய்க்கால் புனரமைப்பு வேலைகள், விசுவமடு நீர்ப்பாசன அணைக்கட்டு வேலைப் புனரமைப்பு, வாய்க்கால் புனரமைப்பு வேலைகள், உடையார்கட்டு நீர்ப்பாசன அணைக்கட்டு புனரமைப்பு ஆகிய வேலைகளுக்கான கேள்விகளை தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்கள் இந்த மாதம் 20 ஆம் திகதி வரை சமர்ப்பிக்க முடியுமெனத் திட்டப்பணிப்பாளர் எந்திரி க.சோ.சிவபாதம் அறிவித்துள்ளார்.

(க-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தும் சமயசொற்பொழிவுகளும் கலைநிகழ்வுகளும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் எஸ்.பாலச்சந்திரன் ''இந்துமத விழுமியப் பண்புகள்'' எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவும் ஆவரங்கால் அருள்முருகன் அறநெறிப்பாடசாலை, ஏழாலை ஆத்மஜோதி அறநெறிப்பாடசாலை ஆகியன பங்கு பற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ம-313)

* * *

யாழ்ப்பாணம், ஒக.7

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழாவை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் நாவலர் மண்மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த இசையரங்கில் பொன்னம்பலம் சுபாஷசந்திரன், எ.ஜெயராமன், என்.செல்வச்சந்திரன், கே.கண்ணதாசன், ஆ.சிவராமன் ஆகியோர் கலந்துகொள்வர். (ம-313)

# சஞ்சிகைகள் வெளியீடு

நாவற்குழி, ஒக. 7

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்களின் கையெழுத்துச் சஞ்சிகைகள் கடந்த புதன் கிழமை வெளியிடப்பட்டன.

பாடசாலை முதல்வர் திருமதி லலிதமலர் முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஓய்வு நிலை ஆசிரியர் எஸ்.இலங்கநாயகம் கலந்துகொண்டார். (ம-121)


கட்டார்

முன்னணி கம்பனி ஒன்றில்
விஷேடமாக தமிழ் ஆண்களுக்கு
உடனடி வேலை வாய்ப்புகள்..!

| | | |
|---|---|---|
| வேலையாட்கள் (திறமையுள்ள) Skilled Labourer | 15 | சம்பளம் Qatar Riyal 900/- + O/T |
| உதவியாளர்கள் Helper | 10 | சம்பளம் Qatar Riyal 800/- + O/T |

அரசாங்க கட்டணம் மாத்திரம் | QR 1 - Rs: 31.50

நேர்முகத் தேர்வு எமது நிறுவனத்தில் இடம் பெறும்

- புதுப்பித்துக்கொள்ளக்கூடிய 2 வருடகால ஒப்பந்தம் (சோதனைக் காலம் முதல் 3 மாதம்)
- 1 நாளைக்கு 8 மணித்தியாலம் வேலை
- கிழமைக்கு 1 நாள் விடுமுறை
- தங்குமிடம் இலவசம்
- வந்து செல்வதற்கு (ஒப்பந்தக் காலம் முடிவில்) விமானச்சீட்டு இலவசம்
- சாப்பாடு வழங்கப்படமாட்டாது
- மருத்துவம் மற்றும் அனைத்து சட்டதிட்டங்களும் கட்டார் நாட்டு ஊழியர் சட்டங்களுக்கு அமைவானது.

உடனடிப் பயணம்

தாமதமின்றி வாருங்கள்..!

WORLD TRUST AGENCIES
இல. 8.1/1. முதலாம் மாடி. புத்தளம் வீதி. குருநாகல்.
No.8,1/1, 1st Floor, Puttlam Road, Kurunegala.
Tel: 077-3523540, 072-7610610 Fax: 037-2222472
E-mail: world_trst@yahoo.com
Labour License No: 2170
AL/2170 Advt/10/11








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இசைப் பயனால் வந்த யாழ்ப்பாணம்

தமிழ் என்றால் இனிமை என்று பொருள். செவிக்கு இன்பம் தருவது இசை. இசையால் வச மாகாதது எதுவுமில்லை. இந்தத் தமிழோடு இசையும் சேர்ந்தால் நாவுக்கும் செவிக்கும் இன்பம்! அதனால்,

*''சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்*
*தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்''*

என்கிறார் அப்பர் அடிகளார்.

இயல், இசை, நாடகம் என்னும் முப்பாலால் விளைந்த தமிழில் இசைத்தமிழ் நடுவன் அமைந்து இயலையும் நாடகத்தையும் இனிமைப்படுத்தி நிற்கிறது. வல்லினம் மெல்லினம், இடையினம் ஆகிய மூன்று எழுத்துக்களால் தமிழ்ப் பதம் அமைந்து இருப்பதும் ஓர் அழகுதான்.

இசைத் தமிழ் என்பதும் தமிழ் இசை என்பதும் ஒரு பொருள் தருவனவே.

முத்தமிழ் மொழியைக் குறுமுனி அகத்தியர், பொதிகை மலையில் வைத்து வளர்த்தார் என்று சொல்லப் பெறுகின்றது. தென்னவரான பாண்டிய மன்னர், மதுரைத் தமிழ்ச் சங்கம் அமைத்துப் புகழொடு போற்றினார்கள்; தேவார இசைப்பாடல்கள் நெருப்பிலே வேகாது நின்றும், வைகை நதியிலே எதிரேறிச் சென்றும் நாயன்மார் காலத்தில் சிறப்புற்றன; கற்றோர் மனதிலே நின்று வளர்ந்த தமிழ், பூமியில் வாழும் மக்கள் அணைப்பிலே இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

**இலக்கியக் காட்சி – 98**

*பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து,*
*சங்கத்து*
*இருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை*
*நெருப்பிலே நின்று, கற்றோர் நினைப்பிலே நடந்து ஓர் என*
*மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்*

(தமிழ் அணங்கு) இதனைப் பாரதியார்,

*முத்தமிழ் மாமுனி நீர் வரையே நின்று*
*மொய்ம் புறக் காக்கும் தமிழ் நாடு...*

எனக் கூறுவதும் காணலாம்.

தமிழ் இசைப்பாடல் (தேவாரம்) பாடுவோர் ''ஓதுவார்'' என அழைக்கப் பெற்றனர்.

*காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி*
*ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது*
*வேத நான்கினும் மெய்ப்பொருளாவது*
*நாதன் நாமம் நமச்சிவாயவே*

என்ற தேவாரத்தில் வரும் ஓதுவார் (ஓதுகின்றவர்) என்ற சொல் பாடல் இசைப்பவருக்குப் பெயராய் அமைந்து இருந்தது.

மேலும் இராவணன் கைலை மலையை எடுக்கப் போய், அதன் அடியில் சிக்கி வருந்தியபொழுது (அடுக்கற் கீழ்க் கிடப்பினும்... தேவாரம்) நாரதர் ஆலோசனை கேட்டு சாமகானம் இசைத்து இறைவன் அருள்பெற்று மீண்டான் எனப் புராணம் கூறுகின்றது.

மேலும் திருஞானசம்பந்தர்,

*''பண்ணொன்ற இசை பாடும் அடியார்கள் குடியாக*
*மண்ணின்றி விண்கொடுக்கும் மணிகண்டன்.....''*

தேவாரத்தில் பண் இசைத்துப் பாடும் அடியார்கள் இறையருள் பெற்று மண்ணுலகத்தினிற் பிறவி ஒழித்து விண்ணுலகு சேருவர் என்று கூறுதல் நோக்கத்தக்கது.

தமிழ் இசையானது பக்திப் பாடல்களில் மாத்திரமன்றி விவசாயம் முதலிய தொழில் புரிவோர்களைப்பின்றிப் பணி செய்யவும் குழந்தைகளைத் தலாட்டவும் போர்க்களத்தில் வீரங் காட்டவும் நாட்டுப்பற்றை வளர்க்கவும் (ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே - பாரதியார்) இசைக்கப்படுகின்றன.

தமிழிசையில் விற்பன்னரான அகத்தியரோடு இராவணன் தமிழிசைப் பாடலில் தோற்றான் என்றும் அப்பொழுது இராணவன் உங்களுக்கு யான் எவ் வகையில் உதவலாம் என்று அகத்தியரிடம் கேட்க, தமிழ்நாட்டு மக்களைத் துன்புறுத்தாமல் விடுவாய் என்றால் எனக்கு மகிழ்ச்சிதரும் என அகத்தியர் கூறிய போது இராவணன் பொதிகை மலையையும் தமிழ் நாட்டையும் விட்டு நீங்கினான் எனத் தொல்காப்பியப் பாயிர உரை கூறுவதாக அறிஞர் கூறுவர். அதனால் தமிழ் இசை நாட்டைக் காக்கவும் உதவியாக இருந்தது எனக் கொள்ளப் பெறுகின்றது.

மேலும் முற்காலத்தில் யாழ் வாசித்துப் பாடும் நல்லிசைப் புலவர்களாகப் பாணர்கள் இருந்தார்கள். இவர்களை அந்தக் காலத் தமிழ் மன்னர்கள் ஆதரித்து வந்தனர். பாணர் என்னும் ஆண் பாலாரும் விறலி என்னும் பெண் பாலாரும் இசையில் வல்லவர்களாக இருந்துள்ளனர்.

ஒருமுறை பாணன் ஒருவன், பொருள் தேடும் நோக்கில் ஈழ நாட்டுக்குப் போக விரும்பினான். யாழ் வாசித்துத் தமிழிசைப்பதில் வல்லவனாக அந்தப் பாணன் புறப்படும் போது அவனது மனைவி, வளநாடும் யானையுந் தருவான் ஈழமன்னன் என்று பரிகாசம் பண்ணி வழியனுப்பி வைத்தாள்.

பாணன் அரச சபையை அடைந்து தன் நிலைமையைக் கூற அவன் பார்வையிழந்தவன் எனக் கூறி ஒரு திரை மறைவில் இருக்கச் செய்தார்கள். ஆயினும் தனக்குத் திரை போடப்பட்டதை ஞானக் கண்ணால் உணர்ந்த யாழ்ப்பாணன்,

*''நரை கோட்டு இளங்கன்றும் நல்வள நாடும் நயந்தளிப்பான்*
*விரையூட்டு தார்ப்புய வெற்பீழ மன்னன் என்றே விரும்பிக்*
*கரையோட்டமாக மரக்கலம் போட்டு உனைக் காணவந்தால்*
*திரை போட்டிருந்தனையே ஏலேல சிங்க சிகாமணியே''*

என்று பாடினான். அந்தத் தமிழிசையில் மனம் நெகிழ்ந்த மன்னன், திரையை விலக்கும்படி செய்து

**நா.நல்லதம்பி, மட்டுவில்**

பாணன் விரும்பும் பரிசு என்ன என்று கேட்டான். தனது மனைவி சொன்ன பரிகாச வார்த்தைகளைப் பாணன் சொன்னதும் அவ்வண்ணமே பரிசில்களைக் கொடுத்தான் மன்னவன்.

அன்று மணற்றிடல் ஆக இருந்த யாழ். குடாநாடு யாழ்ப்பாணனின் தமிழிசைப் பயனால் அவனுக்குப் பரிசாகக் கிடைத்தது. தமிழ் நாட்டிலிருந்து தமிழர்கள் வந்து குடியேறினார்கள். அதுவே இன்று நாம் வாழும் யாழ்ப்பாணம்.

பாணர் என்ற யாழில் வல்ல இசைவாணர் இன்று இல்லாவிட்டாலும் அவர்களின் ஞாபகமாக யாழிசையின் புகழ் கூறித் தமிழிசையின் இனிமையோடு இன்றும் வாழ்கின்றது யாழ்ப்பாணம்!!! வாழ்க தமிழ் இசை; வாழ்க இசைத் தமிழ். ★

# பரிசு



**சிறுகதை**

**நீ.செ. செல்வதாசன்,**
**அரியாலை.**

பரிசு. அதுவும் பக்கத்து வீட்டுக்காரனுக்கு!!

' பாரதிநேசன்' எழுத்தாளன் ஏகாம்பரம். அவருடைய சிறுகதை ஒன்று பரிசு பெற்றாலும் பெற்றது.....

அதனைத் தொடர்ந்து பாராட்டு விழா என்ன! கௌரவிப்பு என்ன?!.... எல்லா விழாக்களுக்கும் ஏகாம்பரம் தன் சகதர்மினியுடன் தான் சமுகமளிப்பார். அவளோ பாராட்டு விழா முடிந்து நேராக தன்வீடு செல்லமாட்டாள். முதலில் என்வீடு, என் மனைவியிடம் தான் புதியசாறி (ஒவ்வொரு பாராட்டு விழாவுக்கும் ஒவ்வொரு புதிய சாறி) கிடைத்த பாராட்டுப்பத்திரங்கள், விழுந்த மாலைகள், பெரியோர் பேசிய பேச்சுக்கள்... எல்லாவற்றையும் சொன்ன பின்தான் தன்வீடு செல்வாள்.

போதாக்குறைக்கு அடுத்த நாள் தினசரியில் பெரிய அளவுகளில் செய்தி. பாராட்டுப்பத்திரம் வழங்குகையில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள்... புகைப்பட சதுரத்துள் ஓர் ஓரத்தில் மேடையில் 'மிஸ்ஸிஸ்' ஏகாம்பரம். அவற்றை என் + தர்மினியிடம் காட்டுகையில் மிஸ்ஸிஸ் ஏகாம்பரத்தின் முகத்தில் பெருமை கொப்பளிக்கும்.

அங்கு பக்கத்து வீட்டில் பரிசு!

இங்கு என் வீட்டில் எரிவு! எரிவு!!

'' அந்த ஏகாம்பரம் அப்படியென்ன பெரிய படிப்பாளி? எட்டாம் வகுப்பு அதுவும் ஒழுங்கா பாஸ் பண்ணயில்லை. ஆனால் இண்டைக்குப் பெரிய எழுத்தாளன். பாராட்டு''... ஆரம்பித்தாள் என் மனைவி.

''ஓமப்பா! எங்கடை பக்கத்து வீட்டுக்காரன் பிரபல்யம் ஆகிறது எங்களுக்குப் பெருமைதானே!'' எனக்கூறி மகிழ்ச்சியில் மிதந்தேன்.

ஓமோம்! ஓமோம்!! பக்கத்து வீட்டில பரிசு கிடைச்சால் நமக்குப் பெருமைதான்... பக்கத்து வீட்டை விட, நம் வீட்டில பரிசு கிடைச்சால் 'இன்னும்' பெருமையாக இருக்கும்''... 'இன்னும்'

''என்னப்பா இப்ப சொல்லுறாய்?''

''இஞ்ச பாருங்கோ! ஏகாம்பரத்தை விட நீங்கள் படிப்பில எவ்வளவோ மேல். எஸ்ஸெஸ்ஸி முதல் முறையிலேயே தமிழுக்கு ''டீ'' யோட பாஸ் பண்ணினணீங்கள். அப்படியான நீங்கள் ஏன் ஒரு எழுத்தாளனாக வரமுடியாது?''. உறுதியாகக் கேட்டாள்.

அவளின் அடி மனது எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாய் புரிய ஆரம்பித்தது....

எனக்குப் பரிசு கிடைக்க வேண்டும்...!

பாராட்டு விழாக்கள் நடக்க வேண்டும்!!

அவளும் சமுகமளிக்க வேண்டும். படங்கள் பத்திரிக்கைகளில் வெளிவர வேண்டும்... டும்...டும்... முடிகின்ற காரியமா?

என்நிலையை நினைத்துப்பார்க்க...

என் மனைவி நினைத்ததை முடிப்பவள். என்னை எழுத்தாளனாக்க, சகல வளங்களையும் பிரயோகிக்கத் தயங்க மாட்டாள். எவ்வளவு பணமானாலும்அள்ளி வீசுவாள்... அவள் பிறந்த சூழல் அப்படி.

எவ்வளவு கஷ்டமானாலும் தாங்குவாள்! கடினமாக உழைப்பாள்!!. அவள் வளர்ந்த சூழல் அப்படி. என்னை ஓர் எழுத்தாளனாக்க என்ன செய்ய வேண்டுமோ? எல்லாவற்றையும் செய்தே தீருவாள்.

............

நானாவது எழுத்தாளனாக, அதுவும் 'பிரபல' எழுத்தாளனாக உருவாகுவதாவது?

நினைக்கவே தலையைச் சுற்றியது. எப்படி இதிலிருந்து தப்புவது?

மண்டையைப் பிய்த்துக் கொண்டேன்.

''இஞ்சரப்பா! எந்த ஒருத்தனும் ஒரு துறையில பிரபல்யமா விளங்குறதுக்கு அவர்களுக்குப் பின்னே ஒரு பெண் காரணமாக இருந்திருக்கிறாள். எந்த ஒரு பெரியவரின்ர சரித்திரத்தைப் படி... அவர்களின் வெற்றிக்குத் தாயோ, தாரமோ, காதலியோ கடைசி ஒரு பேயோ காரணமாக, தூண்டுகோலாக இருக்கிறதைக் காணலாம். ஒருத்தர் பேரும் புகழோடும் இருப்பதற்குத் தனித்திறமை மட்டும் காரணமல்ல. பின்னால இருக்கிற உந்து சக்தியும் காரணம்.'' என்று ஒரு போடு போட்டேன்.

என்னில் திறமை இல்லாமலில்லை அந்தத் திறமை, மேதாவித்தனம் வெளி வராமலிருப்பதற்கு அவளும் காரணமென்பது போலல்லவா சொன்னேன்?

என் திறமையையும் எடுத்துக் காட்டி, அவள் மீதுமல்லவா பழியைப் போட்டேன். ஆஹா! ஒரு கல்லில் இரு மாங்காய்கள்.

இனி நான் ஒரு எழுத்தாளனாக - கவனிக்கவும் பிரபல எழுத்தாளனாக - வரவேண்டுமென நச்சரிக்கவே மாட்டாள். விட்டது தொல்லை என நிம்மதியடைந்தேன்.

அடுத்தநாள்,

வழக்கத்துக்கு மாறாக என் மேசையில் சில சஞ்சிகைகள் காணப்பட்டன. எடுத்துப்பார்த்தேன். சில பக்கங்களில், சில வரிகளின் கீழ் சிவப்புப் பென்சில் கோடு. கீழ் கோடிட்டதை வாசித்தேன்.

தரையிலமர்ந்து, முன்னே ஓர் உயரமான மணையினில் தாள்களை வைத்து எழுதினால் தான் என்னால் திறமையாக எழுத முடியும் 'மூட்' வரும். ஒரு எழுத்தாளன் - பிரபல எழுத்தாளன் தன்னைப் பற்றி எழுதியிருந்தார்.

புரிந்தது.

என் மனையாள் கொள்கையில் இருந்து இம்மியும் விலகியதாக இல்லை.

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் பெருமையை பேச மறுக்கும் சமுதாயம்

-கோபி, வட்டூர்.



பொல்லாத இந்த உலகத்தில் பெண்ணே நீ என்றும் விழிப்பாயிருப்பது அவசியமாகும். ஏனெனில் பெண்களைப் பாராட்ட முன்வராத இந்தச் சமுதாயம் தூற்றுவதற்கு மட்டும் முண்டியடித்துக் கொண்டு வந்துவிடும். இவ்வாறான சமூகத்தில் இருந்துகொண்டு போற்றுவார் போற்றட்டும் தூற்றுவார் தூற்றட்டும் என எண்ணி அசண்டையீனமாக இருந்து விடாதே. குறிப்பாகப் பெண்கள் நல்லது செய்தால் கண்ணுக்குத் தெரியாத இந்த உலகத்தில் பெருமையையும் பேச மாட்டார்கள். ஆனால் ஒரு சிறிய தவறு நடந்துவிட்டால் அவளுக்குப்பல பட்டங்கள் சூட்டி கேவலப்படுத்துவதோடு தீங்கு செய்யவும் முன்வந்துவிடுவார்கள்.

பெண்மை என்றால் மென்மையானவள். ஆனால் எல்லா விடயத்திலும் மென்மையாக இருந்துவிட்டால் கடித்துக் குதறி விடுவார்கள் என்பதை ஒவ்வொரு பெண்ணும் புரிந்துகொள்ள வேண்டும். இன்று பெண்களுக்கு இளைக்கப்படும் கொடுமைகளும், அநீதிகளும் ஏன் இன்னும் சொல்லப் போனால் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும் அளவுக்கு மிகவும் மோசமாக நடக்கின்றன. அது மட்டுமன்றி அவர்கள் பேசுவதற்குக் கூட தடைவிதிக்கும் அளவுக்கு மிரட்டல்களும் அச்சுறுத்தல்களும் அதிகரித்த வண்ணமே உள்ளன. அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பேன் என்பது முதுமொழி. ஆனால் இன்று சிலர் அப்படியே பெண்கள் இருந்துவிட வேண்டும் என நினைக்கிறார்கள். தமக்கு சரி நிகராக இவர்கள் நடந்து கொள்வது சமூகத்தில் உள்ள சிலருக்குப் பெரும் பிரச்சினையாக உள்ளது.

பெண் விடுதலை, பெண் சுதந்திரம் எனப் பெயரளவில் மட்டுமே பேசுவார்கள். ஆனால் ஒரு பெண் சமுதாயத்தில் பெரிய பதவிவகித்து விட்டால் என்ன குதிகுதிக்கிறார்கள். அந்தப் பெண்ணை வாயடைக்கும் அளவுக்கு இல்லாத பொல்லாத விடயங்களைக் கூறி கீழ்த்தரமாகப் பேசுமளவுக்கு மோசமான சொற்பிரயோகங்களை பாவிப்பது வேதனைக்குரிய விடயமே. இந்த நிலை எப்போது மாறுமோ என்பதே இப்போதைய பெண்களின் ஏக்கம். பெண்களுக்கு இளைக்கப்படும் கொடுமைகள் முற்றாகக் களையப்பட வேண்டும். பெண்கள் நாட்டின் கண்கள் என்பார்கள். இது பேச்சளவில்தானா? நடைமுறையில் பெண்ணைக் கொலை செய்யுமளவுக்கு அவளது வாழ்வு கேள்விக்குறியாகவே உள்ளது. பெண்ணாகப் பிறந்துவிட்டால் பாவமா? சோகமே வடிவாக பெண்களைத் துயரில் ஆழ்த்தும் சமூகம் ஒன்றுதான் இன்னமும் இப்படியே நடந்து கொள்கிறதோ தெரியவில்லை.

தமது தேவைகளுக்கு கருவியாகப் பெண்களைப் பாவித்து விட்டு தூக்கி எறிவதற்குப் பெண்கள் பொம்மைகளா? என்பதை ஒவ்வொருவரும் புரிந்து நடந்துகொள்ள வேண்டும். பெண் பாவம் பொல்லாதது என்பர். பெண்கள் கவலையைத் தீர்ப்பதற்கு பயன்படுத்தும் ஆயுதமே கண்ணீர். இதனை எல்லா நேரத்திலும் அழுது தீர்க்க முடியாது. எனவே பெண்களது கருத்துக்கள் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்; அவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளிக்கத்தவறாதீர்கள்.

# அம்மாவுக்கு ஓர் அழைப்பு

பள்ளி செல்லும் பிள்ளைக்கு
எதற்கு அம்மா கைத்தொலைபேசி?
கப்பல் ஏறி அவன்
பள்ளி செல்லவில்லையே?
பக்குவமாய் எடுத்துரைத்து-
பல்கலைகள் கற்றிடவே
பகுத்தறிவு பெருகிடவே
ரியூற்றரிகள் தேவையெனில்
பிள்ளையை அனுப்பிவிட்டு
பின்தொடர்ந்து கவனி
அன்பான அன்னையரே
எனது தாழ்வான வேண்டுகோள்
அன்னையாய் மட்டும் இருந்திடாமல்
நல்தோழியாய் நீ இருந்து
உன் மகளை நீ அழைத்து
பெண்மையின் மகத்துவத்தை
துல்லியமாய் விளக்கிவிடு
அதை விடுத்து சீரியலை
பார்த்துவிட்டு சிந்தனையை
அதில் பதித்துவிட்டால்
உன் பிள்ளை வாழாது
பாதியிலே மாண்டுவிடும்.



-சு.வனிதா,
ஸ்ரீ முருகன் பள்ளி, பிராஞ்பற்று.

# புனிதமான இல்லற வாழ்வில் புரிந்துணர்வு அவசியமானது



-நிலா

இல்லற வாழ்வு என்பது திருமணத்தின் பின் ஏனைய உறவுகளை விட ஒவ்வெருவரும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் இனிய வாழ்வாகும். இந்த வாழ்வை ஆரம்பிக்கும்போதே ஒவ்வொரு பெண்ணும் தனது கணவன் தனக்கு மட்டும்தான் என நினைப்பது யதார்த்தம். அதேபோல்தான் ஆண்களும் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் ஒரு சில சமயங்களில் ஆண்கள் இதனைப் புரிந்து கொள்வதில்லை. பெண்கள் பொதுவாகவே தனது கணவன் தன்னைபுரிந்து தனது தேவைகளை பூர்த்தி செய்வான் என எதிர்பார்க்கிறாள். ஆனால் எல்லா ஆண்களும் அப்படி இல்லை.

பெண்கள் என்றால் அடிமைகள் என்ற நிலையில் தமக்கென்ன என்பதுபோல் நடந்து கொள்கிறார்கள். இதனால் குடும்பத்தில் அன்பு விட்டுக்கொடுப்பு புரிந்துணர்வு என்பன குறைவடைந்து விடுகின்றன. எல்லா பெண்களும் தன் கணவனை கண்கண்ட தெய்வமாகப் போற்றுகிறாள் சின்னச் சின்ன விடங்களில் கூட கணவனிடம் கேட்டே முடிவெடுக்கிறாள் அது பெண்களின் இயல்பான குணமே ஆனால் சில ஆண்கள் அதனை மதிக்கத் தவறுகிறார்கள். தனித்து வாழ்தல் என்பது பார்ப்பவர்கள் கண்ணுக்குப் பகட்டாய் தெரியும். ஆனால் பெண்களுக்குள் இருக்கும் வேதனை, கவலைகளை மற்றவர்கள் புரிந்து கொள்வதில்லை. ஆண்கள் எப்படியும் வாழ்ந்து விடலாம் ஆனால் பெண்கள் தனக்கென வரையறை போட்டு வாழ்கின்றாள்.

இதனால்தான் இன்று பெண்கள் தனிமையான வாழ்வு வாழுகிறார்கள். இது மிகக்கொடுமையானது என்பதை இன்னொரு பெண்ணால் மட்டுமே புரிந்து கொள்ளமுடியும்.

எனவே அன்பு என்பது எல்லா உயிர்களிடத்தும் உண்டு இது எல்லோருக்கும் தேவை என்பதனை ஒவ்வொருவரும் புரிந்து நடந்தால் இல்லற வாழ்வு இனிமையாக இருக்கும்.

# பெண்களைப் பற்றிய சில வார்த்தைகள்...



பெண்களுக்கு பலம் குறைவுதான். ஆனால் அவர்களிடமுள்ள துணிச்சல் ஒரு ஆணுக்கு உள்ளதை விட அதிகமாகும். குழந்தை உள்ளம் கொண்டவள் பெண். அவளை குமுறும் கடலாக மாற்றுவது எமது சமூகமே. அதுமட்டுமன்றி ஆயிரம் படைகளால் வெற்றி கொள்ள முடியாத காரியத்தை ஒரு பெண் மிக எளிமையாகத் தனது புன் சிரிப்பால் வென்று விடுவாள் என்பதும் உண்மை.

அழகு பெண்களுக்குப் பெருமை தருகின்றது. அடக்கம் அவர்களுக்கு அளவற்ற மதிப்பைத் தருகின்றது. கற்பு அவர்களை தெய்வமாக்குகிறது. அழகான பெண் கண்ணுக்கு விருந்து, குணமான பெண் மனதுக்கு விருந்து. தலைசிறந்த பெண் அநேகமான மனிதனின் வலிமையைப் பெற்றிருப்பாள். தலை சிறந்த மனிதன் பெண்ணின் இனிமையைப் பெற்றிருப்பான். நூறுபேர் சேர்ந்து ஒரு முகாம் அமைக்கலாம்; ஆனால் இல்லறம் சிறக்க ஒரு பெண் வேண்டும்.

உலகிலுள்ள பதவிகளைவிட மகத்தானதும், கௌரவமானதும். மனைவி, தாய் என்பவையே. பெண்களை பெருமை கொள்ளச் செய்வது அழகு. அவர்களைப் பாராட்டும்படி செய்வது பண்பு. அவர்களை தெய்வீகமாகத் தோன்றச் செய்வது அடக்கம் பெண்கள் புத்தகம் போன்றவர்கள். பெண்ணை நம்பாதே என்று எல்லோரும் சொல்கிறார்கள்.


ஆனால் மனைவியை நம்பாதே என்று எவரும் சொல்லவில்லை. இதுவே தாய்,மனைவி என்பதன் மகிமை.

-[illegible]வனிதா.


திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
''திலகம்'',
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவத் தாரகை





தே.றொஷான்,
யாழ்.மத்திய கல்லூரி.



லோ. தானுஜன்,
சென்.ஜோன் பொஸ்கோ.



அனுஜிற்றா தவறஞ்சிற்
கரிமெல் பிறிஸ்கூல், யாழ்ப்பாணம்.



வி.பிரசாத், தரம்- 8'ஏ'
ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

## அப்பாவுக்காக..

உயரத்தில் மட்டும் நீங்கள்
உன்னதமல்ல
உள்ளத்திலும் உன்னதமான
உத்தமரே...!

தவறு செய்தால்
தண்டனை உண்டு
தண்டனையே தவறை
திருத்தும் சந்நிதியாம்

அடிக்கிற கைதான்
அணைக்கும் - தவறினைத்து
அடித்தாலும் சொல்லும்
அறிவுரையே ஆயிரம் நிலவாய் மிளிரும்

என் பிள்ளைகள் தவறு செய்யமாட்டார்கள்
என்ற உம் வார்த்தையே
நம்பிக்கையாக இருந்து உயர்த்தும்
அன்பு உள்ளம் கொண்ட தந்தையே...!

ர.நந்தினி,
அச்சுவேலி மேற்கு.

## பொதுஅறிவு

★ சந்திரன், பூமியைச் சுற்றும் வேகம் யாது?
மணிக்கு 3,680 Km
★ பூமியின் குறுக்களவு யாது?
சுமார் 92,670 Km
★ பூமியின் மொத்தப் பரப்பளவு?
51கோடி 66,000Km
★ புவியின் சுற்றளவு யாது?
40 லட்சத்து 7 ஆயிரத்து 502 Km
★ உலகின் தாழ்ந்த புள்ளி?
டெட் கடலன் கரையோரப் பகுதி
★ அதிகளவான நீரைக் காவிச் செல்லும் ஆறு எது?
அமேசன்
★ உலகில் கூரை என அழைக்கப் படும் இடம்?
திபெத்
★ வத்திக்கான் நகரின் பரப்பளவு?
0.272 $Km^2$
★ உலகின் மிகப் பெரிய கழிமுகம் எது?
கங்கேஸ் கழிமுகம்
★ ஆங்கிலக் கால்வாயின் நீளம் யாது?
564 Km
★ உலகின் மிகப் பழைமையான நகரம் எது?
தமஸ்கஸ்
★ ஆபிரிக்காவின் பெரிய நகரம்?
கெய்ரோ
★ உலகின் மிகப் பெரிய பாலைவனம்?
சகாரா பாலைவனம்
★ மொஹஞ்சதாரோ அழிவுகள் கண்டுபிடிக்கப்பட்ட இடம்?
சிந்துவுடைய லரக்காண்ட் மாவட்டம்- பாகிஸ்தான்.

இ. தர்சிகா,
மானிப்பாய்.

## பழங்காலத்து நாணயத்தின் பெருமை



தற்போது அருங்கலைக் காட்சியகங்களில் காணப்படும் புராதன காலத்து நாணயங்கள் எல்லாம் அகழ்வாராய்ச்சியின் போது கிடைக்கப் பெற்றதுடன் மக்கள் சிலரின் அன்பளிப்புமே ஆகும். இந்த நாணயங்கள் அழிந்து போனமைக்கான முக்கிய காரணம் புராதன நாணயங்களை எடுப்பதற்காக சில வியாபாரிகள் பழைய நாணத்துக்குப் புதுப்பாத்திரம் என்று கூவிச் செல்வதுமாகும்.

இதைக் கேட்ட மக்கள் புதுப் பாத்திரங்களை வாங்குவதற்காக தம்மிடம் இருந்த அரும்பெரும் பழைய நாணயங்களைக் கொடுத்து விடுகின்றனர். இவ்வியாபாரிகள் அந்த நாணயங்களை வெளி நாட்டினருக்கு அதிக பணத்துக்காகக் கொடுத்துவிடுகின்றனர்.

சொத்துக்கள் வெளிநாட்டவர் வசம் சென்றுவிடுகின்றன. இப்போது எமது நாட்டிலுள்ள அருங்காட்சியகங்களில் இலங்கை நாணயங்களை வெளிநாட்டு அருங்காட்சியகங்களில் தங்கள் நாட்டுக்குத் தேடிக் கொள்கின்றனர். பழைமை என்றும் மதிப்புக்குரியது என்பதைப் போல் எமது நாட்டுச் சொத்துக்களை பாதுகாப்பதற்கு நாம் கற்றுக் கொள்ள வேண்டிய அவசியமாகும்.

ச.நரேன்,
தரம்-9
யாழ். இந்துக் கல்லூரி

## அழிவடையும் தமிழுக்கான ஓசை

★ கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த நம் தமிழ் மொழி.
★ இது எப்போது தோன்றியது என்பது பற்றி ஆய்வாளர்கள் இன்னும் கருத்து தெரிவிக்கவில்லை
★ நம் தமிழ் மொழி பழங்காலத்தில் இருந்து வரும் மொழியாகத் திகழ்கிறது.
★ யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிமையானது என்றும் காணோம்.
★ சங்ககாலம், சங்கமருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம் எனப் பல காலங்களிலும் தமிழ் வளர்ந்து வந்துள்ளது.
★ இது பிற மொழிகளில் இருந்து மருவிவராது தனக்கு எனப் புதியதொரு யாப்பைக் கொண்டிருக்கும் செம்மொழியே ஆகும்.

## விடை தெரியுமா? 119

### உங்களுக்கும் பரிசில்கள்

1. உலகில் உயரமான பாலம் எங்கு உள்ளது?
2. வான்வெளிப் பகுதியில் காணப்படும் மிகச்சிறிய கிரகம் எது?
3. இலங்கை வங்கி எத்தனையாம் ஆண்டாக இவ்வருடம் கொண்டாடப்பட்டது?
4. இலங்கையின் நாணய அலகு எது?
5. இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி யார்?

### விடைகள் 117


1. செழிப்பு
2. ரூட்யார் ட் கிப்ளின்
3. தெஹிவளை
4. கர்ணன்
5. அட்லாண்டிக்

### வெற்றி பெற்றவர் விவரம்

★பத்மநாதன் கோகிலேஷ், தவசிக்குளம், கண்டி வீதி, வவுனியா.
★ஸ்ரீ.கஜபாலினி, தரம்- 9, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.
★வி.பிரசாத், தரம்-8, யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்

**விடை தெரியுமா?**
தெரிந்தால் 12.08.2011 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

## நூலகம்



நூலகம் என்பது தேன்கூடு
நூல்கள் ஒவ்வொன்றும் தேன் துளிகள்
நூலகம் என்பது பூங்காடு- அதில்
நூறாயிரம் நல் மலர்கள்
நூலகம் என்பது பழந்தோப்பு
நூல்கள் ஒவ்வொன்றும் தீங்கனிகள்
நூலகம் என்பது தனி உலகம்
நுழைந்தால் புதுப்புது அனுபவங்கள்

ச.லக்சிகா, தரம்- 7
யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதைப்பதற்கோ உருவெடுத்தீர்...?



வீதியில் நகையறுப்பு
வீட்டில் கதவுடைப்பு
பட்டியில் புகுந்து
பதமான மாடறுப்பு
காட்டினுள் புகுந்து
களவாய் மரம் அறுப்பு
உண்டியல் உடைப்பதும்
ஊரெங்கும் மண்திருட்டு
தெய்வச் சிலை திருடி
பொருள் தேடும் பொறுக்கியரும்
பெருகியே விட்டார்- எம்
புண்ணிய பூமியிலே
சிவ பூமியாய் திகழ்ந்த - எம்
தவ மண்ணில் வாழ்கின்ற
ஈனர்களே எம் மண்ணின்
புகழ் பூத்த பெருமை தனை
புதைப்பதற்கோ உருவெடுத்தீர்...

வி. நடராசா சந்திரலிங்கம்
அச்சுவேலி வடக்கு.

# கண்ணீர் துளிகள் எனக்காகப் பிறந்ததா?

துளிர் விட்டு மிளிர முன்
தூக்கில் இடப்பட்ட என் சிறு
வயதுப் பட்டாம் பூச்சி- கனவுகளும்
இறக்கை விரித்து மெல்லப்பறந்து
வெள்ளைப் புறாவாய்
உலா வந்தபோது தான்- நானும்
நாடக மேடையில் ஏற்றப்பட்டு
நடிக்கப்பட்டு இறக்கப்பட்டேன்
சிறைக் கூட்டினுள்- அடைக்கப்பட்டேன்
மீண்டும் வந்தேன் இப்போது
அந்தப் பகலைக் கெளவிக் கொள்ளும்
இரவுக்காக காத்து கிடக்கிறது மனது
யாருக்கும் தெரியாமல்
ரகசியமாய் அழுது தீர்ப்பதற்கு
இரவைக் கிழித்து அடிவானில்
விடிவெள்ளி தோன்றும் போது தான்
புன்னகையை -கடன்
வாங்கி வாடகைக்கு
சிரித்து நடித்துக் கொண்டேன்
சிரிக்கா விட்டாலும்
வசை பாடும் பொல்லாத
உலகம் அல்லவா
புரியாத புதிர்தான் இருந்தாலும்
ஒன்று மட்டும் புரிகிறது
அழுகை எனக்காகப் பிறந்தது - அல்ல
நான் அழுவதற்காக
பிரசவிக்கப்பட்டவள்...



உதயராசா சிவாஜினி
கிராஞ்சி, பூநகரி.



# காலம் கடந்த ஞானம்

றீலோட் போடுவதற்காக
அவள் கொடுத்த இலக்கம் மூலம்
ஆரம்பமானது அந்த தொலைபேசி காதல்
கடைத் தெருக்கள்
கண்ணகை அம்மன் கோவில்
என நீண்ட காதல்
எல்லைகள் தாண்டி
கண்ணன் வீட்டிலும்
கவிதா வீட்டிலும்
கண்ணாளனின் காமத்துக்கு
தீனி போட்டது
காலம் செல்ல
அவள் கருத்தரித்தாள்
கண்ணாளன் காணாது போனான்
கண்ணீர் வடிய
கைத்தொலை பேசியை அழுத்திபோது
பதில் வந்தது
நீங்கள் அழைத்த இலக்கம்
தற்போது பாவனையில் இல்லை என்று
இப்போது புரிந்து கொண்டாள்.
றீலோட்டுக்காக சென்று என்
வயிற்றை நிரப்பியவன் அந்த
சிம்மைக் களற்றியது போல்
என்னையும் களற்றி விட்டான் என்று...

முகமாலை ஊர் செ.நாதன்



# வாழ்க வளமுடன்

எம்மினிய
அப்பாவுக்கு,
பல கோடி வந்தனங்கள்...
எம் அம்மாவுக்கு
திருமதியெனும்
உயர் கெளரவம் கொடுத்து
தீர்க்க சுமங்கலியாய்
வலம் வர வைத்து
உலக உயர் விருதான
அன்னையெனும் பட்டமளித்து
எம் வாழ்வையே
அன்பெனும் அட்சய பாத்திரத்தால்
நிரப்பி நிக்கும்
மேன்மை மிகு தந்தையே!...
எமக்கு
மகன் எனும்
மங்காத புகழ் தந்து -எம்
பெயர் முன்னே
எப்போதும் முதலெழுத்தாய்
உயிர் கொடுத்து நிற்கும்
உன்னதமானவரே!
உயர்வுகள் நாம் காண
உறுதுணையாய் நின்ற
உங்களின் பொற்பாதங்களை
எம் ஆயுள் முடியும் வரை
அர்ச்சித்து நிற்போம்....
மகவுகள் நாம்
ஒன்று கூடி காலமெல்லாம்
சிரம் தாழ்த்தி
வணங்கி வாழ்த்திடுவோம்...!
வாழ்க வளமுடன்....

து.திலக்
யாழ்ப்பாணம்

# எப்போதோ ஆகியிருப்போம்



தீக்குள் இருந்த போதும்
எம் வாழ்வு தித்திப்பாய் இருந்தது
தெரிந்தே இறங்கினோம்
இந்தச் சகதிக்குள்
நாறிப்போய்க் கிடக்கிறது
இன்று நம் வாழ்வு
ஒப்பனைகள் செய்து
ஒப்புக்காய்க் காட்டுகிறார்
உலகுக்கு!
கற்பனைகள் செய்து கனவுகள்கண்டு
கதைத்தவைகள் எல்லாம்
விற்பனையாகிப் போயின...!
பழைய நினைவுகள் மட்டுமே
இப்போதும் நிம்மதி தருகிறது
அதுவும் இல்லையெனில்,
எப்போதோ
பல் இளித்து, தலைசொறிந்து
ஆடை கிழித்து
அலங்கோலமாய் அல்லவா
திரிந்திருப்போம்...

-யாரோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாய சூழலில் ஒப்புதல் வாக்குமூலம்

போரில் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றி விடுதலைப் புலிகளின் வற்புறுத்தலுக்கு அமையவே மருத்துவர்கள் தகவல்களை வெளியிட்டிருந்தால் அரசின் தடுப்புக் காவலில், சுற்றி நிற்கும் துப்பாக்கிகளின் மத்தியில் நின்று அவர்கள் வெளியிட்ட கருத்துகளும் அரசின் நிர்ப்பந்தம் காரணமாகவே வெளியிடப்பட்டன என ஏன் நம்பக் கூடாது?



ஞாயிறு காரம்

சந்திரசேகர ஆசாத்

இலங்கையின் நீதி வரலாற்றில் ஒப்புதல் வாக்குமூலம் என்பது ஒரு முக்கியமான சாட்சியமாக முன் வைக்கப்பட்டதைப் பல சந்தர்ப்பங்களில் நாம் கண்டுள்ளோம். அதிலும் விடுதலைப் புலிகள் அல்லது விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய வர்கள் எனச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் படுபவர்கள் தொடர்பான வழக்குகளில் இந்த ஒப்புதல் வாக்குமூலத்துக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு.

ஆனால், பல சந்தர்ப்பங்களில் ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியவர்கள் நீதிமன்றில் நாம் பலவந்தமாக அவற்றை வழங்க வைக்கப்பட்டதாகவோ அல்லது தெரியாத மொழியில் எழுதியதற்கு கையெழுத்து வைக்க நிர்ப்பந்திக்கப்பட்டதாகவோ தெரிவித்து அவை உண்மையற்றவை எனவும் கூறி இருக்கின்றனர். அதன் காரணமாகச் சில சந்தர்ப்பங்களில் ஒப்புதல் வாக்குமூலங்கள் நிராகரிக்கப்பட்டதும் உண்டு.

**இலங்கை அரசு வெளியிட்ட இறுவட்டு**

இலங்கையின் போரின் இறுதி நாள்களில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு விரோதமான நடவடிக்கைகள் தொடர்பாக ஐ.நா. நிபுணர்கள் குழு வெளியிட்டுள்ள அறிக்கைக்கு எதிராகவும் சனல்- 4 தொலைக்காட்சி வெளியிட்ட ஸ்ரீலங்காவின் கொலைக்களம் என்ற ஆவணப்படம் தொடர்பாகவும் நீண்ட நாள்களாகவே இலங்கை அரசு தன் மறுப்பைத் தெரிவித்து வருகிறது.

தற்சமயம் அவற்றின் உச்சக் கட்டமாக அவை பொய்யானவை என நிராகரித்து ஓர் அறிக்கையையும் ஓர் இறுவட்டையும் அது வெளியிட்டுள்ளது. இதை ஐ.நா. நிபுணர் குழுவுக்கும் சனல்- 4 தொலைக் காட்சிக்கும் வழங்கும் பதிலாகவோ விளக்கமாகவோ அன்றி உலகின் முன் தன்னை நியாயப்படுத்தும் ஒரு ஆவணமாகவே இலங்கை அரசு வெளியிட்டுள்ளது.

இந்த இறுவட்டில் விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனின் மனைவி, கடற்புலிகளின் தளபதி சூசையின் மனைவி, போருக்குள் நின்று பணியாற்றிய மருத்துவர்கள் ஆகியோரின் வாக்குமூலங்கள் பதியப்பட்டிருக்கின்றன.

**கட்டாயத்தின் பேரில் வெளியிட்ட கருத்துகள்**

போரின் போது தங்கள் உயிர்களையும் பொருட்படுத்தாது எறிகணைகள் மத்தியில் பணியாற்றிய மருத்துவர்கள் போரின் பின் நீண்டகாலம் அரச புலனாய்வுப் பிரிவால் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் விடுவிக்கப்படுவதற்குச் சில நாள்களின் முன்பாக ஏற்பாடு செய்யப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் போரில் இறந்த பொதுமக்களின் எண்ணிக்கையை விடுதலைப்புலிகளின் நிர்ப்பந்தம் காரணமாக அதிகரித்து வெளிநாட்டு ஊடகங்களுக்கு வழங்கியதாகக் கூறியிருந்தனர்.

அப்போது மக்கள் மத்தியில் ஒரு கேள்வி எழுந்தது. போரில் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றி இவர்கள் விடுதலைப் புலிகளின் வற்புறுத்தலுக்கு அமைய தகவல்கள் வெளியிட்டிருந்தால் அரசின் தடுப்புக் காவலில் சுற்றி நிற்கும் துப்பாக்கிகள் மத்தியில் நின்று வெளியிட்ட கருத்துகளும் அரசின் நிர்ப்பந்தம் காரணமாகவே வெளியிடப்பட்டன என ஏன் நம்பக் கூடாது?

அரசு என்னதான் ஒப்புதல் வாக்குமூலங்களுடன் அந்த மருத்துவர்களை பத்திரிகையாளர் முன் நிறுத்தினாலும் அவர்களின் கருத்துகள் நிர்ப்பந்தம் காரணமாகவே வெளியிடப்பட்டவை என்பதை உலகம் தெளிவாகவே விளங்கிக் கொண்டது. அதன் காரணமாகவே சர்வதேச ஊடகங்கள் அந்தக் கருத்துகளுக்கு எவ்வித முக்கியத்துவமும் கொடுக்கவில்லை.

**பொன்சேகாவின் நிலை**

போரை முன்னின்று நடத்தி போரின் நாயகனாக விளங்கிய முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா வெள்ளைக் கொடி விவகாரம் பற்றிக் கருத்து வெளியிட்ட பின்பு அவர் பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு இன்று வரை சிறைப்படுத்தப்பட்டுள்ளார். அது மட்டுமன்றி அவரின் பட்டங்கள், ஓய்வூதியம் என்பனவும் பறிக்கப்பட்டதை மருத்துவர்கள் நன்கறிவார்கள். எனவே அவர்களின் கருத்து, சுதந்திரமானது அல்ல என்பது தெளிவானது.

இப்போது வெளியிட்ட இறுவட்டில் அந்த மருத்துவர்களின் கருத்துகளும் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேபோன்று தமிழ்ச்செல்வன், சூசை ஆகியோரின் மனைவியரது வாக்குமூலங்களும் இந்த இறுவட்டில் சேர்க்கப்பட்டுள்ளன. அவர்களும் தாம் மிகச் சிறப்பாகக் கவனிக்கப்படுவதாகவும் எவ்வித குறையுமில்லை எனவும் தெரிவித்துள்ளனர். தமிழ்ச்செல்வனின் மனைவி, தான் வெளிநாடு போக விரும்பவில்லை எனவும் தனது பிள்ளைகளுக்குச் சிறப்பான கல்வி வழங்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இவர்களும் இன்னும் அரச பாதுகாப்பில்தான் உள்ளனர் என்பதை நாம் இங்கு கவனிக்க வேண்டும்.

**வாக்குமூலம் வழங்கும் சூழ்நிலைகள் அவசியம்**

ஒருவர் ஒரு வாக்குமூலம் வழங்கும் போது எப்படியான சூழ்நிலையில் இருந்து கொண்டு வழங்குகிறார் என்பது முக்கியமானதாகும். அரச பாதுகாப்பில் இருந்து கொண்டு அரசுக்கு எதிராக ஒரு வார்த்தை வெளியிட்டாலும் உயிர் அச்சுறுத்தல், சித்திரவதை உட்படப் பல நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டி வரும் என்ற சூழ்நிலையில் ஒருவர் வழங்கும் வாக்குமூலம் எப்படி இயல்பானதாக, உண்மையானதாக மனப்பூர்வமானதாக இருக்கமுடியும்?

அதிலும் குற்றம் சாட்டப்படுபவர்களின் பிடிக்குள் இருக்கும் ஒருவர் குற்றம் சாட்டப்பட்டவர்களை எதிர்த்து வாய்திறக்க முடியுமா? அப்படித் திறந்தால் அவர்களும் வெளிவரப் போவதில்லை. அவர்களின் வார்த்தைகளும் வெளிவரப் போவதில்லை.

இப்படியான ஒரு சூழலில்தான் அரச, அரசசார்பு ஊடகங்கள் இந்த வாக்குமூலங்களைப் பெரிதுபடுத்தி வெளியிட்டு வருகின்றன. உலகம் ஏற்றுக் கொள்ளுமா? இலங்கை அரசைப் பொறுத்தவரையில் தான் சொல்வதைப் பிறர் ஏற்கிறார்களா இல்லையா என்பதை எப்போதுமே பொருட்படுத்தியதில்லை. ஆதாரங்கள் முன் வைக்கப்படாமலே தம்மை நியாயப்படுத்தும் கருத்துக்களைக் கடவுளின் தேவ வாக்குப் போன்று திரும்பத் திரும்ப ஓதுவது அவர்களின் வழமை.

இலங்கை இராணுவத்தின் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக முறைப்பாடுகள் முன் வைக்கப்படும் போது இராணுவப் பேச்சாளர்கள் தமது இராணுவம் ஒழுக்கமும் கட்டுப்பாடும் உடையவர்கள் எனவும் அவர்கள் அப்படியான செயல்களில் ஈடுபடுவதில்லை எனவும் ஒரே வசனத்தில் சொல்லி விடுவார்கள். ஹெயிட்டியில் ஐ.நா. சமாதானப் படையாகச் சென்ற இலங்கையின் ஒழுக்கமுள்ள இராணுவத்தினர் பாலியல் வல்லுறவில் ஈடுபட்டுத் திருப்பியனுப்பப்பட்டதை எல்லாம் அறவே மறந்து விடுவார்கள்.

இப்படியான விடயங்கள் மூலம் சர்வதேசத்தின் முன் அம்பலப்படுத்தப்பட்டு அவமானப்படும் நிலையில்தான் இலங்கையில் அரசு தன்னை நியாயப்படுத்தும் வகையில் ஓர் அறிக்கையையும் இறுவட்டையும் தயாரித்துள்ளது.

அரசை நியாயப்படுத்தும் வாக்குமூலங்கள் இந்த இறுவட்டில் விடுதலைப் புலிகளின் முக்கிய முன்னாள் போராளிகளின் வாக்குமூலங்களை அரசை நியாயப்படுத்தும் வகையில் சேர்த்துக் கொள்ளவும் பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டதாகச் செய்திகளும் மெல்லக் கசிந்துள்ளன.

**கட்டாயப்பாட்டுக்குள் முன்னாள் போராளிகள்**

அதாவது சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் தமிழினி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் அரச படைகள் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை என வாக்குமூலம் அளிக்கும்படி வற்புறுத்தப்பட்டதாகவும் அவர் மறுத்து விட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இப்படியாகப் பல போராளிகள் பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவினரால் கொண்டு செல்லப்பட்டு அரச படைகளுக்கு ஆதரவாக வாக்குமூலம் அளிக்கும்படி கட்டாயப் படுத்தப்பட்டனராம். ஓரிருவரைத் தவிர ஏனையோர் அனைவரும் உறுதியாக மறுத்துவிட்டனராம். அந்த விடயத்தில் வெற்றிபெற முடியாத நிலைமை யிலேயே தமிழ்ச்செல்வன், சூசை ஆகியோரின் மனைவியரின் வாக்குமூலங்கள், மருத்துவர்களின் வாக்குமூலங்கள் என்பன வலுக்கட்டாயமாகப் பெற்று இறுவட்டில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே சித்திரவதைகள் மூலம் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்களை வைத்துத் தங்கள் விருப்பப்படி தமிழ் இளைஞர்களைக் குற்றவாளிகளாக்கும் அரசின் முயற்சி பல சந்தர்ப்பங்களில் தோல்வியையே கண்டுள்ளது. ஆனால் அரச தரப்பு அவர்களின் விசாரணைகளை இழுத்தடித்தோ அல்லது நடத்தாமலோ அவர்களைப் பல வருடங்கள் சிறையில் தடுத்து வைத்துப் பழி வாங்குகிறது.

தற்சமயம் ஐ.நா. நிபுணர்குழு அறிக்கைக்கு எதிராகவும் சனல்-4 ஆவணத்துக்கு எதிராகவும் ஒப்புதல் வாக்குமூலங்கள் கொண்ட அறிக்கையையும் இறுவட்டையும் முன் வைத்துள்ளது. இதன் மூலம் இலங்கை அரசு தன்னைத்தானே அம்பலப்படுத்தியுள்ளது. அத்துடன் மீண்டும் மீண்டும் பொய்மைக்குள் அமிழ்ந்து உலகின் நம்பிக்கையை இழந்து வருகிறது. உலகின் எல்லாக் கொடுங்கோலர்களும் எவ்வளவு சித்து விளையாட்டுகளைச் செய்து தங்களை நியாயப்படுத்த முயன்ற போதிலும் அவர்களின் தீமைகளே அவர்களைப் பலி கொள்வதற்கான காரணங்களை உருவாக்கின என்பது வரலாறு. ✱

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 07.08.2011 முதல் 13.08.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆளாகலாம். வழக்கத்துக்கு கூடுதல் நேரம் வேலை செய்யலாம். உறவினர்கள் சிலரின் அன்புத் தொல்லைகளுக்கு ஆள்படலாம். சில பிரச்சினைகளில் முடிவுகள் எடுக்க முடியாமல், குழப்பங்கள், தடுமாற்றங்களைச் சந்திக்கலாம். எதிர்பாராத வகையில் சிலரைச் சந்திக்க நேரிடலாம். நிலம், பூமி தொடர்பான விடயங்கள் சாதகமாக அமையும். சகோதரர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் விலகி, பாசம் அதிகரிக்கும். சில நன்மைகளை அடையும் வாய்ப்பும் உருவாகலாம். அடிக்கடி ஏதாவது ஒரு பிரச்சினை உங்கள் மனதை ஆள்கொண்டு, சஞ்சலங்களை உருவாக்கலாம் பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் அனுகூலமாக அமையும். சிலர் அடிக்கடி வெளியூர் பயணங்கள் செல்லும் சூழ்நிலை உருவாகலாம். மாமன், மைத்துனர்கள் உங்களின் எண்ணம் போல நடந்து கொள்வர். பழைய நண்பர்கள் மூலம் புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கலாம்.

### இடபம்

எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் சிலரின் வீடுகளுக்கு செல்லலாம். புதியவர்கள் சிலரின் உதவி கிடைக்கலாம். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தைச் செலவிடும் சூழ்நிலை உருவாகும். பயணங்கள் சந்தோஷம் தருவதாக அமையும். பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்வது நன்மை தரும். அவர்களுக்காக கணிசமான தொகையை செலவிடும் சூழ்நிலை உருவாகும். சிலர் பிள்ளைகளால் கவலை அடையும் நிலைமை ஏற்படும். குதர்க்கமான, குத்தலான பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். கொடுக்கல், வாங்கல்களிலும், சொல்வாக்கை காப்பாற்றுவதில் சிரமங்கள் உண்டாகலாம். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசியல்வாதிகள் மூலம் காரியம் சாதிக்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. உறவினர்கள், நண்பர்கள், மாமன், மைத்துனர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். மந்தம், மறதி, கவனக் குறைவால் அவதிப்படலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். பணவரவுகள் உண்டு.

### மிதுனம்

ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். நீண்ட நாள்களாகத் தள்ளி வைத்த வெளியூர் பயணங்கள் செல்லலாம். சில வேலைகளை தவறாகச் செய்து விட்டு மீண்டும் செய்யலாம். மனதில் இனம் புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடி கொள்ளும். பல மணி நேரமாகும் என நினைத்த காரியங்கள் எல்லாம் சுலபமாக முடிவுக்கு வரும். கடனாக, கைமாத்தாக கொடுத்த பணம் திரும்பி வரும். சுப காரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு. பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் வகையிலான சம்பவங்கள் நடக்கலாம். வளர்ந்த பிள்ளைகள் மூலம் வருமானம் பெறலாம். கடந்த காலத்தில் கையை விரித்தவர்கள் எல்லாம், இப்போது கைகொடுத்து உதவுவர். சில நேரங்களில் உங்களின் கோபம், வேகத்தை தூண்டும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். எந்த விடயத்துக்காகவும் எரிந்து விழுவதை தவிர்த்து, பொறுமையாகச் செயற்பட வேண்டும். குடும்பத்தினரின் தேவைகளை குறைவின்றி நிறைவேற்றி வைப்பீர்கள். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். மாமன், மைத்துனர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அலைச்சல், திரிச்சல் உண்டு. வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும்.

### கடகம்

மனதில் இனம் புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். வெளியூர் பயணங்கள் விரும்பும் விதத்தில் அமையும். பண வரவுகளைப் பெறலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். தொழில், வியாபாரம், உத்தியோகம் போன்றவற்றில் நிம்மதியான சூழ்நிலை தொடரும். நீண்ட நாள்களாக இழுத்தடித்த வழக்குகள் சில முடிவுக்கு வரலாம். வேலையாள்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிந்து மற்றவர்கள் மத்தியில் பளிச்சென தோற்றம் அளிப்பீர்கள். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். மற்றவர்களின் பேச்சைக் கேட்காமல், நாமே பெரியவர் என்ற நினைப்பில் சில வேலைகளைச் செய்து விட்டு அவதிப்படலாம். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். சகோதரர்கள், பங்காளிகள், சகலைகள், நிலம், பூமி தொடர்பான வகையில் செலவு, அலைச்சல் நேரும். புதியவர்கள் சிலரின் உதவி, அறிமுகம் கிடைக்கும். பரபரப்பாக செயற்படுவீர்கள். ஆதாயமில்லாத அலைச்சல், திரிச்சல் உண்டு. உறவினர்களால் செலவுகள் உருவாகலாம்

### சிங்கம்

ஒன்றுக்கு மேற்பட்ட வழியில் செலவுகளைச் சந்திக்கலாம். சிறிய வேலை ஒன்றுக்குப் பல முறை அலைய நேரிடலாம். பெண்கள் வழியில் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று பனி போல விலகிவிடும். எதிர்பாராத பணவரவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. நிலம், பூமி தொடர்பான விடயங்கள் சாதகமாக அமையும். உறவினர்கள், சக ஊழியர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை மேம்படும். பல நாள்களாக எதிர்பார்த்து காத்திருந்த விடயங்கள் சாதகமாக நடக்கலாம். எதிர்ப்புகள், போட்டிகள் குறைந்து ஏற்றம் பெறுவீர்கள். சகோதரர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. மருத்துவச் செலவுகள் உண்டாகலாம். சகோதரிகள், பெண் பிள்ளைகள் கேட்ட உதவிகளைச் செய்தல், அவர்களின் தேவைகளை நிறைவேற்றுதல் போன்றவற்றால் சிரமப்படலாம். எளிதில் முடிந்து விடும் என நினைத்த காரியங்கள் எல்லாம் இழுத்தடிக்கலாம். குடும்பத்துக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். பணவரவுகளைப் பெறலாம். பெண்களால் நன்மை அடையலாம்

### கன்னி

ஆதாயகரமான, லாபகரமான பணவரவுகளைப் பெறலாம். நீண்ட நாள்களாக சந்திக்காத உறவினர் அல்லது நண்பரைச் சந்திக்கலாம். சில விடயங்களில் முடிவுகள் எடுக்க முடியாமல் ஒன்றுக்கு மேற்பட்டவர்களிடம் ஆலோசனை கேட்கலாம். குறைந்த செலவில் முடியும் என நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாக செலவாகலாம். பக்தி நாட்டம் அதிகரிக்கும். எந்தப் பிரச்சினையும் எளிதில் முடியாமல் இழுத்தடிக்கலாம். எதேச்சையாக நடக்கும் சில விடயங்களுக்கு கூட, நீங்கள் பழி ஏற்க நேரிடலாம். உறவினர்கள் வகையில் உங்களைப் பாராட்டுவோரை விட, விமர்சிப்பவர்களே அதிகம். பிள்ளைகளும் உங்களின் சொல்கேட்காமல் ஏட்டிக்குப் போட்டியாக செயற்படலாம். எடுத்த வேகத்திற்கு எந்தக் காரியத்தையும் செய்ய முடியாமல் அவதிப்படலாம். பணிபுரிவோர் கடும் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். சகோதரர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். சந்தோஷமான அனுபவம் உண்டு. மனதில் தைரியம், தன்னம்பிக்கை அதிகரிக்கும். குழப்பம், தடுமாற்றம் நேரும். மறதியால் அவதியுண்டு

### துலாம்

எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறைவேறும். நீண்ட நாள்களாக வராத கடன் மிகுதிகள் வரலாம். மனதிற்கு உற்சாகம் தரும் செய்திகளைக் கேட்கலாம். ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். உங்களுக்குப் பிடித்தமான பொருள்களை மற்றவர்கள் கொடுக்கலாம். ஆடை, ஆபரணங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். சில காரியங்கள் தங்கு தடையின்றி முடிவுக்கு வரும். தந்தை வழியில் ஏற்பட்ட சிரமங்கள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் பாராட்டுக்களைப் பெறுவர். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். பல மாதங்களாக சந்திக்காத மாமன், மைத்துனர்கள் சிலரைச் சந்திக்கலாம். தொழில் ரீதியான பயணங்கள் செல்லலாம். பெண்கள், பொழுது போக்கு விடயங்கள், ஆடம்பர ஈடுபாடுகள் போன்றவற்றால் பணம் கரையலாம். வாகனங்களால் செலவுகள் உண்டாகலாம். தொழில் ரீதியாகவும், மற்ற வகையிலும்உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். செலவு, வீண் அலைச்சல் உண்டு.

### விருச்சிகம்

தொழில் ரீதியான கூட்டங்கள், நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். நீண்ட நாள்களாக பார்க்காத நண்பர்கள் சிலரை பார்க்கும் வாய்ப்பு கிடைக்கும். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கு பற்கலாம். குடும்பத்தில் கலகலப்பு குடிகொள்ளும். தம்பதியர் இடையே அன்னியோன்யம் கூடும். அடுக்கடுக்காக பல வேலைகளைத் திட்டமிட்டு செய்வீர்கள். மற்றவர்கள் மத்தியில் உங்களின் பெருமையைக் காட்டுவீர்கள். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற விடயங்களில் முன்னேற்றமான நிலைமை காணப்படும். எந்த வேலையையும் நினைத்த வேகத்திற்கு செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். கடன் விவகாரங்களிலும் எச்சரிக்கை அவசியம். சகோதரர்கள், உடன் பிறப்புக்களுடன் நல்லிணக்கம் பாதிக்கப்படலாம். வாகனங்களில் செல்லும் போது கவனம் அவசியம். நிலம், பூமி வாங்கும் விவகாரங்களை சில மாதங்களுக்கு தள்ளி வைப்பதே நன்மை தரும். பிள்ளைகள் உடல் நலனிலும் கவனம் அவசியம். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள்.

### தனுசு

எந்த விடயத்திலும் பொறுமை, நிதானமாக செயற்பட வேண்டும். திட்டமிட்ட காரியங்களில் எதிர்பாராத தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். வேலை நெருக்கடிகள் அதிகரிக்கும். பணவரவுகள் வந்தாலும், அது மற்றொரு வகையில் செலவாகும். நீங்கள் எதிர்பார்த்த ஒன்றில் ஏமாற்றம் காணலாம். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். மற்றவர்களின் பணம் கூட உங்களின் கைகளில் புரளும். நீண்ட நாள்களாக சேமித்த பணம் கணிசமாக கைக்கு கிடைக்கலாம். பூர்வீக சொத்துக்களால் ஆதாயம் பெறலாம். சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. நீண்ட தூர பயணங்கள் செல்லும் சூழ்நிலை உருவாகலாம். சகோதரர்கள், பங்காளிகள், சகலைகள் தொடர்பான விடயங்களில் பட்டும்படாமல் நடந்துகொள்ள வேண்டும். எதிர்பாராத திடீர் தனவரவுகளைப் பெறலாம். சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். பழைய பொருள்கள் சிலவற்றை மாற்றி புதிய பொருள்கள் வாங்குவீர்கள். தந்தையுடன் மனஸ்தாபம் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். காரிய வெற்றி உண்டு. தம்பதியர் இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும்.

### மகரம்

நீண்ட தூர பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். பால்ய நண்பர்கள் சிலரைச் சந்தித்து பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள். தண்டச் செலவுகள் நேரும். வாங்கிய கடன் ஒன்றை உடனே திருப்பிக் கொடுக்க நேரிடலாம். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி தொந்தரவு கொடுக்கலாம். தொழில் ரீதியான இடமாற்றங்கள், பொறுப்பு மாற்றங்கள் வந்து சேரலாம். தாயார் வழியில் செலவுகளைச் சந்திக்கலாம். நீண்ட தூர பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். கடன் விவகாரங்கள் கட்டுக்குள் வரும். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. கணவன் மனைவி உறவில் சச்சரவுகள் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். விமர்சனப் பேச்சுக்களை முடிந்தவரை தவிர்க்க வேண்டும். வாகனங்கள் திடீரென பழுதாகி கணிசமான செலவை உண்டாக்கலாம். கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். காரிய வெற்றி உண்டு. நல்ல செய்தி கேட்கலாம்.

### கும்பம்

சில காரியங்களைத் தந்திரமாக செய்வதன் மூலம் ஆதாயம் பெறுவீர்கள். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். அடுக்கடுக்காகப் பல வேலைகளைத் திட்டமிட்டு செய்வீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். தம்பதியர் இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். பொழுதுபோக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். எந்தக் காரியத்தையும் முன்யோசனையுடன் செய்ய வேண்டும். பல நேரத்தில் முள்ளால் குத்துவது போன்ற அனுபவங்களை எதிர்கொள்ளலாம். கோபம் வந்தாலும், அதை வெளிக்காட்ட முடியாத தர்மசங்கடமான சூழ்நிலைகளுக்கு ஆளாகலாம். பிள்ளைகளின் பொறுப்பற்ற செயற்பாடுகள் கோபம் உண்டாகலாம். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். அரசியல் வாதிகள் மூலம் சில நன்மைகளை அடையலாம். தந்தையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் விலகி பாசம் அதிகரிக்கும். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். தாயார் உடல் நலனில் பாதிப்புகள் ஏற்பட்டு கணிசமான செலவுகளை உண்டாக்கலாம். மந்தம், மறதி, தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம்.

### மீனம்

மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல், அவற்றை நீங்களே மீண்டும் செய்ய நேரிடலாம். பிள்ளைகள் வழியிலும் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். மறதியால் அவதிப்படலாம். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். பெரிய மனிதர்கள் சிலரின் உதவி கிடைக்கும். தேவையான பணத்தை புரட்டிக் கொள்ள சந்தர்ப்பம் சாதகமாக அமையும். பிள்ளைகள் பற்றிய கவலைகள் தீரும். நீண்ட நாள்களாக வாங்க நினைத்த வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள். தொழில் ரீதியான வருமானமும் அதிகரிக்கும். அலைச்சல் அதிகரிக்கும். ஒரு வேலையை செய்து முடிக்கும் முன்னரே அடுத்த வேலை காத்துக்கொண்டிருக்கும். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்களால் ஆறுதல் அடையலாம். அரசியல்வாதிகளால், அதிகாரிகளால், தந்தை வழியில் சிரமங்கள், தண்டச் செலவுகள் நேரும். மாமன், மைத்துனர்கள் உங்களிடம் உதவி கேட்டுத் தொந்தரவு கொடுக்கலாம். அதேநேரத் [illegible] மதத்தினர், மாற்று மொழி பேசுவோர் மூலம் சகாயம் பெற வாய்ப்பு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிமையான பாடகர் பொன்.ஸ்ரீவாமதேவன்

முத்து முத்தான சித்திரங்கள், இலங்கை முற்றத்தில் சிந்திய இரத்தினங்கள் எனத் தொடங்குகின்ற உணர்வுபொங்கும் ஆசிரியர் கீதத்தை எமக்கு உருவாக்கித் தந்தவர் பொன்.ஸ்ரீவாமதேவன் . பல்துறை ஆளுமைகளுடன் ஆசிரியத்துறையிலும் ஆற்றுகைத்துறையிலும் முதிர்ச்சி கொண்ட ஒருவராக விளங்கும் இவர் அனைவராலும் விரும்பப்படும் நல்மனிதரும் ஆவார். முப்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக இசைப்பணியாற்றிவரும் இவர் ஆசிரியத்துவத்தின் இலக்கணமாகவே திகழ்ந்து வருகின்றார். இசை ஆசிரியராகவும் ஆசிரிய ஆலோசகராகவும் பல ஆண்டுகளாகப் பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கும் இவரைக் கடந்த 05.08.2011 அன்று மாலை தென்மராட்சி மக்கள் ஒன்றுகூடிப் பெருவிழா எடுத்து பெருந்திரளான கலைஞர்கள், ஆர்வலர்கள் , பொதுமக்கள் முன்னிலையில் மதிப்பளித்துப் பாராட்டினர்.

காலம் சென்ற தமிழ்ப் பண்டிதர் பொன்னுத்துரை - சரசாம்பிகை தம்பதியரின் மகனாக 21.12.1948 இல் மட்டுவில் என்னும் ஊரில் இவர் பிறந்தார். சிறு வயதில் இவரிடம் இருந்த கல்வித் திறனையும் இசையின் மீதான ஈடுபாட்டையும் ஆசிரியர்களாக இருந்த இவரது பெற்றோர் நன்குணர்ந்து அதற்கமைவான வசதிகளை இவருக்கு ஏற்படுத்திக் கொடுத்தனர். தென்மராட்சியில் வசித்து வந்த இவர் அக்காலத்தில் மானிப்பாயில் தங்கியிருந்த ஐயாக்கண்ணு தேசிகர் எனும் இசையாளரிடம் தனிப்பட்ட முறையில் குரலிசையைக் கற்று வட இலங்கைச் சங்கீத சபையின் ஆசிரியர் தரத்தில் சிறப்புச் சித்தியடைந்தார்.திறமையும் விடாமுயற்சியும் கொண்ட இவர் பாடசாலைப் படிப்பை முடித்த பின்னர் தமிழகம் சென்று தனது இசைக் கல்வியை மேலும் வளர்த்துக் கொண்டார்.

1970 இல் சென்னை - அடையார் கர்நாடக சங்கீத மத்திய கல்லுரியில் குரலிசையைப் பிரதான பாடமாகக் கற்றதுடன் 1973 இல் வயலினையும் பிரதான பாடமாகக் கற்று சங்கீதவித்துவான் என்னும் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். இந்தக் கல்லூரியில் படித்த காலத்தில் இசைமேதைகளான சந்தியாவந்தனம் ஸ்ரீனிவாசராவ், தஞ்சாவூர் ரி.எம்.தியாகராஜன், பாலக்காடு கே.வி.நாராயணசாமி, இராமநாதபுரம் கிருஷ்ணன், திருப்பாம்புரம் சண்முகசுந்தரம், பிருந்தா அம்மா, வி.ராஜமையர், போன்றோரிடம் வரன்முறை தவறாத மரபுவழியான இசைக்கல்வியை நேரடியாகப் பெற்றுக் கொண்டார். இதைவிட தஞ்சாவூர் ரி.எம். தியாகராஜனிடம் தனிப்பட்ட முறையில் குரலிசையைக் கற்றதுடன் அவரது கச்சேரிகளில் இணைப் பாடகராகவுமிருந்து தனது இசை ஞானத்தை மேலும் வளப்படுத்திக் கொண்டார். அத்துடன் ரி.என். கிருஷ்ணன், எம்.எஸ்.அனந்தராமன், ஆலந்தூர் நடராஜஐயர் போன்ற வயலின் மேதைகளிடம் வயலினையும் கற்றுக்கொண்டார். இவ்வாறு குரலிசையிலும் கருவியிசையிலும் சமமான திறன் கொண்ட இசைக் கலைஞராக 1975இல் நாடு திரும்பினார்.

இதன்பின்னர் கல்முனை உவெஸ்லி கல்லூரி, வவுனியா செட்டிக்குளம் மகா வித்தியாலயம், வவுனியா சைவப்பிரகாச வித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி போன்ற பாடசாலைகளில் இசையாசிரியராக முப்பத்து மூன்று ஆண்டுகளாகப் பணியாற்றி 2008இல் ஓய்வு பெற்றுள்ளார். இதைவிட யாழ்.பல்கலைக்கழக இசைத்துறையில் வருகை விரிவுரையாளராகவும் பரீட்சகராகவும் கடந்த பல ஆண்டுகளாகப் அழைக்கப்பட்ட இவர் தற்போது உதவி விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார்.



சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம்

இவ்வாறு ஆசிரியத் துறையில் மட்டுமல்லாமல் ஆற்றுகைத் துறையிலும் உயர்ந்த கலைஞராக விளங்கும் இவர் நாட்டின் பல பாகங்களிலும் தனது இசைக் கச்சேரிகளை இனிதுற வழங்கி வருகின்றார். தனது இசை நிகழ்வுகளில் கிரகபேதம், கணக்கு வழக்கு போன்ற கடினமான இசைப்பகுதிகளை நுட்பமாகவும் இனிமையாகவும் கனகச்சிதமாகவும் ஆற்றுப்படுத்தி வருகின்றார். இசை நிகழ்வு எப்படி அமையவேண்டும் என்பதை நன்கு திட்டமிட்டு, போதி யளவு முன்னாயத்தத்துடன் மேடைக்கு வருவதால் இவரது இசைக் கச்சேரிகள் தனித்துவமானவைகளாக என்றும் விளங்குகின்றன. நிதானம் சற்றும் தவறாத பாடகரான இவர் நடன அரங்கேற்றங் களையும் நடனக் கலாவித்தகர் ஆற்றுகைகளையும் தனது இனிமையான குரல் வளத்தாலும் சுருதி லயம் தவறாமல் பாடும் வல்லமையாலும் சிறப்புச் செய்து வருகின்றார்.

பாடகராக மட்டுமல்லாமல் புதிய பாடல்களை உருவாக்கவல்ல இயலிசைப் புலவராகவும் இவர் காணப்படுகின்றார். கல்வித் திணைக்களத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆசிரியர் கீதம் முதல் மாணவாகளின் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் ரேவதிராகம் ரத்னாங்கியின் சேயே எனும் இலட்சண கீதம்வரை இவரது புத்தாக்கங்கள் ஏராளமானவை. இசை, நடன அரங்குக்கான பல விதமான பாடல் வகைகளையும் படித்தால் மட்டும் போதுமா பண்புகள் வேண்டாமா, மதுவினிலே மதிமயங்கும் மனிதா, தானம் அவதானம் போன்ற சிறந்த மெல்லிசைப் பாடல்கள் பலவற்றையும் உருவாக்கியுள்ளார்.

இசை கற்கும் மாணவர்களின் நலன் கருதி இவரால் பாடப்பட்ட பல இசை இறுவட்டுக்கள் வெளியிடப்பட்டுள்ளன. பண்டிதர் கடம்பேஸ்வரதனால் இயற்றப்பட்ட சிறுவர்பாடல்கள் இவரால் இசையமைத்துப் பாடப்பட்டு இரண்டு பாகங்களாகவும் பாடசாலை மாணவர்களுக்கான திருமுறைப் பாடல்கள் அனைத் தையும் சிறப்புறப் பாடிப் பல பாகங்களாகவும் இறுவட் டாக வெளியிடப்பட்டுள்ளன.

மாணவரின் தரமறிந்து பொறுமையுடன் கற்பிப்பதே ஆசிரியருக்கு அழகு. அதிலும் இசைக்கலையைக் கற்பப்போர் மிகவும் பொறுமையுடனும் நிதானத்துடனும் கற்பத்தலில் ஈடுபட வேண்டும். ஸ்வர வரிசை, கீதம், தானவர்ணம், கீர்த்தனை, பஞ்சரத்தினம், இராகம் தானம் பல்லவி, போன்ற அனைத்து விதமான இசைப் பகுதிகளையும் கற்பிக்கும் திறனும் ஆளுமையும் கொண்ட ஒருவரையே சிறந்த இசை ஆசிரியர் எனலாம். இவற்றைக் கற்பிக்கும் போது ஒவ்வொரு சங்கதிக்கும் இடையிலான வேறுபாடுகளையும் மிக நுணுக்கமாக வகைப்படுத்திக் காட்டி சலிக்காமல், சினக்காமல் மாணவருக்குச் சரியாக வரும்வரை அன்போடு கற்பிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சங்கதி பாடுவதும் கற்பிப்பதும் இசை கற்பித்தலில் சரியான வழிமுறைகள் அல்ல என்று தனது கருத்துக்களை இவர் கூறுகின்றார். ★

**வசாவிளான் தவமைந்தன்**

# வீக்கங்களை ஆற்றுவதற்குச் சிறந்தது இசங்கு

**இசங்கு**

**வேறுபெயர்:** சங்கன்குப்பி, குண்டலி, முத்தாபலம்.

**தாவரவியற் பெயர்** - Azima tetracantha (அசீமா ரெற்றாகந்தா)

**குடும்பம்** - Salvadoraceae (சல்வடோ ரேசியே)

**சிங்களப் பெயர்:** வல்குருந்து

**சமஸ்கிருதப்பெயர் :** குண்டலி

**ஆங்கிலப் பெயர்:** Garden Quinine

இது உலர் வலயத் தாவரம். ஏறும் தாவரம். தண்டு பச்சை நிறம், தனி இலைகள். நீள்வட்டமானவை. இலையடிச் செதில்கள் முட்களாக இருக்கும். பூக்கள் வெள்ளை நிறம். காய் சிறியது.



இதன் இலையைக் குடிநீரிட்டுக் காலை, மாலை 10-15 மி.லீ வரை பருகிவர சுரங்கள் தணிவடையும்.

இலையை அரைத்து தலையில் தேய்த்து முழுகிவரத் தலையில் உண்டாகும் சொறி, மண்டைக் கரப்பன், தலையவியல் என்பன குணமாகும்.

இலையை ஆமணக்கெண்ணையில் வாட்டி வீக்கங்களுக்குக் கட்ட வீக்கம் வற்றும்.

இலைச்சாறும் சிற்றாமணக்கு எண்ணெயும் சம அளவில் கலந்து காய்ச்சி எடுத்து காலையில் மட்டும் 10.15 மி.லீ அளவில் மூன்று நாள் பருகி வர சொறி, சிரங்கு, கரப்பன் நீங்கும். இதைப் பருகும் போது உணவில் உப்பு, புளிச்சேர்க்கக்கூடாது.

**நலம்தரும் தெய்வீக மூலிகைகள்**

வேரைப் பொடித்து நல்லெண்ணையுடன் சேர்த்துக் காய்ச்சி அந்த எண்ணெயை நாரிப்பிடிப்பு மூட்டு நோ, கை, கால் உழைவுக்குப் பூசிவர மாறும்.


**முசுட்டை**

**வேறுபெயர்:** முசுண்டை, பஞ்சி

**தாவரவியற் பெயர்**- Rivea ornate (ரிவியா ஓனேற்றா)

**குடும்பம்**- COVOL VULACEAE (கொன்வொல்வுலேசியே)

இது கொடி வகுப்புக்குரியது. பல்லாண்டு வாழும் பிறதாவரங்களைப் பற்றிச் சுற்றி ஏறும். தனி இலைகள் வட்டமாக அல்லது இதயவடிவாகவும் முனை சற்று கூராகவும் இருக்கும் பூக்கள் வெள்ளை பச்சை நிறம்.



காய் பச்சை நிறம்.

இதன் இலைகளைப் பாற்சொதியாகச் சமைத்துண்ண வாயவியல், வயிற்றுப் பொருமல், மலச்சிக்கல் என்பன நீங்கும். வறையாகச் செய்தும் உண்ணலாம்.

கொடியைக் குடிநீர்செய்து வெள்ளை சாய்தல், சொறி, சிரங்குக்குப் பருகக் கொடுக்கலாம்.

வேரை உலர்த்திப்பொடி செய்து தேங்காயெண்ணையுடன் சேர்த்துக் காய்ச்சி சொறி, சிரங்கு, கரப்பனுக்குப் பூசி வர குணமாகும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 174

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | 5 | 6 |
| | ■ | 7 | | | ■ | 8 | |
| 9 | 10 | | | ■ | 11 | | |
| 12 | | | ■ | 13 | | ■ | |
| ■ | | ■ | 14 | | | 15 | ■ |
| 16 | | 17 | | ■ | 18 | | 19 |
| | ■ | 20 | | 21 | | ■ | |
| 22 | | | | | ■ | 23 | |

அனுப்புபவர் பெயர்:............................................

விலாசம்:............................................

............................................

கையொப்பம்:............................................

### இடமிருந்து வலம்

1. பாவம் செய்யாதவன்
4. சோறு
7.தேர்
8. உயிர்ப்பின் ஆரம்பம்
9. காலம் பிந்துதல்
11.அமெரிக்காவுக்கு எதிரியாக இருந்தவர்
12. உறுதி
13.தமது
14. பெறவேண்டிய/ வருமதி
16. பல நாடுகளில் இனங்களிடத்தில் நிலவுவது
18. கவனிப்பாரற்ற நிலம்
20. கடத்தல்காரர்கள் இதையும் கேட்பார்கள்
22. இனிப்புச் சுவையுள்ளது.
23. இல்லம்

### மேலிருந்து கீழ்

1. ஒரு பாடலின் இறுதியை அடுத்த பாடலின் ஆரம்பமாகக் கொண்டமைந்த பாடல் வகை.
2. இந்தியா
5. முன்னிலையில்
6. நிஜத்தில் மிகச் சிறியது.
10. பங்கு
11. இணக்கம்
13. மரம்
14. தடையாக இருப்பது
15. மூன்று
16. பாட்டு இசைக்குக
17. பகுதி
19. தானிய அளவுக்குப் பயன்படுத்தும் அலகு
21. உயிர்க் காணிக்கை

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக் கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 172 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) சதாம் (3)மிதப்பு (6)காய் (7)சான்று (8) லாபம் (10) தகுதி. (12) அந்தி. (13)தலைவிரி (14)ருது (15) ஆடை. (16)தடு (17)அல்லா. (19)தவக்காலம் (21) திரிகல். (22) மாதம்

**மேலிருந்து கீழ்**

(1) சகா (2)தாய்லாந்து. (3)மின். (4)தறுதலை (5)புத்திரி (7) சாம் (9)பதி. (11)குவிதல் (12) அருந்ததி (13) தடை (15)ஆடுகால் (16) தக்க (17) அம்மா. (18)லாடம்

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 172 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** நியூநட்டன் சதீஷ், மீசாலை கிழக்கு, மீசாலை.

**2 ஆம் பரிசு** ஶ்ரீ.துஷாரா, ஆண்டு - 6, யா/வேம்படி உயர்தர மகளிர் பாடசாலை.

**3 ஆம் பரிசு** திருமதி பா.ஶ்ரீ. பாஸ்கரன், 7 ஆம் கட்டை ஒழுங்கை, மல்லாகம்.

**4 ஆம் பரிசு** செ.நாகமுத்து, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

**5 ஆம் பரிசு** ம.மதுவாஹினி, ஸ்ரான்லி கல்லூரி, யாழ்ப்பாணம்.

### பாராட்டுப் பெறுவோர்

**ம.மோகனவர்மன்,**
'கந்தன் அருள்'
இருபாலை வீதி, இருபாலை.

**எஸ்.எஸ்.எம்.சுலோச்சனா,**
47, பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில்

**பொ.கிரித்திகா,**
இலங்கை மின்சார சபை, சுன்னாகம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்ட சாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,
**சொற்சிலம்பம் போட்டி இல. 174**
*நியூ உதயன் பப்ளிகேஷன்*
*(பிறைவேற்)லிமிட்டெட்,*
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 17.08.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.
7. சொற்சிலம்பம் போட்டி இல.174 இற்கான விடைகள் 21-08-2011 ஞாயிறு உதயனில் ஞாயிறு உதயனில் பிரசுரமாகும்.

# பரிசு...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவள் ஒரு 'இலக்கிய மலடு' சஞ்சிகைகள், இலக்கியங்கள் பக்கம் தலையே வைத்துப் படுத்தறியாதவள். அவளே இவ்வளவு சஞ்சிகைகளைத் தேடி எடுத்து வாசித்து தேவையானவற்றின் கீழ் கோடிட்டு....

ஐயோ!

என்னை எழுத்தாளனாக்கியே தீருவது என்ற அவள் வைராக்கியம்....

முடிகிற காரியமா? 'பானையில் இருந்தாற்றானே அகப்பையில் வரும்'

தலையைப் பிய்த்துக் கொண்டேன்.

மாலையில் பாடசாலையால் வந்து எனது அறையுள் நுழைந்தேன். மேசை கதிரையைக் காணவில்லை. பாய் விரிக்கப்பட்டு, தலையணைகள் முன்னே ஒரு அணை. அதன் மீது வெற்றுத் தாள்கள், பேனா.

ஐயோ! என்ன செய்ய? தலையைப் பிய்த்துக் கொண்டேன். அன்று சனிக்கிழமை. பொது நூலகம் சென்றேன். சில சினிமா கதாசிரியர்கள், பாடலாசிரியர்கள் பற்றி சிறு குறிப்புக்கள்.

இப்போ எல்லாம் கவிஞர் பாடெழுத முன் பெத்தடின் ஊசி மருந்து ஏற்றி போதையிலே பாடல்கள் எழுதுகின்றார். அப்போது தான் அவருக்கு 'மூட்' வரும் பாடலும் கிட் ஆகும்.

ஆஹா!

கவனமாக வாசித்து அதன்கீழ் கோடிட்டேன். போதையிற்றான் என்ற வரி சுற்றும் முற்றும் பார்த்தேன். அப்பொழுது நூல் நிலையத்தில் ஒருவரும் என்னைக் கவனிக்கவில்லை. கோடிட்ட பக்கத்தைக் கவனமாகக் கிழித்து பொக்கற்றுக்குள் இட்டேன்.

ஐந்து நட்சத்திர ஹோட்டல் அறையொன்றில் தங்கி ஐந்து நாள்களில் இந்தப் படத்தின் கதை, வசனத்தை அமைத்துக்கொடுத்தேன். அமைதியான இன்பமான சூழலில் தான் எனக்கு ''மூட்'' வரும். இப்படத்தின் வெற்றிக்குக் காரணம் இதுதான் என்றிருந்தது மற்றொரு திரையுலகப் பிரமுகர் பேட்டி. அப் பக்கமும் என் பொக்கற்றுக்குள் தஞ்சம்.

இப்போதெல்லாம் நான் முன்புபோல் இல்லை. மனைவி முன்னிலையில் கூட குடிப்பேன் (அதற்காக எனக்கு வீரம் பிறந்துவிட்டது என்று தப்பாக எடை போடாதீர்கள்) போதையில் தான் இலக்கியம் பிறக்கிறது என்ற ''யுரேக்கா'' குடிப்பதற்கு எனக்கு 'லைசன்ஸ்' கிடைக்க வழி வகுத்தது.

நான் இந்த ஹோட்டல் அறையில் வந்து தங்கி நான்கு நாள்களாகிவிட்டன. இன்னும் மூன்று நாளிலேனும் ஒரு சிறுகதை பூர்த்தி செய்ய வேண்டும். அது பரிசு பெறவேண்டுமென்பதில்லை. பத்திரிகையொன்றில் பிரசுரமானாலே போதும். அப்போதுதான் இச் சொகுசு வாழ்க்கை நீடிக்கும்.

என் முயற்சி எந்தளவில் நிற்கிறதெனக் கண்ணோட்டமிட வந்த மனைவி, நான் எழுதிவைத்திருந்த ஒரிரு வரிகளை மேலோட்டமாகப் படிக்க ஆரம்பித்திருந்தாள்.''உச்சி வெயில் மண்டையைப் பிளந்து கொண்டிருந்தது. மணிக்கூட்டுவீதிச் சந்தியால் முனியப்பர் கோயில் பக்கம் திரும்பினேன். மணிக்கூட்டுக் கோபுரத்தில் நேரத்தைப் பார்த்தேன். முட்கள் இரண்டும் நான்குக்கும், ஐந்துக்குமிடையில் கட்டித் தழுவிய வண்ணம் இருந்தன. நேரம் நாலுஇருபது. வாசித்ததை இடைநிறுத்திய மனைவி என்னை நிமிர்ந்து பார்த்தாள்.

'' என்னப்பபா? உச்சி வெயில் மண்டையைப் பிளந்து கொண்டிருந்தது'' எண்டு எழுதி இருக்கிறியள். நேரம் 4.20 எண்டு போட்டிருக்கிறியள் 4.20 இற்கு உச்சிவெயில் எங்கு இருந்து வரும்.....?

நாக்கைக் கடித்துக்கொண்டேன். அடடே என்ன தவறு செய்துவிட்டேன். இலக்கிய சூன்யமான என் மனைவி இப்படி தவறு கண்டுபிடித்து விட்டாள்.... ஆழமாக வாசிக்கும் வாசக நண்பர்கள்....

சில நாள்களாகக் கிடைத்துவரும் குடியும் போய், பஞ்சுமெத்தைச் சுகமும் போய்...... பள்ளிக்கூடமும் நானுமாக, மனைவியின் தொணதொணப்புடன்...... நான் போட்டிருந்த மூளை நரம்புகளை வேகமாக இயக்க, என்மூளை உசாரடைந்தது (நம்புங்கள்! எழுத்தாளனாக வேண்டும் என்ற முயற்சியின் பின்னர் மூளை (ஏற்கனவே இருந்தது ) அவ்வப் போது வேலை செய்யத்தொடங்கியது)

மேல வடிவாப் பாரப்பா! மணிக்கூட்டுச் சந்தி முனியப்பர் கோயிலடி, இந்தக்கதையில வாறது எங்கடை யாழ்ப்பாண மணிக்கூட்டுக் கோபுரம். அது உச்சி வெயில் அடிக்கேக்கையும் சரி, நடுச்சாமத்திலேயும் சரி 4.20 ஐத்தான் காட்டும் என்றேன்.

ஓமப்பா நல்லவடிவா கழட்டொன்று குடுத்தியள். நான் இடஞ்சல் படுத்தேல்ல போட்டு வாறன். வார்த்தை முடியும் முன்னே மகிழ்ச்சிப் பிரவாகத்துடன் வெளியேறினாள்.

போதையில பாடசாலை சென்றதால் ''இன்ரடிக்ஷன்''. எனக்கு இப்ப அவ ஒரு குடிவகையும் வாங்கித் தாறேல்ல. அஞ்சாறு கதை எழுதி அனுப்பினனான்தான். ஒண்டும் பரிசு பெறாதுக்கு நான் என்ன செய்யிறது? நான் மட்டுமே கதை எழுதுறன்?

குடிக்காட்டி கையுமோடாது காலுமோடாது. காணறவையள்ளை பாய்ஞ்சு விழுகிறன். ஆனால் எழுத்துத் தொழிலை கைவிடவில்லை. ''உயிருள்ளவரை என் தொழில் எழுத்து! எழுத்து!!''

இதைச் சந்தியில நிண்டு சத்தம் போட்டுச் சொன்னன். என்னை ஒரு மாதிரி பாக்குதுகள் . அதால இப்ப என்னை வெளியில திரிய விடுறது இல்லை. இந்த அறையிலதான்.. பாரதியான பாரதியை பைத்தியம் எண்டு சொன்னவையும் இருக்கினம் பாருங்கோ...! எனக்குத் தொழில் எழுத்து! எழுத்து! எழுத்து. அடுத்த கதைக்கான கருவை வெளிக்கொணர தலையைப் பிய்த்துக் கொள்கிறேன். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 29

# உணர்வுகளைப் புரிந்து கொள்ள...

மனித வாழ்வில் உணர்வுகள் முக்கியமானவை. பல சமயங்களில் நாம் எமது உணர்வுகளில் வாழ் கின்றோம். ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உணர்வு வெளிப்பாடு மிகவும் முக்கியமானது. இதற்கான பயன்தரவுள்ள படிமுறைகளைச் சிந்திப்போம்.

**உணர்வுகளை இனம் காணுதல்**

இதுதான் முதல்படி. பல உணர்வுகள் எமக்குப் பழக்கமானவை. மகிழ்ச்சி, ஆச்சரியம், பயம், பாலுணர்வு, வெறுப்பு, குற்றவுணர்வு, கோபம், பொறாமை, திருப்தி என அவை பல வகைப்படும். இந்த உணர்வுகளுள், எமது தற்போ தைய உணர்வு என்ன என்பதற்கான விடை எமக்குத் தெரிந் திருத்தல் நன்று. உணர்வுகளைப் புரிந்து கொள்ளப் பின்வரும் வழிமுறைகள் பயனுடையவை.

**சுய உரையாடல்**

எம்முடன் நாம் உரையாடக் கற்றுக்கொள்வதன் மூலம் எமது உணர்வுகளை நாம் புரிந்துகொள்ள லாம். நாம் பல தடவைகளில் ஆச்சரியப்படும் அள வுக்கு எமது உணர்வுகள் வேறுபடுவதை இச்செயன் முறையின் மூலம் அறிந்து கொள்ளமுடியும்.

**எழுதுதல்**

எமக்காக நாம் செலவிடும் நேரங்களில் இதனை மேற்கொள்ளலாம். ஒரு அமைதியான குழப்பமில்லாத இடத்தில் உணர்வு வெளிப்பாட்டை அடிப்படையாக வைத்து, மனம் விரும்பிய போக்கில் எழுதுவது எமது உணர்வுகளை எமக்கு வெளிப் படுத்தும்.

**நட்புடன் அளவளாவுதல்**

எமக்கு நம்பிக்கை தரும் உறவுகளில் எம்மை நாம் வெளிப் படுத்தும் போதும் எமது உணர்வுகளை நாம் இனங்காணலாம்.

**உணர்வுகளை ஏற்றுக்கொள்ளலும், பொறுப்பெடுத்தலும்**

இது இரண்டாம் படி. மிகவும் முக்கியமானதும் கூட. நாம் இனங்காணக்கூடிய எல்லா உணர்வுகளையும் எம்முடைய உணர்வுகளாக ஏற்றுக்கொள்வதும் அவற்றுக்கு நாம்தான் பொறுப்பு என பொறுப்பு எடுப்பதும் இன்றியமையாதன. பொதுவாக எதிர்மறை உணர்வுகளான கோபம், பொறாமை, குற்றவுணர்வு போன்றவற்றைப் பொறுப்பெடுக்க நாம் விரும்புவதில்லை.

உ+ம் நான் கோபப்பட்டேன் என்று சொல்வதைத் தவிர்த்து, 'எனக்குக் கோபம் வந்தது' என்று கூறுவதைக் குறிப்பிடலாம். சில உணர்வுகளை ஏற்றுக்கொள்வதில் எமக்குப் பண்பாட்டு ரீதியான தடைகள் தடங்கலாக இருக்கலாம். பாலுணர்வு அவற்றில் முக்கியமானது.

வைத்திய கலாநிதி
G.J.பிரதீபன் MBBS,MD

**உணர்வுகளை ஆரோக்கியமாக வெளிப்படுத்துதல்**

இந்தச் செய்முறை எமது வாழ்வையே தீர்மா னிக் கின்றது. இது ஒவ்வொருவருக் கும் தனித்துவமானது. நாம் இனங் கண்ட, ஏற்றுக்கொண்ட ஒவ்வோர் உணர்வையும் ஆரோக்கியமாக வெளிப்படுத்தும் போது நாம் ஆளுமை யில் வளர்ச்சியடைகின்றோம். பொதுவாக நேர்மறை யான உணர்வுகளை வெளிப் படுத்துவது எமக்கு இலகு வானதாகவும் எதிர்மறையான உணர்வுகளை வெளிப்படுத் துவதும் எமக்கே கடினமான தாகவும் அமையலாம். குறிப்பாக எதிர்மறையான உணர்வுகளை ஆரோக்கியமாகக் கையாளுதல் எமக்கும் பிறருக்கும் மிகவும் முக்கியமான தாகும். உ+ம் 'நான் கோபத்தில் கத்திவிட்டேன்' அல்லது நான் கோபத்தில் எனது பிள்ளையை அடித்து விட்டேன் போன்ற வாக்கியங்கள் நாம் அடிக்கடி கேட்பவை.

**எதிர்மறையான உணர்வுகளைக் கையாளும்போது கவனிக்க வேண்டியவை**

* அவ்வுணர்வுகள் நியாயமானவையா எனச் சிந்தித்தல். உ+ம் எனது கோபம் நியாயமானதா? என்ற வினா வுக்கு விடை தேடுதல்.
* அது நியாயமானதெனில் அதற்கான அடிப்படைக் காரணத்தைக் கண்டறிய முற்படல்.
* எனது வரம்புக்குள் அக்காரணத்தை நிவர்த்தி செய்ய முற்படல்.
* இதற்காகப் பல்வேறு தரப்பின ருடனும் கலந்துரை யாடலில் ஈடுபட வேண்டி ஏற்படலாம்.
* நிவர்த்தி செய்ய முடியாத காரணங் களாயின் உணர்வு வெளிப்பாட்டை மையப்படுத்திச் செயற்படுதல். இதற் கும் உரையாடுதல், எழுதுதல், வாய் விட் டுப் பிரார்த் தனை செய்தல், அழுதல் போன்ற முறைகள் பயன்படலாம்.
* சரியான நேரத்தில் பொருத்தமான நபரிடம் பொருத் தமான அளவில் பெருத்தமான முறையில் உணவுகளை வெளிப்படுத்தல் மிகவும் முக்கியமானது. உணர்வுகளை இனங் கண்டு, உணர்ந்து அவற்றுக்கு உரிமை கோரி உவப்பு டன் வெளிப்படுத்தினால் நாம் ஆளுமையில் வளர்ச்சி யடைவோம். அதைவிடுத்து உணர்வுகளை உயிருடன் புதைத்தால் அவை ஒரு நாள் உயிர்த்தெழும். ✱

உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவினால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப் பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்திய சாலை,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

# மாபெரும் சுகாதார விழிப்புணர்வு நிகழ்வு

யாழ். போதனா வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க அனுசரணையுடன் யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையம் மாபெரும் சுகாதார விழிப்புணர்வு நிகழ்வொன்றை நல்லூர் கந்தன் திருவிழாக்காலங்களில் நடத்துகின்றது. இந்த நிகழ்வுகள் நல்லூர் கந்தனின் கொடியேற்ற தினத்தில் இருந்து தீர்த்த உற்சவம் வரை நல்லூர் வடக்கு வீதியில் காலை 7 மணியிலிருந்து மாலை 8 மணிவரை நடைபெறும். நல்லூர் கந்தனைத் தரிசிக்க வரும் பக்தர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

1. சுகாதாரம் சம்பந்தமான விளக்கங்களும், கண்காட்சியும் இடம்பெறும்.
2. இலவச குருதியமுக்க சோதனை.
3. நீரிழிவு நோய்க்கான குருதிப்பரிசோதனை, இதற்கு சேவைக் கட்டணமாக 50/= அறவிடப்படும்.
4. இதுவரை காலமும் நீரிழிவு சிகிச்சை நிலையத்தால் உதயன் பத்திரிக்கையில் ''நித்திய சுகத்தை நோக்கி'' என்ற பகுதியில் தொகுத்து வழங்கிய அனைத்து ஆக்கங்களும் நூலாக வெளியிடப்பட்டுள்ளன. அந்த நூலை இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
5. சுகாதார சம்பந்தமான ஒளிப்படக்காட்சிகள் தொடர்ந்தும் ஒளிபரப்பப்பட்டுக் கொண்டிருக்கும்.
6. சுகாதார விழிப்புணர்வு சம்பந்தமான பல இறுவட்டுகளை இங்கு பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.
7. நீரிழிவு சிகிச்சை நிலையத்தின் உணவு சம்பந்தமான ஆய்வின் மூலம் பொது மக்களின் உதவியுடன் கண்டறியப்பட்ட ஆரோக்கிய உணவுவகைகளை எவ்வாறு சமைப்பது சம்பந்தமான ''ஆரோக்கிய உணவு செய்வோம்'' என்னும் நூலை இங்கு பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.
8. புற்றுநோய் சம்பந்தமான விளக்கங்களும் கண்காட்சியும் இங்கு நடைபெறும்.
9. இரத்த வங்கியின் குருதித் தானம் வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெறும்.
10. இதுவரை நீரிழிவு சிகிச்சை நிலையத்தால் நடத்தப்பட்ட இரண்டு நீரிழிவு விழிப்புணர்வுக் கண்காட்சி நிகழ்வுகளில் விளக்கப்பட்ட இறுவட்டுகளும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
11. நீரிழிவு சம்பந்தமான பூரண விளக்கங்கள் அடங்கிய ''நீரிழிவுக்கு ஒரு சவால்'' என்ற நூலையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
12. இங்கு புதிதாகக் கண்டறியப்படும் நீரிழிவு நோயளர்களுக்கும் குருதியமுக்க நோயாளர்களுக்கும் தொடர் கவனிப்பு முறை ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.
13. நீரிழிவு சுகாதார விழிப்புணர்வில் பங்குபற்ற விரும்பும் மத நிறுவனங்கள் இந்தப் பகுதியுடன் தொடர்பு கொண்டு அவர்களின் நடவடிக்கைகளுக்கான அனுசரணைகளைப் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் கந்தனைத் தரிசிக்க வரும் அன்பர்கள், அடியார்கள் அனைவரும் எமது சுகாதார விழிப்புணர்வு பகுதிக்கு ஒரு முறை வந்து சுகாதாரம் சம்பந்தமான அனைத்து ஆலோசனைகளையும் பெற்று நன்மை அடையுமாறு நீரிழிவு சிகிச்சை நிலையம் அன்புடன் கேட்டுக் கொள்கிறது.

ஊடக அனுசரணை உதயன்

# வீதி விபத்துக்களால் ஏற்படும் இழப்புக்களைத் தவிர்ப்போம்



இன்றைய நவீன யுகத் தில் விஞ்ஞானம், மருத் துவத் துறையில் எவ்வ ளவு சாதனை களை எட் டிய நிலையில் மனிதன் வீணே விபத்துக் களில் சிக்கி தன்னையும் அழித்து மற்றவர்களை யும் அழித்துக் கொண்டி ருக்கிறான். ஒரு சில விபத்துக்கள் தவிர்க்க முடியாதவை. எனினும் பெரும்பாலான விபத்துக் கள் மனிதனின் அவசரத் தாலும், போட்டியாலும் தான் ஏற்படுகின்றன. இந்த விபத்துக்களால் அங்கவீனம் அடைவதுடன் சிலர் மர ணத்தையும் தழுவுகின்றனர்.

பெரும்பாலான வீதி விபத்துக்கள் அதிகூடிய வேகத்தில் வாகனம் செலுத்துவ தாலும், மது போதையில் வாகனம் செலுத்துவதாலும் ஏற்படுகின்றன என்பது வைத்தியசாலைப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

எனவே மனிதர்கள் ஒவ்வொருவரும் இதை உணர வேண்டும். இதனைச் சட்டத்தால் திருத்த முடியாது. எவ்வளவு சட்டம் போட்டாலும் ஒவ்வொருவரும் உணர்ந்து திருந்தும் வரை இதனைத் தடுக்கமுடியாது.

எனவே ஒவ்வொருவரும் எமது வாழ்வு பெறுமதியானது என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். உங்களது ஒரு நிமிட அவசரம் எத்தனை உயிர்களைப் பலிகொள்ளவும் காயமாக்கவும் காரணமாகிறது. அதேநேரம் அதே ஒருநிமிட நிதானம் எத்தனை பேர்களைக் காப்பற்றவும் உதவுகிறது.

எந்த ஒரு மனிதனும் தனது தவறுகளை ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் உண்மை உங்கள் மனச் சாட்சிக்கே தெரியும். எனவே வாகனம் செலுத்தும் போது நிதானமாகவும், பொறுமையாகவும் செலுத்துவோம் என உறுதி எடுத்துக் கொள்ளுங்கள்.

அடுத்ததாக வீதி ஒழுங்குகளைப் பலர் கடைப்பிடிப்பதில்லை. அவற்றை காவல் துறையினர் நின்று தான் ஒழுங்குபடுத்த வேண்டும் என எண்ணாமல் நாம் ஒவ்வொருவரும் நிதானமாகவும், அவதானமாக வும் ஒழுங்கு முறைப்படியும் வாகனம் செலுத்துவோமாயின் பெரும்பாலான விபத்துக்கள் தவிர்க்கப்படும் என்பது உண்மையாகும்.

எனவே நாம் ஒவ்வொருவரும் போட்டி, அவசரம், மதுபோதை என்பவற்றைத் தவிர்த்து நிதானமாகவும், பொறுமையாகவும், ஒழுங்குமுறையாகவும் வாகனம் செலுத்தி எம்மையும் மற்றவர்களையும் காப்பாற்றுவோமாக. ✱

செ.தவச்செல்வம்
தாதிய உத்தியோகத்தர்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்து மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வு

யாழ்.சைவபரிபாலன சபை நடத்தும் அகில இலங்கை சைவ மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நீராவியடி சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் காலை 9 மணிக்கு திரு முறை ஓதலுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து காலை 9.30 மணிக்கு 'சைவநெறி காட்டும் வாழ்வியல்' என்னும் தலைப்பில் கருத்தரங்கு இடம்பெறும்.

இதில் ' உடல் உள மேம்பாட்டுக்கு' என்னும் தலைப்பில் கலாநிதி எஸ்.முகுந்தன், 'ஆன்ம ஈடேற்றத்துக்கு' என்னும் தலைப்பில் மு.கௌரிகாந்தன், 'சமூக இணைப்புக்கு' என்னும் தலைப்பில் ச.லலீசன், 'மனிதநேயத்துக்கு' என்னும் தலைப்பில் கு.பாலசண்முகன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து 'தமை உடையதன் உணர்வார்' என்னும் தலைப்பில் முனைவர் நல்லூர் சா.சரவணன் உரை நிகழ்த்துவார்.

தொடர்ந்து மாலை 4 மணிக்கு இடம்பெறும் நிகழ்வில் சைவபரிபாலன சபைத் தலைவர் சிவநெறிப் புலவர் த.சண்முகலிங்கம் தலைமையில் மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் நிகழ்வில் 'சைவமும் நாமும்' என்னும் தலைப்பில் கலாநிதி செ.திருநாவுக்கரசு உரை நிகழ்த்துவார்.

தொடர்ந்து 'சைவசித்தாந்த மேம்பாட்டுக்கு ஈழத்தவரின் பங்களிப்பு' என்னும் தலைப்பில் பேராசிரியர் மா.வேத நாதனும், 'பொய் காட்டா மெய்' என்னும் தலைப்பில் முனைவர் நல்லூர் சா.சரவணன் ஆகியோர் உரைநிகழ்த்துவர். (ம-313)

# சட்டப்படி குற்றம்




## விமர்சனம்

சமூக அக்கறை இல்லாத, மக்களின் அடிப்படைத் தேவைகளைத் துளியளவு கூட சிந்திக்காமல் ஊழல் மோசடிகளில் ஈடுபடும் அரசியல்வாதிகள் நாட்டிலேயே இருக்கக்கூடாது. இவ்வாறு இருக்கும் அரசியல்வாதிகளை இல்லாமல் செய்வதன் மூலமும் இந்த நாட்டையும் மக்களையும் மேம்பாடடைய வைக்கும் செயற்பாடுகளில் சிறந்ததோர் எதிர்காலத்தை உருவாக்கமுடியும். இது எமது நாடு, மக்கள் சிந்தித்துச் செயலாற்றக் கூடிய சுதந்திரமான சூழலை உருவாக்கி விடும் என்பது உண்மை . சட்டப்படி குற்றம் திரைப்படத் தின் கதையும் இவ் வாறு அமைந்துவிடுகிறது.

ஊழலில் ஈடுபடுபவர்களையும் அரசியலில் மக்களுக்குப் பயனில்லாதவர்களையும் போராளிகளாக உருவெடுத்து காட்டில் பதுங்கி இருந்து ஒழித்துக்கட்டுகிற கதை தான் சட்டப்படி குற்றம் திரைப்படத்தின் கதை ஆகும். நேர்மையான முறையில் மக்களுக்காகத் தனது கடமையைப் பொறுப்பேற்று செய்துவருகின்ற பொலிஸ் அதிகாரியான சுபாஸ்சந்திரபோஸை தனது வீட்டுக்கு அழைத்து அவமானப்படுத்துகிறார் தொகுதி எம்.பி. தனது செருப்பை எடுத்து வரும்படி சொன்ன எம்.பி மீது கோபம் கொண்ட போஸ் அதே செருப்பால் எம்.பியை நாலு சாத்துச் சாத்திவிடுகிறார். கோபம் கொண்ட எம்.பி. போஸின் குடும்பத்தையே வேரறுத்துவிட போஸ் பொலிஸ் வேலையில் இருந்து ஒதுங்குகிறார்.

நேருக்கு நேராக எம்.பியுடன் மோதி ஜெயிக்க முடியாது என்பதை உணர்ந்த போஸ் தன்னைப்போல அரசியல்வாதிகளாலும், அதிகார வர்க்கத்தாலும் பாதிக்கப்பட்ட இளைஞர்களையும், யுவதிகளையும் சேர்த்து அவர்கள் மூலமாக ஊழல்வாதிகளையும், சமூகத்துக்கு உதவாத அரசியல்வாதிகளையும் ஒழித்துக்கட்டுகின்றார். உயர் நீதிமன்ற நீதிபதிகள் பத்திரிகையாளர்கள், பொலிஸ் அதிகாரிகள், மாவட்டக் கலக்டர் என்று 40 பேரைக் காட்டுக்குள் கடத்தி வரவைக்கிறார் போஸ். கடத்தப்பட்டு வருபவர்களிடம் தங்களின் சோகக்கதையைக் கூறி நாடு இன்றைக்கு இருக்கும் நிலைமையை எடுத்துச் சொல்லித் தாங்கள் நடத்தவிருக்கும் புதிய சுதந்திரப் போராட்டத்துக்கு அவர்களிடத்தில் உதவி கேட்கிறார். ஒரு நீதிபதி ஒத்துக்கொள்ள அவருடைய தலைமையிலேயே அரசியல்வாதிகளுக்கு எதிராக தனது போராட்டத்தைத் தொடக்குகிறார்.

போஸ் இதற்கு இன்னொரு பொலிஸ் அதிகாரியும் ஒத்துழைப்புக் கொடுக்க முதலில் அரசியல்வாதிகளிடம் கூட இருப்பவர்கள் சுட்டுக் கொல்லப் படுகிறார்கள். பின்பு மக்கள் சொத்துக்களை அபகரித்து வைத்திருக்கும் அரசியல்வாதிகளின் மேல் பொலிஸ் நீதிமன்ற மூலம் நடவடிக்கை எடுக்க வைக்கிறார். அரசியல்வாதிகள் அனைவரும் அடுத்த இரண்டு நாள்கள் இடைவெளியில் அந்தந்த மாவட்டக் கலெக்டரிடம் தாங்கள் முறைகேடாகச் சம்பாதித்த சொத்துக்கள் அனைத்தையும் ஒப்படைக்குமாறு எச்சரிக்கை விடுக்கிறார்கள்.

மந்திரிகளும், எம்.எல்.ஏக்களும் கட்சித்தலைவரிடம்போய் இதுபற்றி முறையிட அவர் தன் சோகத்தைச் சொல்லிப் புலம்புகிறார். நடிகர் சத்தியராஜ் சேகுவேரா ஸ்ரைலில் உருமாறி இருக்கிறார். நீண்ட வருடங்களாக அவர் எதிர்பார்த்திருந்த வேடம் இப்போதுதான் சரிவந்து இருக்கிறது. வழக்கறிஞராக நடித்திருக்கும் சீமானின் வாதம் சுவாரஸ்யமாக உள்ளது. வில்லனாக நடித்திருக்கும் வெங்கடேசனின் நடிப்பு கதாபாத்திரத்துக்கேற்ப அமைந்திருக்கிறது. விக்ராந், கரிஸ் கல்யான், பாலு, ராதாரவி, சுரேஸ் என மற்றக் கதா பாத்திரங்களும் தங்களுடைய நடிப்பைச் சரியாகச் செய்திருக்கிறார்கள்.

ராதாரவி நீதிபதியாக நடித்து அவர் வாசிக்கின்ற தீர்ப்பு வாசகங்கள் மிக நகைச்சுவையாகின்றன. காட்டுக்குள் பல இளைஞர்களைச் சேர்த்துக் கொண்டுபோய் பயிற்சி கொடுப்பதைக் கற்பனையில் கூட நினைத்துப்பார்க்க முடியவில்லை. சந்தணக் கடத்தல்காரன் வீரப்பன் கதையை தொட்டிருக்கிறார் இயக்குநர். நடிகையுடன் உல்லாசமாக இருந்த சாமியார் என்று துவங்கி ஊழலில் ஈடுபடும் அரசியல்வாதிகள் என அத்தனைபேரையும் இல்லாமல் செய்யும் இந்தப் படத்தின் காட்சிகள் அரசியல்வாதிகளையும் சாமியார்களையும் திருத்த முற்பட்டிருக்கிறது.

நாளாந்தம் வெளிவரும் பத்திரிகையின் செய்திகளை இந்தப் படத்தில் காட்சிகளாக எடுத்து அதனை ஒன்றுக்குப் பின் ஒன்றாக இணைத்துப் படமாகக் கொடுத்திருக்கிறார் படத்தின் இயக்குநர். ஊமை விழிகள் என்ற படத்தின் ராத்திரி நேரத்து பூஜையில் என்ற பாடலை ரீமிக்ஸ் செய்து இருக்கிறார் விஜய் ஆன்ரனி. இந்தப் படத்தில் வரும் காட்சி ஒவ்வொன்றும் ஆளும்கட்சியை நேரடியாகவே தாக்கி இருப்பது வரவேற்கத்தக்கது.

இந்தக் காலகட்டத்தில் தமிழ் நாட்டுக்கு மிக அவசியமான திரைப்படம் இது. தற்போதைய அரசியல் சூழலை அக்குவேறு ஆணி வேறாகக் காட்சிப் படுத்தியிருக்கிறார் இயக்குநர் எஸ். ஏ.சந்திரசேகரன். நித்தியானந்தா- ரஞ்சிதாவின் பிரச்சினையும் ஒரு பகுதியாக வருகிறது.

தமிழ் நாட்டில் சென்ற தேர்தலில் சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதியில் சிதம்பரம் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்ட கதையும் வருகிறது. ஆ.ராசாவின் ஸ்பெக்ட்ரம் ஊழலை உரித்துத் தொங்கவிட்டிருக்கிறார்.

- குமார்.

# வாக்காளர் படிவங்கள் விநியோகம்

2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு தயாரிப்பதற்கான படிவங்கள் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராம அலுவலர்களால் குடியிருப்பாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

தென்மராட்சி பிரதேசத்தில் பதிவு செய்யப்படும் வாக்காளர் நிரல் படிவங்களை இந்தமாத இறுதிக்குள் அனுப்பிவைக்குமாறு மாவட்டத் தேர்தல் அலுவலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்துக் குடியிருப்பாளர்களும் தமது படிவங்களைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-207)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக.7

அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்புகளின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசுவாமி ஆலய திருவிழாவை முன்னிட்டு ஆன்மிக சொற்பொழிவுகள் நடத்தப்படவுள்ளன.

நல்லூர் 63 நாயன்மார் மடத்தில் தினமும் மாலை 6.30மணிக்கு இடம்பெறவுள்ள ஆன்மிகச் சொற்பொழிவில் இன்று ஞாயிற்றுக்கிழமை சைவப்புலவர் கமலநாதனின் சொற்பொழிவு இடம்பெறும். (ம-311)



நல்லூர் கந்தன் மஹோற்சவம்
(நான்காம் திருவிழா)

நாளுமெமைக் காத்திடய்யா

செவிகள் பன்னிரண்டு கொண்ட செவ்வேளே
சற்றே எம் குறைகளைக் கேளுமையா
விழிகள் பன்னிரண்டு கொண்ட வேலா கடைக்
கண்ணாலெம் நிலைதனை நீ பாருமையா
சக்திமிகு வேலதனைக் கொண்டவனே
சண்முகனே..! சஞ்சலங்கள் தீர்த்திடையா
நல்லையுறை நாயகனே முக்கண்ணன்
திருமகனே..! நாளுமெமைக் காத்திடைய்யா

நாயன்மார்க்கட்டு
ப.மகேந்திரதாசன்

நாடி வருவோர்க்கு நலமளிக்கும் நல்லூரா

ஆடிவரும் மயிலேறு ஆணழகா – முருகா
நம் அவலங்கள் அடியொடு மண்ணினிலே மறைய
கோடி முறையுனைப் பணிந்தோம் கோமகனே – மருக
கொண்டவள்ளி தெய்வானையுடனுறை மணவாளா
பாடியுனைப் பணிந்தோம் பாலகனே கந்தா
பாடல்பெற்ற திருத்தலத்தின் பாவலனே நாதா
தேடியுனைச் சரணடைந்தோம் தேவாதி தேவா
தேவர் குறை தீர்த்த தேசத்தின் – வேலா
நலம் காத்து நமைக்காக்கும் நாயகா
நாடிவரும் அன்பர்க்கு நலமளிக்கும் நல்லூரா

க.நாகேஸ்வரா சண்டிலிப்பாய்.

விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:
சந்தியா மல்ரி கோட்யாட்
இல. 531, பருத்தித்துறை வீதி, நல்லூர். யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6960

வருடாந்த மஹோற்சவம் 2011



சங்கானை செங்கற்படை
மகாதேவப் பிள்ளையார்
(நான்காம் திருவிழா)

கரணங்கள் நான்கும்
உன் திருவடியில் சரணமாக
வளங்கள் பல வேண்டி
4 ஆம் பெருவிழாவில்
நாளும் பொழுதும்
நல்லதொரு மனத்துடனே
நலமாக நனி சிறந்து
நாடுவோம் உம் பாதம்

சிறப்புற வாழ்த்துவோர்:
அமரர் கந்தையா இராமலிங்கம் நினைவாக
4 ஆம் திருவிழா உபயகாரர், தொட்டிலடி, சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிநேகிதிக்காய்.....

மலையினின்று விழும்
அருவியின் இராகங்கள்
தரையினின்று எழும்
பறவைகளின் ஓசைகளாய்
மொட்டின்று விரிவும்
மலர்களின் மௌனங்களுடன்
புதுமெட்டமைத்து
அந்தி மாலை முழுநிலவாய்
என் இருதயமெங்கும்
பொன்னொளி எறியும்
எனதாருயிர் சிநேகிதியே
உனக்காக
கவிப்பூக்களை
நட்பு நாரில் கோர்த்து
உதிர்ந்து போகாச்
சரமாய்த் தொடுக்கிறேனடி....

தியா,
தீவகம்.



# எப்படியான நண்பரை தெரிவு செய்வது?



நண்பர்கள் என்பவர்கள் எமது உயிரோட்டம் போன்றவர்கள். எமது டயறி போன்றவர்கள். எமக்கு ஏற்படும் இன்பங்கள் துன்பங்கள் பிரச்சினைகள் துக்கம் போன்ற பல்வேறு விடயங்களைப் பகிர்ந்து கொள்ள சுமை தாங்கியாய் இருப்பவர்கள்.

இந்த நிலையில் நாம் எவ்வாறான நண்பர்களைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதில் மிகவும் தெளிவாக இருக்க வேண்டும்.

வாழ்க்கையில் எம்மை உயர்த்தி வைப்பவர்களும் நண்பர்கள் தான். எமது வாழ்வுக்கு உறுதுணையாக இருப்பவர் களும் நண்பர்கள்தான். எமக்கு ஏற்படும் எந்த வொரு பிரச்சினைகளுக்கும் அவர்கள் தான் எமக்கு உறுதுணையாக இருப்பார்கள்.

இதற்கேற்ற வகையில் எமது நண்பர்களை நாம் தெரிவு செய்ய வேண்டும்.

சிலரது வாழ்வில் அவர்களது நண்பர்கள் குறிகிய காலம் தான் அவர்களுடன் இருப்பார்கள். மனம் விட்டுப் பேசாமை, பிரச்சினைகளை நேருக்கு நேர் கதையாமை போன்ற பல்வேறு காரணங்கள் இந்த நட்பு வட்டத்தில் உடைசலை ஏற்படுகின்றன.

இந்த இடத்தில்தான் நாம் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும். எந்த ஒரு சிறு பிரச்சினைகளுக்காகவும் எமது நண்பர்களை நாம் இழப்பதற்குத் தயாராகிவிடக் கூடாது.

ஆயிரம் பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அவற்றுக்கு எல்லாம் தீர்வு காணும் முகமாக ஒருவரை ஒருவர் மனம் விட்டுப் பேசிப் பிரச்சினைகளுக்கு முடிவு கட்ட வேண்டும். இதேவேளை எமக்குக் கிடைக்கும் நண்பர்களில் ஒரு சிலர் தவறிவிடுவதும் உண்டு. அதாவது எம்மை விட்டு விலகி விடுவது அல்லது நாம் அவர்களை விட்டு விலகிவிடுவது என்று எடுத்துக் கொள்ளலாம்.

சில சிறிய விடயங்களில் நண்பர்களுக்குள் ஏற்படும் பிரச்சினைகளை வேறு ஒருவருக்குக் கூறுவது, நண்பர்கள் தனிப்பட்ட ரீதியில் கூறும் விடயங்களை வேறு எவருக்காவது கூறுவது, நம்பிக்கைத் தன்மையை இழக்கச் செய்வது போன்ற காரணங்களால் இவ்வாறான பிரிவுகள் ஏற்படுகின்றன. இந்நிலையில் பிரியும் நண்பர்களை நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். இதற்காகக் கவலைப்படுவதில் எந்த நன்மையும் எமக்குக் கிடைத்துவிடப் போவதில்லை. எனவே நண்பர்களது தெரிவும் அந்த நட்பைப் பேணிக் காக்க வேண்டிய பொறுப்பும் எமது கைகளில் தான் உள்ளன.

வீணா,
நல்லூர்.

# நட்பு

நட்பென்ற இனி சோலையிலே
நடைபயின்ற நாமிருவரும்

இன்று பிரிவென்ற மூன்றெழுத்தால்
பேதலித்து நிற்கின்றோம்
உன்னைக் காணாத என் முகம்
இன்று திரியிருந்தும் எரியாத விளக்காய்

பிரகாசிக்க மறுக்கின்றது
அன்று என்ற பாலைவனத்தில்
திசை தெரியாப் பறவைகளாய் நாமிங்கு
அடுத்த பிறப்பென்று ஒன்றிருந்தால்
மீண்டும் ஒருமுறை மேகத்தில்
ஒன்றாக
இருவரும் சந்திப்போம்.



## இன்று நண்பர்கள் தினம்

### ஆரோக்கியமானது நட்பு

★நட்பு என்பது நமது ஆரோக்கியம் போன்றது. அதை இழந்த பிறகுதான் அதன் அருமையை உணர்வோம்.

★புத்தகங்கள் தான் நம்முடன் பேசும் மௌன நண்பர்கள்

★ எந்த ஒரு காயத்துக்கும் நண்பன் மருந்தாவான். ஆனால் நண்பன் ஏற்படுத்தும் காயத்துக்கு மருந்தே இல்லை.

★ உன் நண்பனுக்காக எதை வேண்டுமானாலும் விட்டுக் கொடு. ஆனால் ஒருபோதும் நண்பனை மட்டும் விட்டுக் கொடுத்து விடாதே.

★ வாழ வைப்பவன் இறைவன். வாழத் தெரிந்தவன் மனிதன். விழ வைப்பவன் துரோகி, தூக்கி விடுபவன் நண்பன்.

சிவகுமார் றஜீதா, அளவெட்டி.

# நட்பை நிர்வகிப்பது எப்படி?

சுட்டி நிஷான்,
சங்கானை

'முகநக நட்பது நட்பன்று' வள்ளுவம் சொல்கிறது வாழ்க்கை முழுதும் தொடரும் நட்பின் இலக்கணத்தை. பாடசாலை, கல்லூரி, அலுவலகம், சமூகம் என அனைத்து நிலைகளிலும் நட்பு என்பது சமூக அமைப்பில் ஓர் உறவு என்ற அடையாளத்தைத் தாண்டி, சமூக குணநலனாகக் கருதப்படுகிறது.

இந்த உலகத்தில் நட்பு இல்லாதவர்கள் யாருமே இருக்க முடியாது. அப்படி மக்களுடன் நெருங்கிப் பழகாமல் ஒட்டுதல் இல்லாமல் இடைவெளிவிட்டு ஒதுங்கி வாழ்பவர்களை 'ஆஸ்பர்ஜெர்' என்று வரையறுக்கிறது உளவியல். கை குலுக்கி, கன்னம் கிள்ளி, முதுகு தட்டி, கண்ணாமூச்சி ஆடி, சிறுவயதில் தோன்றுகிற நட்பு காலப் போக்கில் காலாவதியாகிவிடுகிறது.

இப்போதெல்லாம் பக்கத்தில் இருக்கும் நண்பர்களைப் பார்க்க முடியாத பணிச் சூழலில் குறுஞ்செய்திகள், இ-மெயில்கள்தான் நட்பைக் காக்க உதவுகின்றன.

முகத்துக்கு முகம் பார்த்து, தோள் தாங்கி, மடி சாய்ந்து, சிரித்து வளர்த்த இந்த நட்பையே நம்மால் சரியாக நிர்வகிக்க முடியாதபோது, உலகின் எங்கோ ஒரு மூலையில் இணையம் என்ற கலங்கிய குட்டையில் தன் முகம் மறைத்து நண்பன் என்று நம்மிடம் அறிமுகப்படுத்திக்கொள்ளும் மனிதர்களையும், உண்மையிலேயே அன்புக்காக ஏங்கும் இணைய இதயங்களையும் எப்படி இனம் கண்டுகொள்வது?



# அன்புடன்

நண்பர்களை உடனடியாகத் தெரிவு செய்துவிட முடியாது. காலப் போக்கில் பேசிப் பழகும்போதுதான் நண்பர்கள் குறித்த விவரங்களை நாம் புரிந்து கொள்ள முடியும். இவ்வாறாக எமக்குப் பொருத்தமான நண்பர்கள் கிடைத்துவிட்டார்கள் என்று சொன்னால் அது மறக்க முடியாத மகிழ்வையும் வாழ்வில் உயர்வையும் தரும் என்பது நிச்சயமே.

அவ்வாறாகக் கிடைத்த நண்பர்களை நட்பு வட்டத்தை உடைந்து விடாது காக்க வேண்டியது எமது கடமையாகத் தான் இருக்கும்.

எமக்குக் கிடைக்கும் நண்பர்கள் எமக்கு உரியவர்களாக மட்டும்தான் இருக்க வேண்டும் என்று நாம் நினைப்பதில் எந்த விதமான தவறுகளும் இல்லை. இந்தநிலையில் எமது நண்பர்கள் வேறு எவருடனாவது பழகும் போது எமக்கு எவ்வாறு தூக்கிவாரிப் போடுகிறது. அது போல்தான் அவர்களுக்கும் இருக்கும் என்பதை நாம் புரிந்து கொண்டு நடக்க வேண்டும்.

எமது நட்பை, நண்பர்களை என்றும் நாம் பிரிந்துவிடாது காக்க வேண்டிய கடப்பாடு எம்மிடமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள Isuzu Doudle Cap, சொனி T.V.13" TVC T.V.24", LG இரண்டு கதவு குளிர்சாதனப் பெட்டி. மற்றும் மோட்டார் சைக்கிள்கள் T.V.S. Fiero, யமகா Gladiator ஆகியன விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0714544393

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

### சிறுவர் பராமரிப்பாளர் வெற்றிடங்கள் (பெண்கள்)

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமத்திற்கு சிறுவர்களை குடும்ப சூழ்நிலையில் பராமரிப்பதற்கு வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.
க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், திருமணமாகாத 30-40 வயதிற்கு இடைப்பட்டவர்கள் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்களாவர்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
திரு.சுவாமிநாதன் அருச்சுணன்
உதவிப்பணிப்பாளர்
எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமம்
பருத்தித்துறை வீதி
கோப்பாய், யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல:- 0212230076, 0772366106



## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 1959.05.27
மறைவு: 2002.08.01

**நட்சத்திரம் விமலா**
(வர்த்தகத் திணைக்கள உத்தியோகத்தர்)

ஒன்பது ஆண்டென்ன எத்தனை ஜென்மமானாலும்
எம் தாயைப் போலக் காண்போமா?
கண்ணுக்குள் வைத்துக் காத்த மனைவியே!
கண்ணீருடன் நிற்கின்றோம் உமைப் பிரிந்து
எம் இதயத்தினுள் தெய்வமே என்றும்
உங்களை மறக்க முடியாதம்மா
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

நீங்காத நினைவுடன் :
கணவர், பிள்ளைகள்,

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

'ஈசனடி போற்றி எந்தை அடி போற்றி'



பிறப்பு:
1925.06.21

இறப்பு:
2011.07.08

அமரர்
**கந்தையா ஐயம்பிள்ளை**
**(செல்லையா)**

கடந்த 08.07.2011 அன்று சிவபதமெய்திய எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (07.08.2011) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மண்கும்பான்-5, வேலணை.
குடும்பத்தினர்

## வீடு/கட்டடம் வாடகைக்குத் தேவை

யாழ் நகர்ப்பகுதியில் அல்லது அதனை அண்மித்த பகுதியில் (2 Km சுற்றாடலில்) வீடு/கட்டடம் 7 தொடக்கம் 10 வரையான வாகனத் தரிப்பிட வசதியுடன் வாடகைக்குத் தேவைப் படுகின்றது. உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 0773024293, 0773557945

## வீடு காணி விற்பனைக்கு

கைலாச பிள்ளையார் கோயில் சந்திக்கு அருகில் கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் 1 ¾ பரப்புக்காணியில் அமைந்துள்ள சகல வசதிகளும்கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: சி.சி.நாதன் 16/3 விதானையார் வீதி,கண்டுக்குளி, யாழ்ப்பாணம். 0776146434

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையில் ஒரு கைப் பாவனையில் உள்ள 11,800 Km ஓடிய நிலையில் LML Fredom விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 0776278333

## வீடு விற்பனைக்கு

இல.104, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள 2 ½ பரப்பு 2குழி காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0771370869, 0776221769, 021 320 6550

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் வீதி ஒட்டுமடத்தில் 'மனுக்களனி யார் ஒல்லையும் மறுபிரிவுகளும்' செபஸ் தியான் சேர்ச்சிற்கு அருகில் 1 பரப்பும் 8.85 குளியும் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டியது திருமதி ஜெயவீரசிங்கம்.
தொடர்பு : 0774431644

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பம் 1981 பூராடம், 2 இல் செவ்வாய், 28 பாவம், B.Sc, Newzealand Citizen மணமகளுக்கு தகுதியான மணமகன் தேவை. Student Visa விலுள்ளவர்களும் உள்நாட்டவர்களும் விண்ணப்பிக்கலாம். அம்பிகை திருமண சேவை, 69,2/1 விகாரை லேன், கொழும்பு 6.
தொடர்பு : 011 3040759, 0718285673, 0773671062

## கணக்காளர் தேவை

பரந்தன், கிளிநொச்சியில் அமைந்துள்ள LITRO GASS, OXCIYN, CEMENT விநியோகத்தர் அவர்களுக்கு கணக்காளர் தேவை. 09.08.2011 அன்று கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சுற்றாடலில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
144/3, Sri Rangan Enterprisc,
முல்லைத்தீவு வீதி, பரந்தன்.
தொடர்பு : 0777575740

## பாமசிஸ்ட் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள பாமசிக்கு பதிவு செய்யப்பட்ட பாமசிஸ்ட் தேவை.
தொடர்பு : 0777389799

## ஓம் சக்தி ஜோதிட நிலையம்

ஜோதிடர் - நரேந்திரன் சுவாமி
தொ.பே.: 0779759393
0756794959
இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமி அவர்கள் ஜாதகம், கைரேகை, கம்பியூட்டர், ஜோதிடம் என்பன நல்ல முறையில் கூறுவார். சந்திக்கும் நேரம்: காலை 7 மணி, இரவு 7மணி
தொடர்பு: அமுல் கிறீம் ஹவுஸ் அன் பேக்கரி, இல.452, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## மணமகன் தேவை

1981, விசாகம்,பாவம் 12, செவ்வாய் தோஷம் இல்லை. யாழ்.இந்து கௌரவ குடும்பம், கௌரவமான அரச உத்தியோகத்திலிருக்கும் பெண்ணுக்கு கௌரவமான அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன் தேவை.
தொடர்பு: 0775018208, 021 222 0634
E-mail: srimeena2@yahoo.com

## Auto A/C



சகல வகையான வாகனங்களுக்கும் ஏற்ற வகையில் உத்தரவாதத்துடன் மிகக் குறைந்த கட்டணத்தில் A/C பொருத்தித்தரப்படும்.

எமது சேவைகள்....
★Gas மீள நிரப்புதல்...
★A/C வகைகள் நவீன மயப்படுத்தல்
★பழுது பார்த்தல்



COOL AIRS KINGS
பருத்தித்துறை வீதி, நீர்வேலிச் சந்தி, நீர்வேலி. T.P: 0777738888

## The Home Builders

உங்கள் விருப்பத்திற் கேற்ப வாஸ்த்து முறைபடி தரமான மனைகளை அமைப்பதற்கு இப்போதே எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்

நீங்கள் தொடர்பு கொள்ளவிரும்பினால்:
பியங்கனி : 0779253305
மார்க் : 0789595380



**இலவச சலுகைகள்:**
➤ உங்கள் கனவு இல்லங்களின் மாதிரி வடிவங்களை இலவசமாக பெற்றுத்தருவோம்
➤ உங்கள் கனவு இல்லத்திற்கான அனைத்து துறைகளின் அனுமதிகளை பெற்றுத்தருவோம்

உங்கள் இடத்திற்கே வந்து அவசியமான விபரங்களைப் பெற்றுத்தருவோம்

## CCNA

புதிய வகுப்புக்கள் விரைவில்
100% Exam pass Guarantee
* Hands on Experience with Real Cisco Routers & Switches
* Past Exam Questions will be discussing along with every related modules
IDM Jaffna Branch # 216 Navalar Road, Jaffna, Sri Lanka
T: 021 222 9901 | info@idmjaffna.com | www.idmjaffna.com

## வடக்கு, கிழக்கு மகாணங்களில் விநியோகஸ்தர்கள் தேவை

விநியோகம் செய்வதில் புகழ்பெற்ற எமது நிறுவனத்துக்கு வடக்கு- கிழக்கு மாகாணங்களில் செயல்படுவதற்கான விநியோகஸ்தர்களை எதிர்பார்க்கின்றோம். விண்ணப்பிப்பவர்களுக்கு பின்வரும் தகைமைகள் இருத்தல் வேண்டும்.
★ சொந்தமாகப் பொருள்கள் ஏற்றி இறக்கும் வசதிகள்
★ சொந்தமாகக் களஞ்சிய வசதி
★ வங்கி உத்தரவாதம்
தெரிவாகும் விண்ணப்பதாரிக்கு கவர்ச்சியான கழிவுகள் வழங்கப்படும்.

கீழ்வரும் முகவரிக்கு 10 நாள்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

*The Director,Wear Well Distributors (Pvt) Ltd*
'No 435/4C, Hokandara Road, Arangala, Hokandara.
Tel: 0112742696, Mobile. 0777285475
E.mail: wear welldis@gmail.com
wearwelldis@sltnet.lk

## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)
பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr. P. ஆறுமுகம்**
T.P-0719315664, 0777569205
**யாழில் 05.08.2011-10.08.2011வரை**
பதிவுக் கட்டணம் ரூபா: 300/=

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், வெள்ளை படுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரண மான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றி பெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

**காமல் ரூரிஸ் இன் (சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்)**
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்குமிடையில், 392, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 - 12 - 1926



உதிர்வு 19 - 07 - 2010

### அமரர் கந்தப்பு சோமசுந்தரம்

(தொலைத்தொடர்புத் திணைக்கள ஓய்வு பெற்ற எழுதுவினைஞர்)

அன்புத் தெய்வமே! எங்கள் ஐயா!
அன்பைச் சுரந்து அமுதமாய் ஊட்டினீர்கள்
அவனியிலே கல்வியூட்டி ஆளாக்கினீர்கள்
பண்பு என்னும் பாலைப் பருக்கீனீர்கள்
பாசம் என்னும் நேசக்கயிற்றால்
பலரது உள்ளத்தைக் கட்டினீர்கள்
அமைதியாய் இருந்து அனைவருக்கும்
ஆன்மிகத்தைப் போதித்தீர்கள்
கலையாமல் இருந்த கூட்டைக்
கலைக்க, கல்மனம் படைத்த காலனவன்
சிதையாமல் திட்டம் தீட்டினானோ?
சிறகிழந்த பறவையாய் கதியற்றுத் துடிக்கின்றோம்
ஆண்டொன்று சென்றாலும் ஆறாது எம் துயரம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்:
மனைவி,மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

50/6, செட்டித்தெரு,
நல்லூர்.

(6591)

## மாற்று ஆற்றல் உடையவர்களுக்கு வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஒக.7

யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் தொழில் நிலையங்களில் வேலை வாய்ப்புகள் பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

ஆர்வமுள்ளவர் தத்தமது பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து தமது தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு சமூக சேவைகள் திணைக்களம் யாழ்.மாவட்ட அலுவலர் அறிவித்துள்ளார்.

(த-207)

# Mega Offer

| Printer | UPS | Router | Monitor | Dongle |
|---|---|---|---|---|
| Epson<br>Laser Printer - 11000/=<br>Ink Jet Printer - 4600/=<br>Photo Printer - 23500/=<br>CD Printer - 26500/= | DCP 650VA - 3800/=<br>1200VA - 9900/=<br>1KVa to 10KVa | D-Link<br>4 Port- 6300/=<br>4 Port Wireless 6800/=<br>Single Port - 3000/= | 19" Dell -10500/=<br>16" Topview - 9250/=<br>19" Asus - 11500/=<br>Kingston 4GB pen drive 900/= | MF180 - 3500/=<br>E 153 - 4000/=<br>Huawei - 5000/=<br>ZTE MF112 - 4750/=<br>Optus - 5250/=<br>D-Link - 5600/= |

## Thirumurugan Com Net

No.259, KKS Road, Jaffna

No.05, Thirunagar Road, Kilinochchi

T.P_ 021 222 7835

சகலவிதமான கணனி உதிரிப்பாகங்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

Head phone, Woofer
Mother Board, Web camera
Key Board, Mouse



நம்பமுடியாத விலையில் நம்பகரமான உத்தரவாதத்துடன்

EPSON EXCEED YOUR VISION

D-Link Building Networks for People

## St. Anthony's Hardware (Pvt) Ltd.,

Agents for world renowned brands of Hardware and Machinery items for the past 6 decades, invites applications from suitably qualified applicants for the following position.

### OPERATIONS MANAGER - JAFFNA

To implement and maintain a disciplined approach to core functions of Sales Administration /Debtors / Stock / Office Administration and Management in the Territory Office.

**Incumbent should be:**

- A background in Accounting would be preferred
- 5 years Managerial experience in similar capacity
- Between 35-45 years of age

**Our offer:**

- An attractive remuneration package and other benefits
- Company maintained vehicle
- Family insurance coverage

Application with names and addresses of 2 non-related referees indicating the post applied for on the top left hand corner of the envelope, should be posted or e-mailed within 7 days to:

The Manager HR & Administration,
St. Anthony's Hardware (Pvt) Ltd
524, Sri Sangaraja Mawatha, Colombo 10.
Fax: 011 - 2446554 E-mail: vacancy@stanthonys.lk

PRINCE Husqvarna IDRICA KENT Mineral RO Water Purifiers WATERTEC

# மரண அறிவித்தல்

## திருமதி தவமலர் தருமராசா (நயினாதீவு)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும், சுவிஸ்நாட்டினை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தவமலர் தருமராசா காலமானார். அன்னார் முத்தையா மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சாமியாபிள்ளை மற்றும் கமலாம்பிகை தம்பதிகளின் மருமகளும், தருமராசாவின் அன்பு மனைவியும், அனோஜா, வேணுகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரஞ்சிதமலர் (கொழும்பு), ஞானமலர் (முகாமையாளர், ஆசிரியர் நிலையம், மன்னார்), தவயோகநாதன் (டென்மார்க்), கிருபாமலர் (சுவிஸ்), ஜெயமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவராசா (பிரான்ஸ்), ஜெயலீலா (கொழும்பு), நேசராசா (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற நாகேஸ்வரன் மற்றும் கிறிஸ்ரிராஜா (அதிபர், மன்/எருக்கலம்பிட்டி மு.ம.ம.வி, மன்னார்), வசந்தவேணி (டென்மார்க்), கயிலாயநாதன் (சுவிஸ்), ரவிராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், புவனேஸ்வரி (பிரான்ஸ்), ஓங்காரநாதன் (கொழும்பு), கேதீஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.08.2011 புதன்கிழமை சுவிஸ்லாந்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: திருமதி முத்தையா மகேஸ்வரி
இல 26, 4/1, 42 ஆம் லேன், வெள்ளவத்தை
கொழும்பு – 06
T.P: 0112507442

# உதவி கண்ட்ராக்டர்கள் அவசரமாக தேவை

ஓமந்தை மாவட்டத்தில் எங்களுடைய பாதைகள் திருத்தும் வேலைகளுக்கு பின்வருமாறு குறிப்பிட்ட வேலை ஆட்கள் தேவை.

- "சட்டரிங்" தொழிலாளிகள்
- தொழிலாளிகள்

இருப்பிடம் இலவசமாக தரப்படும்.


கீழ்காணும் விலாசத்திற்கு உடனடியாக வந்து சந்திக்கவும்.

I.C.C

I.C.C- ஸ்தல காரியாலயம்,
201-மைல்துாண் (A-9-பாதை)
கண்டி றோட், புளியங்குளம்.

தொடர்பு கொள்ளும் இலக்கம்: 0777749789/ 0773633053

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எங்கள் வளங்களின் வளர்ச்சியைத் தடுக்கும் இலவசங்கள்

Dr.சிவசங்கர்

சமூகம் என்பது தனிமனிதர்கள் சேர்ந்து வாழும் ஓர் அமைப்பாகும். தனிமனிதர்களின் வளர்ச்சி ஒவ்வொருவரதும் வாழ்வை பயனுள்ளதாக வாழ்ந்து முடிப்பதற்குப் பொருத்தமான பின்புலத்தைக் கொண்டிருப்பது தேவையானதாகும்.

தேவையான அளவு, தரம் கொண்ட பின்புலத்தை உருவாக்குவதையே சமூக வளர்ச்சி எனலாம். இது புறவளர்ச்சி எனவும் குறிப்பிட்டு இனங்காணப்படலாம். இந்தப் புற வளர்ச்சியைப் பயன்படுத்தி தனது அக வளர்ச்சியை ஏற்படுத்துவதே வாழ்வின் இலக்காகும்.

### ஒருங்கிணைந்த வளர்ச்சி

இந்த வளர்ச்சியில் உடல், உள, ஆன்மிக ஆரோக்கியம், கல்வி, பண்பாடு கலாசார பின்பற்றல் அத்துடன் வாழ்வியல் வசதிகளை (அபிவிருத்தி) ஏற்படுத்தல் என்பன அடங்கும்.

இவை அனைத்திலும் ஒருங்கு சேர முன்னேறுவதே பயனுள்ள விளைவைத் தரும். இதில் ஒன்றைப் புறக்கணித்து வேறொன்றை வளர்த்தல் அநேகமான சந்தர்ப்பங்களில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

இதற்கு உதாரணமாக எமது சமூகத்தில் கலாசார பண்பாட்டில் உறுதியான வளர்ச்சி ஏற்படுத்தாமல் தொலைக்காட்சி, கணினி, கையடக்கத் தொலைபேசி போன்றவற்றின் பாவனை என்பன சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்தாமல் பாதகமான விளைவுகளையே தந்து நிற்கின்றன. இவற்றை நாம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

### வளர்ச்சி, வீக்கம்

வளர்ச்சி என்று குறிப்பிடுவது மேற்கூறிய பல்வேறு கூறுகளைப் படிப்படியாகத் தமது சுய முயற்சியினால் வளர்த்து கொள்வதேயாகும். அதுவே உண்மையான, பயனுள்ள வளர்ச்சியாகும்.

நாம் ஆயத்தமில்லாத நிலையில் பெற்றுக் கொள்ளும் புதிய அம்சங்களோ, எமது முயற்சியின்றிப் பிறருடைய அன்பளிப்பால் கிடைக்கின்ற விடயங்களோ எமது வாழ்வியலில் முன்னேற்றத்தை ஏற்படுத்தாது.

அத்துடன் கிடைத்த விடயங்களை உரிய பயனுள்ள வகையில் பயன்படுத்த முடியாதிருப்போம் எனில் இதை வளர்ச்சி என்று குறிப்பிடாது வீக்கம் என்று குறிப்பிடலாம்.

சமூக வீக்கம் என்பது பயனுள்ள தனிமனித அகவளர்ச்சியை ஏற்படுத்தத் தவறுவதுடன் பாதகமான எதிர் விளைவுகளையும் ஏற்படுத்தும். எனவே இத்தகைய வீக்கத்தை நோயியல் தன்மை கொண்டது என்று கண்டு கொள்ளலாம். இந்த ஆராய்ச்சியினூடாகப் பார்க்கும் போது வளர்ச்சி என்பது படிப்படியாக ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிக்கு ஊடாக அடையப்படுவதைக் கண்டு கொள்ளலாம்.

புதிய அம்சங்களை (கல்வித்துறை, வாழ்வின் வசதிகள், விஞ்ஞான முன்னேற்றங்கள்) சமூகத்தினுள் கொண்டு வரும் முன்னர் அந்த அம்சங்களை உள்வாங்கிக் கொள்ளும் தர நிலையில் அந்தச் சமூகம் உள்ளதா என்பது அறியப்பட வேண்டும். இதை மேலும் ஆழமாகப் பார்த்தால் ஒன்றைச் சமூகத்தினுள் கொண்டு வருவது என்பதே தவறானதாகும்.

சமூகம் தனது வளர்ச்சிப் போக்கில் வளர்ச்சி நிலைக்கு அமைய புதியவற்றை உள்வாங்கும்வரை வெளியிலுள்ளோர் என்போர் காத்திருக்க வேண்டும். திணிக்கக் கூடாது. சமூகத்தின் வளர்ச்சிக்குத் தேவையான களநிலைகளை வழங்கி, வளர்ச்சி நடைபெறுவதற்கான சமூக தனிமனித வலுவூட்டலை வழங்கி நிற்றலே உண்மையான பயனுள்ள நிலைத்து நிற்கக் கூடிய வளர்ச்சியை ஏற்படுத்தும்.

### சமூகத்துக்கு வழங்கப்படுபவை பாதிப்பை ஏற்படுத்தலாம்

ஒரு சமூகத்தின் வளர்ச்சியில் அக்கால கட்டத்தில் தேவைப்படுவதே அக்காலத்தில் அறிமுகமாக வேண்டும். குறிப்பிட்ட சமூகத்துக்கு எவை எவை தேவை என்பதும் எக்காலகட்டத்தில் தேவை என்பதும் அச்சமூகத்தின் கேள்வியால் வந்த முடிவாக இருக்க வேண்டும்.

வெளிச்சக்திகள் முடிவெடுத்தால் அது தவறான முடிவாக அமையும் சாத்தியம் அதிகம். இதன் காரணமாகவே சரியாக ஆராயாது அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் உதவிகள் உதவிகளாக அமையாது போகின்றன. இத்தகைய திட்டங்கள் பயனற்றுத் தோல்வியில் முடிவதுடன், சமூக வளர்ச்சிக்கும் தனிமனித வாழ்வுக்கும் பாதிப்பையும் ஏற்படுத்தி விடுகின்றன.

### தனிமனித சமூக வலுவூட்டலே முக்கியமானது

பல்வேறு நெருக்கடிகளையும், அழிவுகளையும் சந்தித்துள்ள எமது சமூகம் விரக்தி, சலிப்பு என்பவற்றால் பீடிக்கப்பட்டுள்ளது. இதனால் தனது வளர்ச்சிக்குத் தேவையான திட்டமிடலையும், உத்வேகத்தையும் இழந்து நிற்கின்றது. இவை மாற்றப்பட வேண்டும். தமது வளர்ச்சிக்குத் தாமே செயற்படும், பொறுப்பெடுக்கும் தன்மை சமூகத்துக்கும் தனிமனிதருக்கும் ஏற்படுத்தப்பட வேண்டும். தமது முயற்சியினால் பெற்றுக் கொள்ளும் முன்னேற்றமே உண்மையான வளர்ச்சி தரக்கூடியது.

### உளசமூக பிரச்சினைகள் தீர்க்கப்படல் தேவையானது

தனிமனித சமூக வலுவூட்டலை செயற்படுத்துவதற்கு அச்சமூகத்தின் தனிமனிதர்களின் உளசமூகப் பிரச்சினைகள் அடையாளங்காணப்பட்டுத் தீர்க்கப்பட வேண்டும்.

இன்று யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களிடையே குடும்ப அமைதியின்மை வலுவாகக் காணப்படுகின்றது. கணவன், மனைவியிடையே வாக்குவாதம், சச்சரவுகள் என்பதுடன் தமக்கிடையே வெட்டுக்கொத்து சம்பவங்களும் தினசரி சமூக நிகழ்வாகக் காணப்படுகின்றன. குடும்பத்துக்கு வெளியிலான வன்முறை சம்பவங்களும் காணப்படுகின்றன.

இந்தப் பிரச்சினைகள் அடையாளப்படுத்தப்பட்டுத் தீர்க்கப்படுவது முதன்மையானதாகும். உளசமூகப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டாலே தனிமனித சமூக வலுவூட்டல்கள் ஏற்படுத்தப்படலாம். ஒரு சமூகத்தின் உள சமூக பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியதன் அவசியம் நன்கறியப்பட்டது. எனவே இத்தகைய

> எமது பிரதேசங்களில் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு பல்வேறு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களால் தேவைகளைக் கருத்திற் கொள்ளாது இலவச உதவிகள் வழங்கப்படுகின்றன. இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி எம்மிடமுள்ள வளங்களை உரிய வகையில் அபிவிருத்தி செய்யவோ பயன்படுத்தவோ மக்கள் தவறி விடுகின்றனர்.

செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவது சமூக அபிவிருத்திக்கு அவசியமானதாகும்.

### வெறும் உதவிகள் பயனுள்ள விளைவை தராது

உளசமூகப் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டுத் தனிமனித சமூக வலுவூட்டல் நடைமுறைப்படுத்தப்பட்டாலே பிறரின் உதவிகள் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டு வளர்ச்சிக்கு நம்மை இட்டுச் செல்லும். மாறாக வெறும் உதவிகளை மாத்திரம் பெற்றால் அது சமூக வளர்ச்சியைப் பாதிக்கும், சமூகத்தை கெடுக்கும் என்றும் சொல்லலாம்.

உதாரணமாக ஐக்கிய அமெரிக்க இராச்சிய பிரதேசத்தின் பூர்வீக மக்களுக்கு தற்போதைய ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் அரசு மாதாந்த உதவிகள் வழங்குகின்றது. வாழ்வுக்கான தமது முயற்சிகளை இவ் உதவிகள் தேவையற்ற தாக்குகின்றன.

இதனால் அமெரிக்கப் பூர்வீக மக்கள் சமூகம் வ்ளர்ச்சியற்று இருக்கின்றது. அத்துடன் அந்தச் சமூகத்தினுள் மது, போதைப் பொருள் பாவனை என்பன அதிகரித்துச் சீர்கேடடைந்த சமூகமாகவே காணப்படுகின்றது. வெறும் உதவிகள் சமூகத்தை கெடுக்கும் என்பதற்கு இச் சமூகம் ஒரு சர்வதேச உதாரணமாக இருக்கின்றது.

ஒவ்வொரு சமூகமும் தத்தமது பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை முதலில் தீர்க்க வேண்டும். பின்னர் தமது சமூக வளர்ச்சிக்கான தேவைகள் கண்டறியப்பட்டு உணரப்பட வேண்டும். தம்மால் கண்டறியப்பட்டு உணரப்பட்ட தேவைகளைப் பிறரிடம் இருந்து பெற்றுக் கொள்ளும் போதே வளர்ச்சி உறுதிப்படுத்தப்படும்.

### புதியவை எமக்கு உதவியாக இருக்கும் என்பதில்லை

தனிமனித, குடும்ப, சமூக வளர்ச்சி என்பதை நாம் முழுமையாக உணர வேண்டும். சமூகத்தின் ஆரோக்கியம், கல்வி, பொருளாதார முன்னேற்ற செயற்பாடுகளே சமூக முன்னேற்றம் எனப்படலாம்.

வீதிகள் பெருப்பிக்கப்படல், அரச தனியார் கட்டடங்கள் கட்டப்படல், வங்கிகள், பெரிய கடைகள் திறக்கப்படல் அச்சமூகத்தின் முன்னேற்றத்துக்கு எந்த வகையிலும் உதவுபவை அல்ல. இவற்றால் சமூக பிரச்சினைகள் தீர்க்கப்படவோ, சமூக முன்னேற்றம் ஏற்படவோ வாய்ப்பில்லை. மாறாக எமது பொருளாதாரத்தை, வளங்களை இழப்பதற்கே இவை வழிவகுக்கலாம்.

### எது சமூக அபிவிருத்தி

சமூகங்களுக்கான தொழில் முயற்சிகள் அடையாளம் காணப்படுவதும் அவை அங்கீகரிக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்படுவதுமே சமூகங்களின் பொருளாதார முன்னேற்றத்தை உடனடியாக ஏற்படுத்துவதுடன் நின்று நிலைக்கும் வளர்ச்சிக்கும் உத்தரவாதமளிக்கும். குடிசைத் தொழில்களிலிருந்து, சிறு கைத் தொழில்கள் வரை சமூகத்தின் பின்புலங்களுக்கேற்ப அடையாளங் காணப்பட்டு அறிமுகப்படுத்தப்படவேண்டும்.

### பொருளாதார சுரண்டல் தடுக்கப்படல்

தொழில் முயற்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டாலும், அந்த முயற்சிகளின் பொருளாதாரப் பலன்கள் பெரிய முதலாளிகளால் சுரண்டப்படலாம். ஒரு சமூகத்தினுள் தொழில் முயற்சிகள் இருந்தாலும் பொருளாதார சுரண்டல் இருக்கும் பொழுது குடும்ப, சமூக முன்னேற்றம் ஏற்படாது. இவற்றுக்கான நடவடிக்கைகளிலும் விழிப்புடனிருக்க வேண்டும்.

### பிறரின் தேவைகள் எம்மிடம் புகுத்தப்படலாம்

தொழில் முயற்சிகள் எனும் பொழுது அவை அவ்வப் பிராந்தியங்களின் தேவைகள் இனங்கானப்பட்டு, பூர்த்தியாக்கலை உறுதிப்படுத்துபவைகளாக இருக்க வேண்டும். இதனாலேயே பொருளாதார முன்னேற்றத்துடன், சமூக தேவைகளில் தன்னிறைவும் ஏற்படும்.

தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான செலவையும் குறைக்கும். சுய சார்பை ஏற்படுத்திச் சமூக உறுதிப்பாட்டை அதிகரிக்கும்.

### தனிமனித குடும்ப சமூக முன்னேற்றத்தின் சாரம்

சமூகங்களின் சமய கலாசார பண்பாட்டு முன்னேற்றம் ஆரோக்கியம், கல்வி சார்ந்த முன்னேற்றம் ஆகியன மேற்கூறியவற்றை அத்திபாரமாகக் கொண்ட தொழில் முயற்சிசார் பொருளாதார முன்னேற்றம் என்பவற்றை எய்துவதற்குச் சமூகங்களின் உளசமூகப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, தனிமனித சமூக வலுவூட்டல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இதுவரை கூறியவற்றிலிருந்து பகட்டுத்தனமான ''அபிவிருத்தி'' நடவடிக்கைகளும் திட்டமிடப்படாத வெறும் உதவிகளும் தனிமனித சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்தாது, சமூக வளர்ச்சியைத் தடைசெய்து சமூகச்சீர்கெடலுக்கு வழிசமைக்கும்.

எனவே ஒவ்வொரு சமூகமும் தமது உண்மையான முன்னேற்றத்தை அடைந்து கொள்ள, தாமே பொறுப்பெடுத்துத் திட்டம் தீட்டிச் செயற்படுத்த வேண்டும். இதுவே நின்று நிலைக்கக் கூடிய உண்மையான முன்னேற்றத்தை ஏற்படுத்தும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிக்கடுவ மைதானத்தில் கிரிக்கெட்; லண்டன் அணியை பற்றிக்ஸ் வென்றது

வலி.வடக்கு,ஒக.7

ஹிக்கடுவை சீனிகம நல்லுறவு நிறுவனத்தினால் நடத்தப்பட்ட 40 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டம் ஒன்றில் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி 5 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றது.

கொழும்பு ஸ்ரீசுமங்கல மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் லண்டன் வாவிக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 40 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது.

ரியூடர் ஆறு நான்குகளுடன் 61, ஜெகான் 30, மொரிஸ், லிவிங்டன் தலா 25, கிளின்ரன் 19, எரிக் பிரதாப் 17 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 29 ஓட்டங்களும் பெறப்பட்டன.

வாவிக் கல்லூரியைச் சேர்ந்த நிக்கௌசன்ஸ் 7 ஓவர்களில் 45 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கோடன் டூநட், ஸ்ரோசக்கிரீப், ஒஸ்வெல்லனஸ் முறையே 23, 46, 55 ஓட்டங்களுக்கு தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

223 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய லண்டன் வாவிக்கல்லூரி 40 ஓவர்களில் 8விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது.

பென் ஹவாட் 36, எட்பெட்பெல் 27, ஹரிபிலிப் 22 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 16 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த நோபேட் 7 ஓவர்களில் 20 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் அஜித் நிரோசன், லிவிங்டன் முறையே 23, 29, 29 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

(ம-86)

# மாகாண மட்ட பெரு விளையாட்டுக்கள்

வலி.வடக்கு, ஒக.7

அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கான பெரு விளையாட்டுப் போட்டிகள் செப்ரெம்பர் 9ஆம், 10 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

போட்டிகள் ஹாலியல மத்திய மகா வித்தியாலய மைதானம், ஹாலியல பிரதேசசபை விளையாட்டரங்கு என்பவற்றில் நடைபெற்றவுள்ளன.

வட மாகாணம் சார்பில் கலந்து கொள்ளவுள்ள பாடசாலைகளின் விவரம் வருமாறு:

**ஆண்கள் பிரிவு:** இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி, ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

**பெண்கள் பிரிவு:** வவுனியா இறம்பைக்குளம் பெண்கள் மகா வித்தியாலயம், மானிப்பாய் மகளிர் கல்லூரி, இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்.

ஆண்கள், பெண்கள் பிரிவில் கலந்துகொள்ளும் முதல் இரண்டு பாடசாலைகளும் கடந்த ஆண்டுகளில் தேசிய மட்டத்தில் முதலாம் இடம் உட்பட பதக்கங்களைப் பெற்ற பாடசாலை அணிகள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (ம-86)

# தட்டெறிதலில் புதிய சாதனை

மன்னார் முருங்கன் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற வடமாகாண மாவட்டங்களுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டியில் ஆண்கள், பெண்கள் பிரிவினருக்கான தட்டு எறிதல் போட்டியில் புதிய சாதனைகள் நிலை நாட்டப்பட்டுள்ளன.

பெண்களுக்கான தட்டு எறிதல் நிகழ்வில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த த.அனுஷா 2009 ஆம் ஆண்டு வடமாகாணப் போட்டியில் 40.77 மீற்றர் தூரத்துக்கு எறிந்து நிலை நாட்டிய சாதனையை அவரே 2011 ஆம் வடமாகாணப் போட்டியில் 42:56 மீற்றர் தூரத்துக்கு எறிந்து புதிய சாதனை புரிந்துள்ளார்.

ஆண்களுக்கான தட்டு எறிதலில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஹரிகரன் 2010 ஆண்டு வட மாகாண போட்டியில் 36:37 மீற்றர் தூரத்துக்கு எறிந்து நிலை நாட்டிய சாதனையை அவரே 2011 ஆம் ஆண்டு வடமாகாணப் போட்டியில் 37:62 மீற்றர் தூரத்துக்கு எறிந்து புதிய சாதனை புரிந்துள்ளார். (ம-23)

# சிவகோசரியார் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண உதைபந்து

தென்மராட்சி, ஒக. 7

தென்மராட்சி கல்வி வலய முன்னாள் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் அமரர் க.சிவகோசரியார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் விரைவில் நடத்தப்படவுள்ளன.

14 வயது ஆண், பெண் பிரிவுகளுக்கும், 16, 17 வயது ஆண்களுக்கான சுற்றுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகள் அணிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-207)



*26 ஆவது உலகப் பல்கலைக்கழக விளையாட்டு விழாவில் பங்கேற்பதற்காகச் சீனா செல்லும் யாழ். பல்கலைக்கழக மாணவன் தர்மரட்ணம் திரோன் கொடுதோரின் பயண அனுசரணைக்கான காசோலையை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவரிடம் வழங்குகின்றார்.* (த)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக.7

யாழ்.உதைப்பந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் அரை இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத் தில் இடம்பெறவுள்ளன.

பங்குபற்றும் அணிகளின் விபரம்:

* மாலை 5 மணி பாசையூர் சென்.அன்ரனிஸ் 'ஏ' பிரிவு எதிர் குருநகர் பாடும்மீன் வி.க
* பிற்பகல் 3.45 ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் எதிர் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம். (ம-23)

# ஆரம்பப் பிரிவு மாணவர்களின் போட்டிகள்

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான சதுரங்கப் போட்டிகளும், 07, 09 வயது மாணவர்களுக்கான மெய்வன்மைப் போட்டிகளும் செப்ரெம்பர் இரண்டாம் வாரத்தில் நடை பெறவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்ற வுள்ள மாணவர்களைத் தயார் படுத்துமாறு பணிப்பாளர், உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் த.சிவகுமார் ஆகியோர் அறிவித்துள்ளார். (ம-207)

# சிவகரனின் அதிரடியான சதத்தில் கொக்குவில் இந்து சம்பியன்

வலி.வடக்கு, ஒக. 7

கொக்குவில் இந்துக்கல்லூரி வீரன் சிவகரனின் அதிரடியான சதத்துடன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியை கொக்குவில் இந்துக்கல்லூரி 144 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் வடமாகாணப் பாடசாலைகளின் 17 வயதுப் பிவினர்களுக்குஇடையே நடத்திவரும் 50ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில், மோதிக் கொண்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 39.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றது.

சிவகரன் 68 பந்துகளில் 12 நான்குகள் 09 ஆறுகளுடன் 120, நிசாந்தன் 20, தாருகன் 17, சத்தியன் 12 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 42 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியைச் சேர்ந்த றொபின்ரிகன் 9.2 ஓவர்கள் பந்து வீசி 45 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுக்களையும் றொஷான், துவாரகன், நிஷாந்தன், கனுஜன், மயூரன் முறையே 18, 21, 27, 32, 33 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

246 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி 23.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றது.

சிந்துஜன் 30, நிதர்சன் 20, நிலக்ஷன் 15 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 16 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பார்த்தீபன் 06 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் சிலோஜன் 05 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் லிங்கநாதன் 06 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் தாருஜன் 16 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (ம-86)

# வலைபந்தாட்ட அரையிறுதிப் போட்டியில் யூனியன், யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி

வலி.வடக்கு, ஒக்.07

நெஸ்லே நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 18 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்ட அரையிறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் வெற்றி பெற்றுள்ளன.

உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் அரையிறுதி ஆட்டங்கள் இடம்பெற்றன.

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரிக்கும் தெல்லிப்பழை, யூனியன் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 26:12 புள்ளிகள் என்ற அடிப்படையில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியை வெற்றி கொண்டது.

மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் உடுவில் மகளிர் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் கடுமையாக மோதிக்கொண்ட போதிலும் ஆட்ட நிறைவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 26:22 புள்ளிகள் என்ற அடிப்படையில் உடுவில் மகளிர் கல்லூரியை வெற்றி கொண்டது. (ம-86)

# உதைபந்தாட்ட லீக்கின் விலகல் முறையிலான சுற்று

யாழ்ப்பாணம், ஒக.7

யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே 11 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

கடந்த செவ்வாய், புதன் கிழமைகளில் போட்டிகள் இடம் பெற்றன. செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் 'ஏ' பிரிவு ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகமும், புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகமும், ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்றன.

செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் முதலில் பாஷையூர் சென். அன்ரனிஸ் 'ஏ' பிரிவு அணியை எதிர்த்து உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் இரண்டு அணியும் தலா ஒரு கோலை பெற்றதால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம்வெற்றிதோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.

இதில் பாஷையூர் சென். அன்ரனிஸ் 'ஏ' பிரிவு அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மற்றைய ஆட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் 'பி' பிரிவு அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

புதன் கிழமை இடம்பெற்ற ஆட்டத் தில், முதல் ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதியது. இதில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றைய ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் ஆட்டம் தொடங்கி முடியும் வரை இரு அணியினரும் எதுவித கோல்களையும் அடிக்காமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.

இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

(ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள மரத்திலான குழந்தைகளுக்கான தொட்டில்கள், பிளாஸ்ரிக் கதிரைகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0212226236 / 0777246723

## மணமகள் தேவை

யாழ். உயர் குலம், 1968 ஆம் ஆண்டு பிறந்த, அமெரிக்க P.R உடைய மணமகனுக்கு 1973 ஆம் ஆண்டுக்குப் பின் பிறந்த தகுந்த மணமகள் தேவை. நட்சத்திரம் மிருகசீரிடம் 2ஆம் பாதம்.

தொடர்பு:0776153725

## வீடு வாடகைக்கு

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் 5அறைகள், சமையல்அறை, வாகனத் தரிப்பிட வசதியுடன் மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு. N G O, கம்பனிகள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0754750365

## மணமகன் தேவை

சாதாரண ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த 19 வயது பெண்ணுக்கு சாதாரண தொழில் செய்யும் நல்ல குணம் உள்ள மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு : 0778584500

# கண் சிகிச்சைக்கு பதிவுகள்

தென்மராட்சி, ஓக.7

தென்மராட்சி பிரதேச மக்களுக்கு சுகாதார அமைச்சின் விஷன் 2020 நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விழிவெண் படலத்தில் பூப்படர்வு (கற்றாக்) ஏற்பட்டவர்களுக்கான இலவச சத்திர சிகிச்சைக்கான பதிவுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8. மணி தொடக்கம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஏற்கனவே கண் பரிசோதனை முகாம்களில் கலந்து கொண்டு கற்றாக் ஏற்பட்டுள்ளதாக அறியப்பட்டவர்கள் அல்லது கற்றாக் உள்ளதை உறுதிப்படுத்தி கண் சிகிச்சை நிபுணரினால் பரிந்துரை செய்யப்பட்டவர்கள் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் பெயர்களைப் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் கண் சிகிச்சை நிபுணர்களால் பரிசோதிக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு வெளிநாட்டு கண் சிகிச்சை நிபுணர்களால் சத்திர சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-207)

## உயிரூட்டுகின்றோம்



பழுதான தொழில்சார் மின்சார உபகரணங்களைத் திருத்திக்கொள்ளவும், புதிய உபகரணங்களையும் உதிரிப்பாகங்களையும் கொள்வனவு செய்யவும், எங்களது ஸ்தாபனத்தை நாடுங்கள்.

உத்தரவாதங்கள் எங்களது நிலையத்திலேயே, உடனே செய்து கொடுக்கப்படும். (கொம்பனிக்கு அனுப்பி செய்வதில்லை)

செயின்சோ, ஜெனறேட்டர், மரவேலை இயந்திரம், மின் உபகரணங்கள், வோசிங் மெசின், மின்சார கேத்தல்கள், றயிஸ் குக்கர் போன்றவற்றின் உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**GREEN HOUSE TRADING COMPANY (PVT) LTD.**

இல. 05, கருவப்புலம் ஒழுங்கை, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு. (திருநெல்வேலி). 021 2226459. (நல்லூர் பிரதேச செயலகத்திற்கு அருகில்)

## வாடகைக்கும், விற்பனைக்கும்

நல்லூரடியில் சகல தளபாடங்களுடன் கடை வாடகைக்கு உண்டு, L.G 29" T.V, சணல் பால் ஆடு, குட்டி, பன்டம் கோழிகள், வான்கோழிகள், சிறுவர்களுக்கான ஜப்பான் கியர் மொடல் துவிச்சக்கர வண்டிகள் விற்பனைக் குண்டு.

தொடர்பு:0779181018

## வீட்டுடன் காணி விற்பனை

M.P.C.S. லேன், கோப்பாய் வடக்கு, கோப்பாயில் கல் வீட்டுடன் கிணறு, மலசலகூடம் கொண்ட ஒரு பரப்பு மூன்று குளி கொண்ட காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0774824214, 0779012551

## P&S Travel Agency

**Another Name of Happy Journey**

திருநெல்வேலி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

யாழ்- கொழும்பு பிரயாணப் பதிவுகள் திருநெல்வேலியில் மேற்கொள்ளப்படுகின்றன. மற்றும் நாடு தழுவிய சுற்றுலா சேவையும் மேற்கொள்ளப்படுகின்றன. தொடர்புக்கு:

N.Rajee 0771308650 M.Sathees 0778447778

No 112, தபால் பெட்டி சந்தி, திருநெல்வேலி



ஓம் சக்தி

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான

விநாயகர், சுப்பிரமணிய சுவாமிகளுக்கான

## சித்திரத்தேர் வெள்ளோட்டமும் தேர்மலர் வெளியீடும்

காலம்: 08.08.2011 திங்கள் முற்பகல் 10.30 மணி

தலைவர்: திரு.சு.சிவநாதன்

(அதிபர், யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை)

நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| தேவாரம் | : |
| வரவேற்புரை | : |
| ஆசியுரை | : பிரம்மஸ்ரீ சி.சுரேஸ்வரக்குருக்கள் [ஆலய மஹோற்சவக் குரு] |
| தலைமையுரை | : |
| வாழ்த்துரை | : திரு.அ.பிரேம்சங்கர் அவர்கள் [கௌரவ மாவட்ட நீதிபதி யாழ்ப்பாணம்] |
| | : திரு.இ.வரதீஸ்வரன் [பிரதேச செயலர், பருத்தித்துறை] |
| வெளியீட்டுரை | : திரு.சி.சத்தியசீலன் [பிரதேச செயலர், கரவெட்டி] |
| மதிப்பீட்டுரை | : செல்வி.கல்யாணி நமசிவாயம் [ஆசிரியை யா/ஹாட்லிக்கல்லூரி] |
| முதற்பிரதி பெறுநர் | : திரு.பொ.இராசதுரை [தொழிலதிபர், மஹாலட்சுமி வாணிபம்-பருத்தித்துறை] |
| கௌரவ பிரதி வழங்கல் | : |
| சிறப்புப் பிரதி வழங்கல் | : |
| நன்றியுரை | : |

மஹோற்சவ தினமான 12.08.2011 வெள்ளி காலை 8.30 மணியளவில் அம்மன், விநாயகர், சுப்பிரமணியர் சித்திரத்தேரில் வீதியுலா வருவர்.

அனைவரும் அன்னை அருள்பெற வாரீர்!

பரிபாலன சபையினர்

## காணி விற்பனைக்கு

கச்சாய் றோட், 2ஆம் வீதியில், 6 ½ பரப்பு வருமானமுள்ள காணியும், நவீன முறையில் புதிதாகக் கட்டப்பட்ட வீடும் (கராஜ் உட்பட) விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0212270497

## வாடகைக்கு /குத்தகைக்கு

தொண்டமானாறு - பருத்தித்துறை பிரதான வீதியில் (Main Road) பிள்ளையார் கோயிலுக்கும் சற்றுத் தூரத்தில் சகல வசதிகளையும் கொண்ட நான்கு (4) அறைகளுள்ள வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு கொடுக்கப்படும். அரச / அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு ஏற்ற இடம். வாகன தரிப்பிடமும் உண்டு.

தொடர்பு : 077082559, 021 3006064

## வீடு விற்பனைக்கு

தெஹிவளையில் Galle Roadக்கு மிக அருகாமையில் அமைதியானதும் பாதுகாப்பானதுமான சூழலில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள Aparament இல் 3 B/R, 2 B/R மற்றும் 1B/R வீடுகள் சாதாரண விலையில் எளிமையான கொடுப்பனவு முறையுடன் விற்பனைக்கு உண்டு. முன் பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலதிக விவரங்களுக்கு

தொடர்பு கொள்க . 0777368764

## சமூக மற்றும் பொருளாதார ஆய்வாளர்

## SOCIAL & ECONOMIC RESEARCHER

(தமிழ் நிபுணர்)

nielsen

நீல்சன் (Nielsen) என்ற எமது கம்பனியானது உலகிலேயே முன்னணியான ஆய்வு நிறுவனமாகும். இலங்கை உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் இயங்கும் எம் நிறுவனத்தில் 38,000 பேர் உலகெங்கிலும் பணி புரிகிறார்கள். நாம் பல்வேறுபட்ட சமூக பொருளாதார மற்றும் சந்தை ஆய்வுகளை நடாத்தி வருகிறோம். சமூக பொருளாதார ஆய்வுகள் இலங்கை இந்தியா, பங்களாதேஷ் உள்ளடங்கலான தென் ஆசிய பிராந்தியத்திலும், ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் 17 நாடுகளிலும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

இலங்கையிலுள்ள எமது நீல்சன் கம்பனியானது சமூக பொருளாதார விடயங்கள் தொடர்பாக பல்வேறு குழுக்களின் பழக்கவழக்கங்கள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான ஆழ்ந்த விளக்கத்தை பெறுவதற்காக, எமது வாடிக்கையாளர்களான பல்வேறுபட்ட நிறுவனங்களுடன் சேர்ந்து ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

எமது கம்பனி நாடு முழுவதிலும் மூன்று மொழிகளிலும் ஆய்வுகளை நடாத்தி வருகிறது. வடக்கு, கிழக்கு, பெருந்தோட்டத்துறை மற்றும் நாட்டின் வேறு பகுதிகளில் வசிக்கும் தமிழ் பேசும் சமுதாயத்தின் தகவல்களையும் பெற்று வருகிறோம் ,

எமது விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக, தமிழ்மொழியில் தகைமையுள்ள, பொறுப்பெடுத்து வேலை செய்யக்கூடிய, ஆர்வமுள்ள, சுறுசுறுப்பான ஒருவரை எங்கள் குழுவில் ஆய்வாளராக இணைப்பதற்கு முயற்சிக்கிறோம்.

### தொழில் விபரம்

- ஆய்வுப்பணியில் விருப்புள்ளவராகவும் தொழில் நாட்டமுள்ளவராகவும் இருக்க வேண்டும்.
- மிக விரைவாக கற்றுக்கொள்ளும் திறமையுள்ளவராக இருக்க வேண்டும்.
- ஆரம்பத்திலிருந்து இறுதி வரை முழு ஆய்வு நடவடிக்கைகளிலும் குழு அங்கத்தவராக இருக்க வேண்டும்.
- மொழிபெயர்ப்பு, தரவு சேகரிக்கும் குழுவுக்கு பயிற்சி அளித்தல், அது தொடர்பான ஏனைய பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் தமிழ்மொழியில் தரவு சேகரிக்கும் பல்வேறுபட்ட கட்டங்களில் எமக்கு உதவி வழங்குதல் வேண்டும்.

### தகைமைகள்

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டதாரி: சமூகவியல், முகாமைத்துவம், பொருளாதாரம், புவியியல், மொழி, தத்துவஞானம், விஞ்ஞானம், போன்றவை மிக விரும்பும் துறைகளாகும்
- தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் (பேச்சு மற்றும் எழுத்தில்) சிறந்த தொடர்பாடல் திறமை
- பகுத்தாய்வு திறமை மற்றும் அடிப்படை ஆராய்ச்சி அறிவு
- ஆராய்ச்சி அல்லது இது தொடர்பான ஏனைய துறைகளில் (உ-ம்: பத்திரிகைத் துறை) வேலை செய்த அனுபவம் மேலதிக நன்மையாகும்.
- பதவி வெற்றிடத்துடன் தொடர்பான ஏதாவது கல்விக்கு புறம்பான நடவடிக்கைகள்

மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு தெரிவுத்திட்டம் பற்றி உங்கள் அறிவு, திறமை மற்றும் விரும்பும் பதவிக்கு பொருத்தமான அனுபவம் பற்றி பந்தி ஒன்றை எழுத்தில் கொடுக்க வேண்டும். உங்கள் தகைமைகளின் அடிப்படையில் (கனிஷ்ட / சிரேஷ்ட / முகாமையாளர்) பதவி தீர்மானிக்கப்படலாம். நீங்கள் விரும்பும் தொழில் எதிர்பார்ப்புகளுக்கு இக்குறிப்புக்கள் பொருந்துமாயின் தயவு செய்து உங்கள் சுயவிபரக்கோவையை (CV) தொழில் தொடர்புள்ள இரு சாட்சிகளின் விபரங்களுடன் பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

**Human Resources Department**

**The Nielsen Company Lanka (Pvt) Ltd**

**No. 98 D.S.Senanayake Mawatha**

**Colombo 8.**

**Fax: 2688449**

MBT Creations

## காணி விற்பனைக்கு



A-9 வீதியிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் (நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலை முன் ஒழுங்கை) பயன்தரு 20இற்கும் மேற்பட்ட தென்னை மரங்களும் 15 தேசி மாமும் மற்றும் மா, பலா, பப்பாசியுடன் கூடிய (நன்னீர்க் கிணறும்) 8 பரப்புக் காணியும் நவீன முறையில் கட்டப்பட்ட வீடும் (கராஜ் உட்பட) விற்பனைக்குண்டு. (வீட்டின் படத்தை இணையத்தின் மூலம் பார்க்கலாம்).

தொடர்புகளுக்கு: 0779083965 0776231025 0217901597

## ஹீரோ, கென்டன் காட்சியறை

HERO CYCLES · KENTON









சிறியோர் முதல் பெரியோர் வரையானஅனைவரினதும் சொகுசான சைக்கிள் சவாரிக்கு Hero, மவுண்டன், BMX சைக்கிள் மற்றும் புதிய லேடீஸ் பைக் என்பனவற்றை எமது காட்சியறையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்

பலவர்ணங்களில் புதிய லேடீஸ் சைக்கிள்

ஒரிஜினல் ஹீரோ லேடீஸ் சைக்கிள்களும் ஆண்கள் சைக்கிள்களும் பெற்றுக்கொள்ளலாம்.

ஹீரோ, கென்டன் விநியோகத்தர்கள்

ஸ்ரார் ரேடர்ஸ்

இல.258, 260, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

தொ.பே.: 021 4921672

(49)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VACANCY

சிங்களம், *IELTS, Mobile Phone Repairing, Video Editing* கற்பிக்கக்கூடியவர்கள் தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**NORTH LEAD EDUCATIONAL CENTER**
*328, Stanly Road, Jaffna.*
*Tel: 222 4459, 0772 533390 Fax: 222 4460*
*E-mail: northlead@gmail.com*


## சித்திரத் தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 7

பருத்தித்துறை, புலோலி வடக்கு குருமணல் கந்தசாமி கோயில் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா நாளை திங்கட்கிழமை காலை 6.41 தொடங்கி 8.41 மணி வரையான சுப வேளையில் நடைபெறும்.

## கலந்துரையாடல்

தீவக கல்வி வலயப் பாடசாலைகளுக்குப் புதிதாக நியமனம் பெற்ற நுண்கலைப்பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ)


## Knowledge Universe
Centre for International English

IELTS
VIP Coaching Centre

KU Centre Opens Monday-Friday 9 AM - 5 PM

Register for IELTS exam in Jaffna now at KU.

IELTS REGISTRATION CENTRE in cooperation with BRITISH COUNCIL

**KU offers IELTS Preparation Classes with modern and our own developed high impact teaching methodology

ESOL

No 75,Temple Road,Jaffna. Hot line:0777302882
For more info : www.kugroup.info

## கடை வாடகைக்கு

யாழ். கன்னாதிட்டி றோட்டில் 2 மாடி வீட்டுடன் கூடிய கடை வாடகைக்குஉண்டு.

தொடர்பு-
ஆனந்தன்
0774563085
அருள்- 0774303297,
0112504233




கரண்டி, முள்ளுக் கரண்டி குறைந்த விலையில்

டயிடஸ் ஸ்டோஸ்
புறக்கோட்டை , லிபட்டி பிளாசா
2439422

## தவறிவிட்டது

சுந்தரலிங்கம் குகதாசன் என்பவருடைய 49CC RANO MOTA மோட்டார் சைக்கிளை காணவில்லை. அது பற்றி தகவல் அறிந்தால் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகவல் இரகசியமாகப் பேணப்படும் என்பதோடு தகுந்த சன்மானம் வழங்கப்படும். பாரத் பேப்பர் ரேடிங் கம்பனி, 388, ஆஸ்பத்திரி வீதி, யாழ். தொடர்புகளுக்கு: சு. குகதாசன்- 0779407570,0212222409

ROTARACT CLUB OF JAFFNA

நடத்தும்

**மாபெரும்** தரம் 5 புலமைப் பரிசில் **கருத்தரங்கு**

கொழும்பு மற்றும் யாழ். பிரபல ஆசிரியர்களால் காட்சித் திரை மூலம் கருத்தரங்கு நடத்தப்படும்.

| இடங்கள் | |
|---|---|
| மானிப்பாய் பிரதேசசபை, சித்தங்கேணி ஸ்ரீ கணேசா 09/08/2011 காலை 9.00 மணி- 2.00மணி | இணுவில் மத்திய கல்லூரி, மல்லாகம் விசாலாட்சி 10/08/2011 காலை 9.00 மணி-2.00 மணி |

**குறிப்பு**

அனுமதி 100ரூபா நீங்கள் செலுத்தும் தொகையானது மாணவர்களின் சிற்றுண்டிக்கும் கையேட்டிற்கும் மற்றும் குறிப்பிட்ட ஒருதொகையானது யாழ்ப்பாணத்தில் கட்டப்படும் சிறுவர் புற்றுநோய் வைத்தியசாலைக்கு வழங்கப்படும்.

மாணவர்கள் பெற்றாருடன் பங்குபற்றுவது விரும்பத்தக்கது

A1/B1/B2 IELTS Spoken English
100% வெற்றி

நிரந்தர வதிவிட விசா மூலம் யு.கே செல்வோருக்கு கட்டாயமான A1 ஆங்கில பயிற்சி நெறிக்கும் பரீட்சைக்கும் அங்கிகரிக்கப்பட்ட பயிற்சி மையம்.
மிக அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.
இலவச விளக்கத்திற்கு நேரில் வரவும்

City & Guilds Approved Centre

நொலிட்ஜ் யூனிவேர்ஸ்
இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.
www.kugroup.info 0777302882


## மரண அறிவித்தல்

### சேதுலிங்கம் சிவசுப்பிரமணியம்

(குனுக்கர்)



கைதடி மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சேதுலிங்கம் சிவசுப்பிரமணியம் (குனுக்கர்) நேற்று (06.08.2011) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கைதடி மேற்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.


## COMPUTER CLASSES

- Diploma in Microsoft Office.
- Diploma in Computer Studies.
- Diploma in Graphic Designing.
- Diploma in Web Designing.
- Diploma in Programming.
- Diploma in Desk Top Publishing.
- Diploma in Hardware & Networking.
- Diploma in Computerized Accounting Packages.
- Diploma in Multimedia.
- Computer Kids Training Program.
- Certificate in Internet & E-mail.

பாடசாலை மாணவர்கள், தொழில் புரிய இருப்பவர்கள், தொழில் புரிபவர்கள், இளைஞர், யுவதிகளுக்கான புதிய கணனிப் பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. (தமிழ் மொழி விளக்கத்துடனும், குறைந்த இலகுதவணைக் கட்டண முறை மூலமும் கற்பிக்கப்படும்)

**NORTH LEAD**
**EDUCATIONAL CENTER**
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel : 222 4459, 0772533390, Fax : 222 4460.

## STUDY IN UK

### நாங்கள் தயாராகின்றோம்

*நீங்கள் O/L, A/L சித்தியடைந்துள்ளீர்களா? நீங்களும் பட்டதாரியாகலாம். அரியதோர் சந்தர்ப்பம். உங்கள் உயர்கல்வியை மேற்கொள்வதற்கு நாங்கள் தயாராக உள்ளோம்.*

★ G.C.E O/L தகைமையுடன் அடிப்படை ஆங்கிலக் கற்கை நெறியினை U.K இல் தொடரலாம்.
★ IELTS கற்கைநெறி வகுப்புகளும்/ ஆலோசனைகளும்.
★ குறைந்த செலவில் Sponsor ஏற்பாடு.
★ குடும்பத்துடன் பயணிக்க கூடிய ஏற்பாடு.
★ மிகக் குறுகிய காலத்தில் Visa பெற்றுக் கொடுக்கப்படும்.
★ Visa க்கு பின் கட்டணம் செலுத்தும் வசதி.
★ மேலும் Course fees/Sponsor விசேட சலுகைக் கட்டணம்.

மேலதிக விவரங்களுக்கு:

**PS CONSULTING (PVT) LTD,**
*STATION ROAD, KONDAVIL WEST, KONDAVIL, JAFFNA.* T.P-0778328290, 0755766786.

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976ல் பிறந்த கனடாவில் குடியுரிமையுள்ள சுப்பர் மார்க்கேற், தொலைபேசி கடை உரிமையாளருக்கு நட்சத்திரம் சதயம் 2ஆம் பாதம், கிரகபாவம் 11¼ , உயரம் 6'5 கொண்ட மணமகனுக்கு மணமகள் தேவை. 1984, ஆஸ்திரேலியாவில் குடியுரிமையுள்ள B.C.A(Hons) திருவாதிரை 2ஆம் பாதம், உயரம் 5'4 கிரகபாவம் 15½ மணமகன் தேவை.

தொடர்பு: **VANI INTERNATIONAL MARRIAGE BUREAU**
Govt Registed International
T.P- 0771307185 [விஜய்]
0778501013 [வாணி]
எமது இணையதள விலாசம் www.keethannet.com

## வீடு விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைக்கு முன்னாலும் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்துக்கு அருகிலும் கீழ்மாடி, மேல் மாடி வீடு விற்பனைக்குண்டு.

சுந்தரம் ஞானசுந்தரம்'இல.28, முருகமூர்த்தி வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
T.P:0777030234,0217901059


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னத்தம்பியார் தங்கமுத்து



களனை, பன்னாலையைப் பிறப்பிடமாகவும், இளவாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பியார் தங்கமுத்து நேற்று (06.08.2011) சனிக்கிழமை சிவபாத மடைந்து விட்டார் .

அன்னார் காலஞ் சென்ற சின்னத்தம்பியாரின் அன்பு மனைவியும் நாகேஸ்வரி (கனடா), நாகேந்திரன் (தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம்) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ் சென்ற சிவகுருநாதன் மற்றும் புனிதவதி ஆகியோரின் அன்புமாமியும் சிறிவள்ளிநாயகி (கொழும்பு) கோபிமனோகரன் (கனடா)சிறிஸ்கந்தராஜா (ஜேர்மனி) கௌரிபாலன் (கனடா) ஜெயகௌரி(கனடா) சுவர்ணா, ராஜி, அனந்தன்(சிங்கப்பூர்) சுகந்தன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் கஜன், தேனுஷா, சகானா, பிரவீன், குகன், மயூரி, பிரணவன், கணன், மதுஷா, சாரங்கா, ஸ்ரீராம், வித்தகன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07.08.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முள்ளானை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இளவாலை வடக்கு,
இளவாலை.

**தகவல்:** மகன்: சி. நாகேந்திரன்,
மகள்: சி.நாகேஸ்வரி.

### திருமதி காசிப்பிள்ளை சின்னம்மா



வல்வெட்டி, தர்மகுலசிங்கம் சனசமூக நிலையத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காசிப்பிள்ளை சின்னம்மா நேற்று(06.08.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலு காசிப்பிள்ளையின் அன்பு மனைவியும் , ரஞ்சிதமலர், அருந்தவம், நவசேகரம்(சுவிஸ்), ஜெயசேகரம்(கனடா), ஜெகசோதிலிங்கம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், பொன்னையா, சுசீலா, காந்தரூபி, அதிசயவனிதா, யோகராணி ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற சுந்தரத்தின் சகோதரியும், பிரபு, பிரசாந்தன், பிரபா, செந்தூரன், செந்தாரகா, செந்தீபன், வத்சலா, கோபி, பிரிந்தா, தர்சனா, ரம்மியா, கௌதமன், இலக்கியா, ஜெகந்தினி, ஜெயந்தினி, ஜெகந்தன், ஜெசாந்தினி, ஜெனந்தினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2011) மு.ப 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளன்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

*கலாலயம்,*
*தர்மகுலசிங்க சனசமூக நிலையம்,*
*வல்வெட்டித்துறை.*

தகவல்:
*மகன்: கா.அருந்தவம்*
*மகள்: பொ.ரஞ்சிதமலர்.*

## மரண அறிவித்தல்

### முத்து நடேஸ்



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்து நடேஸ் கடந்த (02.08.2011) செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற ராணியின் அன்புக்கணவரும்,ஆனந்தராஜா,றூஸ்ரி (பிரான்ஸ்) ரவீந்திரராஜா (இந்தியா), சாந்தினி காலஞ்சென்ற சௌந்தரராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும்,புஸ்பராணி,வவா (பிரான்ஸ்) ஐடா (இந்தியா),பாலச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக இன்று (07.08.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ். பரியோவான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*88, குருசோ வீதி,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*

**தகவல்:**
**பிள்ளைகள்.**


## ENGLISH CLASSES

Grammar, Spoken, Reading, Writing, Listening, Speaking, என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.

ஆண்கள், பெண்கள், தொழில் புரிபவர்கள், வெளிநாடு செல்ல இருப்பவர்கள், பாடசாலை மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. (மூன்று மாதங்களில் ஆங்கிலத்தில் சிறப்புத்தேர்ச்சியை பெற்றுக் கொள்ளலாம்)

**NORTH LEAD**
**EDUCATIONAL CENTER**
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel : 222 4459, 0772533390, Fax : 222 4460.

## WANTED

*English Elecution Teacher, Age limit below 35 yrs, Prefered old girls from Chundukuli, Holy family Convent and Vembadi girls schools, Selection based on merits and experience. Send your CV to*

**NORTH LEAD EDUCATIONAL CENTER**
*328, Stanly Road, Jaffna.*
*E-mail : northlead@gmail.com*


## கண்ணீர் அஞ்சலி

கடந்த 04.08.2011 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட முன்னாள் உதவிப் பணிப்பாளர் திரு.க.தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவி

### திருமதி சறோஜினிதேவி தர்மலிங்கம்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**உதவிப் பணிப்பாளரும், உத்தியோகத்தர்களும்.**
கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டில்ஷான் அதிரடி

# சாதித்தது இலங்கை சரணடைந்தது ஆஸி.




பல்லேகல, ஓக. 7

இலங்கை அணிக்கும் ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான முதலாவது 'ரி-20' ஆட்டத்தில் இலங்கை அணி 35 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலிய அணியை வீழ்த்தியது. இலங்கை அணியின் தலைவர் டில்ஷானின் அபார அதிவேக சதத்தின் உதவியுடன் இலங்கை அணி இந்த வெற்றியை நேற்றுப் பெற்றுக் கொண்டது.

ஆஸ்திரேலிய அணி இலங்கை சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இதில் முதலாவது 'ரி-20' ஆட்டம் பள்ளேகலவில் நேற்று இரவு இடம்பெற்றது. இலங்கை அணிக்கு திலகரட்ன டில்ஷானும், ஆஸ்திரேலிய அணிக்கு கம்ரான் வையிட்டும் தலைமை தாங்கினர். நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி இலங்கை அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

இதனடிப்படையில் இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக மஹேல ஜெயவர்தன - திலகரட்ன டில்ஷான் ஜோடி களமிறங்கியது. ஜெயவர்தன ஆரம்பத்தில் அதிரடியாக இரண்டு பவுண்டரிகளை விளாசி ஆட்டத்தை தொடக்கி வைத்தார். இருப்பினும் 11 ஓட்டங்களுடன் பிரெட் லீயின் பந்து வீச்சில் 'போல்டாகி' ஜெயவர்தன வெளியேறினார். தொடர்ந்து களமிறங்கிய சந்திமால் 11 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேறினர். 42 ஓட்டங்களுக்கு இலங்கை அணி 2 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

டில்ஷானுடன் ஜோடி சேர்ந்த சங்ககார ஆஸி.யின் பந்து வீச்சை சிதறடித்தார். மறுமுனையில் சங்காவின் ஆட்டத்துக்கு டில்ஷான் சிறப்பான ஒத்துழைப்புக் கொடுக்க இலங்கை அணியின் ஓட்ட எண்ணிக்கை அதிகரித்தது. அணி 94 ஓட்டங்களைப் பெற்ற போது சங்ககார 22 பந்துகளில் 4 பவுண்டரிகள் அடங்கலாக 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதன் பின்னரே ஆஸ்திரேலிய அணிக்கு தலையிடி தொடங்கியது. ஜீவன் மென்டிஸுடன் இணைந்து டில்ஷான் ஆஸியின் பந்து வீச்சை நொருக்கித் தள்ளினார். ஆட்டத்தின் 16 ஆவது ஓவரை ஹாஸ்ரிங் வீச அந்த ஓவரில் தொடர்ச்சியாக 4 பவுண்டரிகள் விளாசி 39 பந்துகளில் தனது அரைச்சதத்தை கடந்தார். வொட்ஸன் வீசிய 18 ஆவது ஓவரிலும் 2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடித்தார். ஆட்டத்தின் இறுதி ஓவரை ஜோன்ஸன் வீச அந்த ஓவரிலும் 2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடித்து 55 பந்துகளில் தனது சதத்தை பூர்த்தி செய்தார்.

இருபது ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 3 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 198 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. டில்ஷான் ஆட்டமிழக்காமல் 11 பவுண்டரிகள், 5 சிக்ஸர்களுடன் 104 ஓட்டங்களையும், ஜீவன் மென்டிஸ் 19 பந்துகளில் 4 பவுண்டரிகள் அடங்கலாக 29 ஓட்டங்களையும் ஆட்டமிழக் காமல் பெற்றுக் கொடுத்தார்.

பந்து வீச்சில் லீ, ஜோன் ஸன், வொட்ஸன் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

199 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடத் தொடங்கியது ஆஸ்திரேலிய அணி. ஆஸி. அணியின் விக்கெட்டுக்கள் ஆரம்பம் முதலே சீரான இடைவெளியில் சரிக்கப்பட்டது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய டேவிட் வோர்னர் மட்டும் அதிரடியாக துடுப்பெடுத்தாடினார். 31 பந்துகளில் 6 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 53 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந் தார். ஆஸி அணி 15.1 ஓவர்க ளில் 105 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்திருந்தது. இதன் பின்னர் ஜோடி சேர்ந்த ஜோன்ஸன் - ஸ்ரீவன் ஓ கெவீ அதிரடியாக ஓட்டங்களைக் குவித்தனர். அதிரடியாக ஆஸி ஆடத்தொடங்கிய போது ஆட் டம் அவர்கள் கையில் இல்லை. இறுதியில் 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 163 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. ஸ்ரீவன் ஓ கெவீ 12 பந்துகளில் 3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 22 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். ஜோன்ஸன் 16 பந்துகளில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் அடங்கலாக 22 ஓட்டங்களையும், ஹாஸ்ரிங் 4 பந்துகளில் ஒரு சிக்ஸர் அடங்கலாக 14 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொடுத் தனர்.

பந்து வீச்சில் பெரேரா 3 விக்கெட்டுக்களையும், குலசேகர 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள். ஆட்டநாயகனாக டில்ஷான் தெரிவு செய்யப்பட்டார்.

## கூட்டமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைபவம் முன்னர் கிளிநொச்சியில் இடம்பெற ஏற்பாடாகி இருந்தது.

தற்போது எதிர்வரும் 20 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் இந்தப் பதவியேற்பு வைபவம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் எங்கு இந்த நிகழ்வு இடம்பெறும் என்பது தொடர்பான முடிவு பின்னர் அறிவிக்கப்படும் என்று கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-15)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடபகுதிக்கு வெளி நாட்டவர்கள் வருவதற்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற வேண்டும் என்ற கட்டுப்பாடு நீக்கப்பட்டதைத் தொடர்ந்து வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் பலர் போர் நடைபெற்ற கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு நேரில் சென்று நிலைமைகளைப் பார் வையிட்டு செய்திகளை வெளியிட்டு வருகின்றனர்.

அப்படியே 'தி வீக்என்ட் லீடர்' செய்தியாளரும் கிளிநொச்சி, முல்லைத்தீவு (புதுக்குடியிருப்பு வரை) மாவட்டங்களுக்கு நேரில் சென்று தான் பார்த்தவற்றை கட்டுரையாக்கி உள்ளார்.

''இலங்கையின் வடபுலத்தில் உள்ள தமிழர் பகுதிகளின் ஊடாகப் பயணிக்கும் எவரும் அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் சில மாற்றங்களைப் பார்த்து அதிர்ந்து போவார்கள். தமிழர்களின் பாரம்பரிய தேசமாகவும் தமிழர்களின் கலாசாரங்களை வெளிப்படுத்தி நின்றதுமான இந்தப் பகுதிகள் தற்போது சிங்களமயமாக்கப்பட்டு வருகின்றன. அதாவது தமிழர் வாழ் பிரதேசங்களில் புத்தர்சிலைகள், விகாரைகள் என்பன புதிதாக அமைக்கப் படுகின்றன'' என்று அவர் தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் வீடுகள் அழிக்கப்பட்டு அவர்கள் சிறுகுடிசைகளில் வாழும் நிலையில் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்தைச் சென்றடையும் வரை சிங்களமயமாக்கலால் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தெளிவாகப் பார்க்க முடிகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''வடக்கில் தமிழ்ப் பிரதேசங்களின் ஊடாகப் பயணித்த போது சிங்கள ஆதிக்கத்தின் மனோநிலையைப் பிரதிபலிக்கின்ற பல்வேறு நடவடிக்கைகளை எம்மால் அவதானிக்க முடிந்தது. அதாவது நாம் சுவாசிக்கும் இடமெல்லாம் சிங்கள வாசம் வீசியது. சிங்கள இராணுவத்தினர் தங்கியிருக்கும் முகாம்களும் தமிழர் பிரதேசங்களில் அதிகம் காணப்படுகின்றன. இந்தப் பிரதேசங்களில் உள்ள இராணுவத்தினர் மட்டுமே பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்களாவர். ஆனால் கடந்த ஒரு சில ஆண்டுகளில் மட்டும் இந்தப் பிரதேசங்களில் 2500 புத்தர் சிலைகள் உருவாக்கப்பட்டுள்ளன என உள்ளூர்த் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மன்னார் மாவட்டத்திலுள்ள பிரபலம் மிக்க திருக்கேதீச்சர ஆலயத்திலிருந்து 50 மீற்றர் தொலைவில் மகாதோட்ட ரஜ மகா விகாரை என்ற பெயரில் பௌத்த விகாரை ஒன்று கட்டப்பட்டுள்ளது. திருக்கேதீச்சரத்தின் புராதன பெயர் மாதோட்டம் ஆகும்'' என்று அந்த இந்தியப் பத்திரிகையாளர் தெரிவித்துள்ளார்.

## எண்ணெய்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருக்க வேண்டிய நிலை இலங்கைக்கு ஏற்படாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மன்னார் கடல்படுகையில் எண்ணெய்ப் படிவுகள் இருப்பதாக பூர்வாங்க ஆய்வுகள் உறுதிப்படுத்தி உள்ளன. எனினும் ஆழ் கடலில் துளையிட்டு மேலதிக ஆய்வுகளை மேற்கொள்ளும் போது போதிய எண்ணெய்ப் படிவுகள் கிடைக்காமலும் போகலாம் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மன்னார்ப் படுகையில் நேற்றுத் தோண்ட ஆரம்பிக்கப்பட்ட இடத்தில் எண்ணெய்ப் படிவுகள் கிடைத்தால், அதிலிருந்து வர்த்தக ரீதியான மசகு எண்ணெய்யை எடுப்பதற்கு இன்னும் மூன்று ஆண்டுகள் செல்லும். 2014ஆம் ஆண்டில் ஒரு பில்லியன் பரல் எண்ணெய்யைப் பெறமுடியும்.

மன்னார் படுகையில் எண்ணெய் தோண்டுவதற்கான அனுமதி இந்திய நிறுவனம் ஒன்றுக்கும் சீன நிறுவனம் ஒன்றுக்கும் வழங்கப்பட்டுள்ளது. ரஷ்யாவின் எண்ணெய் நிறுவனமான காஸ்போமும் அங்கு அகழ்வில் ஈடுபடுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, இலங்கையில் எண்ணெய் அகழ்வுப் பணி வெற்றி பெற்றால், இன்று மேற்கு நாடுகளிடம் இருந்து மத்திய கிழக்கு நாடுகள் எதிர்நோக்கும் அச்சுறுத்தல் போன்று இலங்கையும் எதிர்கொள்ள வேண்டி வரும் என்று அமைச்சர் பஸில் தெரிவித்தார். (உ)

## அமெ. போர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கப் படையினரின் வழக்கமான பயிற்சி நடவடிக்கை ஒன்றின்போதே விமானங்கள் இலங்கை வான்பரப்பைத் தாண்டிச் சென்றதாக அமெரிக்கப் படைத் தரப்பில் இருந்து தெரிவிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் கூறின.

ஆனால், இது பற்றி கருத்துத் தெரிவிக்க கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மறுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரில் நடந்த போர்க் குற்றங்கள் குறித்துப் பொறுப்புச் சொல்ல வேண்டும் என்று இலங்கையை அமெரிக்கா வற்புறுத்திவரும் நிலையில், அதன் போர் விமானங்கள் இலங்கை வான் பரப்புக்குள் அத்துமீறிப் பறந்துள்ளன. (உ)

## தொடர்ந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயங்கள் குறித்து அரசிடம் கூட்டமைப்பின் யோசனைகளை எழுத்து மூலமாகக் கொடுத்து ஐந்து மாதங்கள் கடந்து விட்ட நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த இக்கட்டான முடிவை எடுக்க வேண்டி இருந்தது என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு ஊடாக இனிமேல் இனப் பிரச்சினைத் தீர்வு குறித்துப் பேசப் போவதாக அரசு கூறியுள்ளதே என்று அவரிடம் கேட்டதற்கு, ''அரசு - கூட்டமைப்பு பேச்சில் எட்டப்படும் முடிவுகளையே நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன் சமர்ப்பிக்கப் போவதாக அரசு எம்மிடம் தெரிவித்திருந்தது. ஆனால் இதுவரை நடந்த பேச்சுக்களில் அப்படி எந்த முடிவுகளுமே எட்டப்படவில்லை. பேச்சு மூலம் அப்படி ஏதாவது தீர்மானங்களுக்கு வந்தால் அவற்றை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன் வைக்கலாம்'' என்றார் சுமந்திரன். (உ)

## நிதி நெருக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் தேவைகள் அதிகம் உள்ளமை புரிந்து கொள்ளப்படவேண்டும். ஆனால் நிதிப் பற்றாக்குறை முக்கிய பிரச்சினையாக உள்ளது'' என்று தெரிவித்தார் அகதிகளுக்கான ஐ.நா. தூதரக இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மிச்சல் ஷவாக்.

மீளக்குடியமரும் மக்களுக்கு அரசுடன் இணைந்து உதவிகளை வழங்குவது, மீளக்குடியமர்ந்த மக்களின் தேவைகளைக் கண்காணிப்பது, அவர்களின் அடிப்படை இருப்பிடத் தேவைகளுக்கு உதவுவது, சமூக மட்டத் திட்டங்களுக்கு உதவுவது, வவுனியா இடைத் தங்கல் முகாம்களில் இருக்கும் மக்களுக்கு ஆதரவளிப்பது, வெளிநாடுகளில் இருந்து திரும்பிய அகதிகளின் நலன்களைக் கவனித்துக் கொள்வது போன்ற பல பணிகளில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் வடக்கில் ஈடுபட்டு வருகின்றது.

இதற்காக 2011ஆம் ஆண்டி இறுதிக் காலாண்டில் தேவை என மதிப்பிடப்பட்ட நிதியில் அரைவாசியைக்கூடத் திரட்ட முடியவில்லை என்று தூதரகம் தெரிவித்துள்ளது. எனவே உலக நாடுகள் நிதி உதவிகளை வழங்குவதற்கு முன்வர வேண்டும் என்றும் அது அழைப்பு விடுத்துள்ளது. (உ)

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னுச்சாமி மகேஸ்வரி

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், 11, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுச்சாமி மகேஸ்வரி நேற்று (06.08.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுச்சாமியின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்)அன்பு மனைவியும், வசீகரனின் (ஒப்பு நோக்குநர், 'உதயன்' பத்திரிகை) பாசமிகு தாயும், மதிவதனாவின் அன்பு அத்தையும், தர்சன், பானுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

இன்று (07.08.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*11, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
பொ.வசீகரன்(மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45 ஆம் நாள் நினைவாக...



**தயாபரன்**
**நந்தகோகுலன்**

பிரியமான நண்பனே கோகுலா
மறக்கக் கூடிய முகமா உன் முகம்
மறைக்கக் கூடிய உறவா நம் உறவு
உன் உடலை உயிர் உதறிப் போனாலும்
என் உயிராகிவிட்ட உன்னை
உதற முடியவில்லையடா
பாசம் காட்ட அன்னை இல்லாவிட்டாலும்
தோழியாய் வந்த அன்னை நீயடி
என்று சொல்வாயேடா
இன்று நீ இறந்து போனாலும்
என்னை மரணம் வந்து
அழைக்கும் வரை உன் நினைவுகள்
என்றுமே என் மனதில்
உயிர்த்துடிப்புடன் இருக்குமடா

மலர்வு 31.05.1986 — உதிர்வு 24.06.2011

*168, முத்தமிழ் வீதி, யாழ்ப்பாணம்.*

**பிரியமுள்ள நண்பி**
**பு. ஆன் சிந்துஜா**

## இந்திய மீனவரின் சடலம்

தலைமன்னார் கடற்கரையில் இந்திய மீனவர் ஒருவருடைய சடலம் நேற்றுக் கரையொதுங்கியது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கன்னியாகுமரி மாவட்டம் மேலமுட்டம் கரையோரக் கிராமத்தைச் சேர்ந்த யு.அருளாணந்தம் என்ற மீனவருடைய சடலமே அது என்று தமிழக மீனவர்கள் நலன்புரி சங்கத் தலைவர் தெரிவித்தார். யாழ். ஆயர் இல்லத்தின் ஊடாகவே தமக்கு இந்தத் தகவல் கிடைத்தது என்றும் அவர் குறிப்பிட்டார். (உ)

## மாட்டு வண்டிச் சவாரி



வட்டுக்கோட்டை மண்ணின் திருமகன்

**கனகசபை**
**செல்லக்கண்டு**

அவர்களின் ஞாபகார்த்தமாக இந்த மாட்டுவண்டிச் சவாரி இடம்பெறவுள்ளது. கட்டணம் இல்லை.

இடம்:- வட்டுக்கோட்டை (கொத்துத்துறை)
காலம்:- 14.08.2011 (ஞாயிற்றுக்கிழமை)

தியாகராசா கஜந்தன் - பேரன் (சுவீஸ்)

தொடர்பு:- 0774457400

## தவறிவிட்டது

முக்கிய ஆவணங்களுடன் ஒரு பிரயாணப்பை கொழும்பு - யாழ் பிரயாணத்தின் போது கடந்த (05.08.2011) வெள்ளிக்கிழமை தனியார் பேரூந்து ஒன்றில் தவறிவிட்டது. இதைக் கண்டு எடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (சன் மானம் வழங்கப்படும்.

**0718415369, 021 222 3709, 032 226 6569**

## வெளிவந்து விட்டது

A/L - தமிழ்
செ.திருநாவுக்கரசு

யாழ் மாணவர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட A/L - தமிழ் - புதிய பாடத்திட்டம் எம்மிடம் முன்பதிவு செய்தவர்கள் உடன் வந்து பெற்றுக் கொள்ளவும்.

யாழ். நகரின் விற்பனையாளர்,
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம். 222 9881

## அதிபர், ஆசிரியர்கள், வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்கள் வியாபார, விற்பனை பிரதிநிதிகளுக்கான ஆங்கில பயிற்சி

**20 வாரநாள்கள் English பயிற்சிநெறி**

ஆரம்பம் : 08.08.2011 திங்கள்கிழமை முடிவு : 02.09.2011

பிரிவுகள் : காலை 8-9.30, 9.30-11, 11-12.30, மாலை 3-4.30, 4.30-6

ஏதாவதொரு பிரிவில் பயிற்சிபெறலாம்

பயிற்சிக்கான மொத்த கட்டணம் : ரூபா 3000/- மட்டும்

விஞ்ஞானரீதியான பயிற்சிநெறியின் 20 நாள் வகுப்புக்களில் முழுமையாக ஆங்கிலம் கதைக்க முடியாதவர்களுக்கு பணம் முழுமையாக திருப்பித்தரப்படும்

**பதிவுக்கு : 06.08.2011 - 07.08.2011 - 08.08.2011**

**ஆங்கிலம் கதைப்பது மிக மிக இலகுவானது**

**MyWay** 182 1/5, STANLEY ROAD, JAFFNA
077 33 63 456   021 222 9505

## அட்சயா அழகுக் கலை பயிற்சியகம்

★ பேசியல்-10 ★ மேக்கப் - 7 ★ கெயா ஸ்டைல் -25
★ தலை முடி சுருட்டுதல் ★ தலை முடி அயன்பண்ணுதல்
★ வுனவுஸ் கட்டிங் - 6 ★ சாறி வேக் - 6

மேற்படி பயிற்சிகள் நடைபெறுகின்றன. உடன் தொடர்பு கொள்ளவும். பயிற்சியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

★ ஒட்டிய கன்னங்களை குண்டுக்கன்னங்களாக மிளிரவைக்கும் குளிசை
★ உடல் எடை குறைக்கும் இயற்கை மூலிகை சத்தடங்கிய பால்மா
★ கடும் கறை, கருமை, கருவளையம் எண்ணெய் பிசுக்கு மஞ்சள் புள்ளிகள் நாட்பட்ட பருக்கள் சுருக்கங்கள் அகற்றும் ஒரிஜினல் வைத்திங் கிறீம் பெற்றுக்கொள்ளலாம்.
★ றிச்கேக் 1, 45/- மட்டுமே ★ வைத்திங் பேசியல் செய்துகொள்ளலாம்

அட்சயா, 461, அத்தியடிச் சந்தி, யாழ்ப்பாணம். தொ.பே: 0772106155

## CHEMISTRY S.Vasu

| A/L 2012 | A/L 2013 |
|---|---|
| சேதன இரசாயனம் (Tue, Thur, 6.15-7.15 am) | அடிப்படை இரசாயனம் (Mon, Wed 6.15-7.15 am) |
| பகுப்பு இரசாயனம் Sat, Sun 3.30 - 4.30 Pm | பிரிவு, கலப்பாக்கம் Sat, Sun 4.30-5.30 pm |
| ஆரம்பம் - 07.08.2011 (இன்று 3.30 pm) | ஆரம்பம் - 07.08.2011 (இன்று 4.30 pm) |

**NEC** பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி சந்தியில் இருந்து (50) யார் தொலைவில் நாவலர் றியூட்டறி முன்பாக (7 பரப்பு 17½ குளி) விஸ்தீரணமுள்ள, மிகப் பழைய வீட்டுடன் காணி உடன் விற்பனைக்குண்டு-வர்த்தக நிலையம், எரிபொருள் விற்பனை, வைத்தியசாலை, குடியிருப்பு போன்றவற்றுக்கு மிக உகந்தது. உடன் தொடர்பு கொள்க.

**021 222 2326**

## தவறிவிட்டது

NOKIA கைத்தொலைபேசி ஒன்று யாழ்ப்பாணத்துக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் கடந்த 03.08.2011 அன்று பிற்பகலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். 0770872569, 021 2226219

அதேவேளை புத்தம் புதிய கைத்தொலைபேசி சன்மானமாக வழங்கப்படும்.

## விடுமுறைக்கால கணினி வகுப்புக்கள் ஆரம்பம்

| | | |
|---|---|---|
| Dip.in Ms Office 2007 | 1 Month | - 2500/= |
| Dip.in DTP | 1 Month | - 3000/= |
| Dip.in Web Designing | 1 Month | - 4000/= |
| Dip.in Graphic Designing | 1 Month | - 3000/= |
| Dip.in Hardware | 1 Month | - 3000/= |
| Certificate in Internet & Email | 1 Month | - 2000/= |
| Kids Program | 1 Month | - 1500/= |

Typing, Scanning, Printing, Net Call, Browsing போன்ற சேவைகளும் நடைபெறுகின்றன.

குறிப்பு: எமது நிறுவனத்தில் கற்கும் மாணவர்களுக்கு விசேட கழிவுடன் கணினி வழங்கப்படும்.

**Sky Computers (Pvt) Ltd.**
162, Main Street, Jaffna. 021 2221417, 0779672038

## ரூபா 50,000/- க்கு

மேல் மாத வருமானம் பெற இன்றே முதலீடு செய்யுங்கள்

**ஐஸ் கிரீம் இயந்திரம்**



கூல்பார், ஸ்நெக் பார், ஹோட்டல், பாடசாலை, கென்டின், பேக்கரி, பார்மசி, சுப்பர் மார்க்கட், குரொசரி போன்ற விற்பனை நிலையங்களுக்கு உகந்தது.

- ஒரே இயந்திரத்தில் மூன்று வெவ்வேறு வகையான ஐஸ்கிரீம் வகைகளை விற்பனை செய்யலாம். சோயா / வெனிலா / சொக்கலேட்
- சுயமாகவே தயாரிக்கும் திறன்.
- இலவச பயிற்சி
- உத்தரவாதத்துடன் / விற்பனையின் பின் சேவை

BRAND NEW

**WINRICH INTERNATIONAL (PVT) LTD.**
(MEMBER OF PLUSS INT.)
No.18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03.
**Hotlines: 077 391 8870, 077 1066902**

## கார் தேவை

VW 1302 or 1303 wanted 1302 அல்லது 1303 volks wagen கார் தேவை. எந்த தரத்திலென்றாலும் பரவாயில்லை.
தொடர்பு: 0718329343

## THE SCIENCE POINT

*KANNATHIDDY ROAD, JAFFNA*
**ORGANIC**
ஆரம்பம்:- 07.08.2011
Sat, Sun:- (10.45-11.45) a.m
By- அன்பு

## வேலை ஆள் தேவை

(P.S.R Travels and Tours)

ஆசனப்பதிவுகளை மேற்கொள்வதற்கு பெண் பிள்ளைகளிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றன.
தொடர்புகளுக்கு:
0773713476 (ராஜன்), 0779554411 (சத்தியா)

## வேலைக்கு ஆள் தேவை

கால்நடைத் தீவகம் கடைக்கு வேலைக்கு ஆள் தேவை.
★ மூடை சுமக்கக் கூடியவர்
★ Bill எழுதுநர்

S.K.ஏஜென்ஸி,
No.128/D, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

## உள்நாட்டு வெளிநாட்டு துரித கடிதங்கள் பொதிகள் பரிமாற்ற சேவை



Our Agents DHL aramex SriLankan Cargo ups

மஹாராஜா Food நிறுவனத்தினர் யாழ்.நகரில்...!



உங்கள் வெளிநாட்டு உள்நாட்டு உறவுகள் அனுப்பும் பொதிகளை எமது யாழ்.கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் வெளிநாட்டில் உள்ள உறவுகளுக்கு பொருள்களையும் ஆவணங்களையும் குறைந்த செலவில் பாதுகாப்பாகவும் விரைவாகவும் உத்தரவாதத்துடனும் அனுப்பி உறவை வலுப்படுத்த நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்.

**G.T.V Enterprises (Pvt) Ltd.**
ஜீ.ரீ.வி என்ரபிறைஸ்சஸ் (பிறைவேற்) லிமிட்.



11Kg இற்கு அதிகமான பொதிகளிற்கு விசேட கட்டண சலுகை

உள்நாட்டிற்கான பொதிகள், கடிதங்கள் நாட்டின் எப்பாகத்திலும் விநியோகிக்கப்படும்.

யாழ்ப்பாணம்:- #225, Kasthuriyar Road, Jaffna. T.P: 0212224338.
#272, K.K.S. Road, Jaffna. T.P:0212224825.
கொழும்பு: #18/3, Dr.E.A Cooray Mawatha, Wellawatte. T.P: 0112360926, 0112259849.

(49)

## DHL — உள்நாடு, வெளிநாடுகளில் உள்ள உறவுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

வடமாகாணத்தில் அங்கீகாரம் பெற்ற ஒரே முகவர்

London Rs750
CANADA, U.S.A, FRANCE, DENMARK, GERMANY, ITALY, NORWAY, SWISS Rs900

220 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு ஆகாய கடல் மார்க்கமாக உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புபொருட்கள், DVD, VCD போன்ற பொருட்களை மிகவிரைவாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்

10 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு

குறிப்பு
DHL கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. போலி முகவர்களுக்கு கூடுதலான கட்டணத்தைச் செலுத்தி ஏமாற்றமடையாதீர்கள்.
குபாவிலோ அன்னிய நாட்டுச் செலாவணி முறையிலோ செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் பொதிகளை செலுத்தி உங்களுக்கான DHL Tracking Number களை பெற்றுக்கொள்ளலாம்.

வடமாகாணத்தில் DHL வலைப்பின்னலுடன் முதல் முதலாக திருமுருகன் கொம் நெற் இணைக்கப்பட்டுள்ளது.
**DHL Online Tracking**



TCN Express,
2B, Nelsan place, Colombo-06.
Customer service No.021 222 7835

**திருமுருகன் கொம்நெற்**

இல.259, கே.கே.எஸ் வீதி, யாழ்பாணம். | இல.18.பிரதானவீதி.நெல்லியடி. | இல.05.திருநகர் பிரதான வீதி.கிளிநொச்சி. | இல.46.ஆடியபாதம் வீதி.திருநெல்வேலி.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MBSL Insurance ஆண்டு விற்பனை மாநாடு மற்றும் விருது வழங்கும் விழா 2010

## மிகச்சிறந்த செயல்திறனுடையோர்

ஆயுள் காப்புறுதி



எச். ஏ. அனோமா ரஞ்சனி
நிதி ஆலோசகர், அவிஸ்சாவெல்ல

மிகச்சிறந்த கிளை (கம்பஹா)



எம். நிமல்
கிளை முகாமையாளர், கம்பஹா

பொதுக் காப்புறுதி



என். ஐ. டீ. குரே
விற்பனை முகாமையாளர் - CBDU

## சுபர் கோல்ட் வெற்றியாளர்கள்

ஆயுள் காப்புறுதி



எச். ஏ. அனோமா ரஞ்சனி
நிதி ஆலோசகர், அவிஸ்சாவெல்ல

ஆயுள் காப்புறுதி



டப்ளிவ். ஏ. டீ. எஸ். வீரவர்தன
நிதி ஆலோசகர், கம்பஹா

பொதுக் காப்புறுதி



யூ. ஜீ. ஆர். நயனாஷி
நிதி ஆலோசகர், கம்பஹா

பொதுக் காப்புறுதி



என். ஐ. டீ. குரே
விற்பனை முகாமையாளர் - CBDU

பொதுக் காப்புறுதி



பீ. வை. அருமதான்திரி
விற்பனை பிரதிநிதி - CBDU

ஆயுட் காப்புறுதி



ஈ. அஜன்தா
குழுத் தலைவி, வவுனியா

பொதுக் காப்புறுதி



சுராஜ் என். பெர்னாண்டோ
விற்பனை பிரதிநிதி - CBDU

ஆயுட் காப்புறுதி



வீ. கதிர்ச்செல்வன்
விற்பனை முகாமையாளர், வவுனியா



பிரதம அதிதி திரு. எம். ஆர். ஷாஹ் (தலைவர், MBSL)



விற்பனை அல்லாத ஆதரவு வழங்கிய அலுவலர்கள்



திரு. சிட்னி கஜநாயக்க (MD)

## கோல்ட் விருது வெற்றியாளர்கள்

பொதுக் காப்புறுதி



ஈ. ஏ. ஆர். எதிரிசிங்ஹ
நிதி ஆலோசகர்,
நீர்கொழும்பு

ஆயுள் காப்புறுதி



கே. சாந்தலட்சுமி
நிதி ஆலோசகர்,
வவுனியா

ஆயுள் காப்புறுதி



கே. சிவகரன்
சிரேஷ்ட விற்பனை பிரதிநிதி
வவுனியா

ஆயுள் காப்புறுதி



டீ. டி. சீ. பிரேமசந்திர
நிதி ஆலோசகர்,
பாணந்துரை

ஆயுள் காப்புறுதி



எஸ். குகதாஸ்
குழுத் தலைவது,
வவுனியா

ஆயுள் காப்புறுதி



டீ. தமயந்தி
நிதி ஆலோசகர்,
மட்டக்களப்பு

பொதுக் காப்புறுதி



கெலும் ரத்னாயக்க
கிளை முகாமையாளர்,
குருநாகல்

ஆயுள் காப்புறுதி



வி. கதிர்ச்செல்வன்
விற்பனை முகாமையாளர்
வவுனியா

### வெள்ளி விருது வெற்றியாளர்கள்

| பிரிவு | பெயர் | கிளை |
|---|---|---|
| நிதி ஆலோசகர் - ஆயுள் | எச்.டி.என்.ஜி. குமாரசிறி | கம்பஹா |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | கே. லோகினிதேவி | மட்டக்களப்பு |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | டி.பி.டி.எஸ். சோமாவதி | அநுராதபுரம் |
| நிதி ஆலோசகர் - பொது | டி.டி.சி. பிரேமசந்திர | பாணந்துறை |
| குழுத் தலைவர் - ஆயுள் | எச்.பி.ஐ.எஸ். உதயங்க | பாணந்துறை |
| குழுத் தலைவர் - ஆயுள் | ஜெ.எம்.எஸ்.எஸ். பண்டார | அவிஸ்சாவெல்ல |
| குழுத் தலைவர் - ஆயுள் | கே.டப்ளிவ்.என்.சி. கலுபோவில | கம்பஹா |
| குழுத் தலைவர் - ஆயுள் | எச்.டப்ளிவ்.டி. ராஜபக்ச | அவிஸ்சாவெல்ல |
| சிரேஷ்ட விற்பனை பிரதிநிதி - ஆயுள் | எஸ். சிவானந்தராசா | வவுனியா |
| சந்தைப்படுத்தல் பிரதிநிதி - பொது | எஸ்.ஏ. கித்சிறி | மாத்தறை |
| உதவி விற்பனை முகாமையாளர் - ஆயுள் | எல்.எச்.டி. லெல்வல | கம்பஹா |
| விற்பனை முகாமையாளர் - ஆயுள் | என்.கே.பி. தசநாயக்க | அநுராதபுரம் |
| உதவி விற்பனை முகாமையாளர் - ஆயுள் | ரஞ்ஜித் விஜேநாயக்க | அம்பாறை |
| விற்பனை முகாமையாளர் | ஏ.ஆர்.கே. அகலவெல | தலைமை காரியாலயம் |

### வெண்கல விருது வெற்றியாளர்கள்

| பிரிவு | பெயர் | கிளை |
|---|---|---|
| நிதி ஆலோசகர் - ஆயுள் | எம். இலங்கேஸ்வரன் | வவுனியா |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | டப்ளிவ்.டி.ஏ.பி. வீரசிங்க | சிலாபம் |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | கே.பி. ரனசிங்க | கண்டி |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | ஐ.கே. பாலசூரிய | பாணந்துறை |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | எஸ்.சி. மதங்கதீர | கொழும்பு |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | வை. செல்வலக்ஷ்மி | வவுனியா |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | டி.எம்.எஸ். லக்ஷிகா | கம்பஹா |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | கே. கலைச்செல்வி | வவுனியா |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | ஏ.டி.யு.எஸ். ரத்நாயக்க | குருநாகல் |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | கே.யு.ஏ. பெரேரா | பாணந்துறை |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | டி.டி.எஸ். சோமலன்ச | மாத்தறை |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | ஜெ.ஏ.என். குமாரசிங்க | நுவரெலியா |

### வெண்கல விருது வெற்றியாளர்கள்

| பிரிவு | பெயர் | கிளை |
|---|---|---|
| நிதி ஆலோசகர் - பொது | எம்.எல்.எச். பெரேரா | பதுளை |
| நிதி ஆலோசகர் - பொது | யு.எஸ். ஜயசூரிய | மாத்தறை |
| குழுத் தலைவர் - ஆயுள் | பி.ஜி.என்.எஸ். சேனாரத்ன | அநுராதபுரம் |
| குழுத் தலைவர் - ஆயுள் | ஜி.ஏ.எச்.கே. பெரேரா | கம்பஹா |
| குழுத் தலைவர் - ஆயுள் | டி.எம்.ஏ. தசநாயக்க | கம்பஹா |
| குழுத் தலைவர் - ஆயுள் | கே.ஜி.ஏ. கொன்காலேகொட | கண்டி |
| சந்தைப்படுத்தல் பிரதிநிதி - பொது | எஸ்.பி. கோரல | கம்பஹா |
| சிரேஷ்ட விற்பனை பிரதிநிதி - ஆயுள் | ஏ.கே. கீர்த்திதேவ | பாணந்துறை |
| உதவி விற்பனை முகாமையாளர் - ஆயுள் | ஜி.டப்ளிவ். பிரேமசிறி | கண்டி |
| விற்பனை முகாமையாளர் - பொது | பி.கே.எஸ்.டி. டி சில்வா | சிபிடியு |
| விற்பனை முகாமையாளர் - பொது | ஆர்.சி. போசித்த | சிபிடியு |

### மெரிட் விருது வெற்றியாளர்கள்

| பிரிவு | பெயர் | கிளை |
|---|---|---|
| நிதி ஆலோசகர் - ஆயுள் | டி.எம்.ஏ. தசநாயக்க | கம்பஹா |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | என். ராசலக்ஷ்மி | வவுனியா |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | எல்.வி. மங்கலிகா | கம்பஹா |
| நிதி ஆலோசகர் - பொது | பி.ஏ.சி.எம். பதிராஜ | கம்பஹா |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | ஜி.எச்.ஜி.சி. டி சில்வா | அம்பாறை |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | கே.எஸ். ஜயரத்ன | கண்டி |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | டி. வசந்தராணி | வவுனியா |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | டப்ளிவ்.ஏ.டி. தர்ஷனி | அவிஸ்சாவெல்ல |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | எஸ்.ஆர். தமயந்தி | அநுராதபுரம் |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | டி.எம். இந்திக்க | பதுளை |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | எஸ்.எச்.பி. சபரமாது | கம்பஹா |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | ஜி.வி.எஸ். கருணாரத்ன | அவிஸ்சாவெல்ல |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | ஏ.டி. அட்மன் | பதுளை |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | ஜி.ஆர்.டி.சி. கருணாரத்ன | அவிஸ்சாவெல்ல |
| நிதி ஆலோசகர் - பொது | டி.வி.ஆர்.எஸ். பிரேமதிலக | கம்பஹா |
| நிதி ஆலோசகர் - பொது | டப்ளிவ்.எம்.டி.ஏ. விஜேகோன் | கம்பஹா |

### மெரிட் விருது வெற்றியாளர்கள்

| பிரிவு | பெயர் | கிளை |
|---|---|---|
| குழுத் தலைவர் - ஆயுள் | என். ஹேமபால | கம்பஹா |
| குழுத் தலைவர் - ஆயுள் | எச்.எம். ஜயதிலக | சிலாபம் |
| குழுத் தலைவர் - ஆயுள் | கே. கர்ஷினி | வவுனியா |
| குழுத் தலைவர் - ஆயுள் | ஜெ.கே.என். கான் | பதுளை |
| குழுத் தலைவர் - ஆயுள் | எம்.டி. தவ்ஷீட் | குருநாகல் |
| குழுத் தலைவர் - ஆயுள் | எம்.ஜெ. பிரனாந்து | சிலாபம் |
| சிரேஷ்ட விற்பனை பிரதிநிதி - ஆயுள் | ஓ.எஸ்.ஏ. டி சில்வா | அநுராதபுரம் |
| விற்பனை பிரதிநிதி - பொது | ஜெ.பி.ஏ. குமார | மாத்தறை |
| உதவி விற்பனை முகாமையாளர் - ஆயுள் | தம்மிக்க பண்டார | குருநாகல் |
| உதவி விற்பனை முகாமையாளர் - ஆயுள் | எம்.எஸ். ஹேமசந்திர | அவிஸ்சாவெல்ல |
| உதவி விற்பனை முகாமையாளர் - ஆயுள் | எம்.சி. சர்தாதிஸ்ச | பதுளை |
| உதவி விற்பனை முகாமையாளர் - ஆயுள் | பி.எஸ். சாந்த | அவிஸ்சாவெல்ல |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | எஸ்.எஸ். வீரசிங்க | கம்பஹா |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | எஸ்.எச்.பி.கே. சபரமாது | கம்பஹா |
| நிதி ஆலோசகர் - ஆயுள் | டப்ளிவ்.ஏ.டி.எஸ். வீரவர்தன | கம்பஹா |
| குழுத் தலைவர் - ஆயுள் | எச்.டி.என்.ஜி. குமாரசிறி | கம்பஹா |
| குழுத் தலைவர் - ஆயுள் | என். ஹேமபால | கம்பஹா |
| குழுத் தலைவர் - ஆயுள் | கே. சிவஹரன் | வவுனியா |
| விற்பனை முகாமையாளர் - ஆயுள் | ஜெ.எம்.எஸ்.எஸ். பண்டார | அவிஸ்சாவெல்ல |
| விற்பனை முகாமையாளர் - ஆயுள் | வி. கதிர்ச்செல்வம் | வவுனியா |
| உதவி விற்பனை முகாமையாளர் - ஆயுள் | என்.கே.பி. தசநாயக்க | அநுராதபுரம் |
| நிதி ஆலோசகர் - பொது | காமினி மதுராஜா | கம்பஹா |
| நிதி ஆலோசகர் - பொது | எம்.எம்.கே.ஏ. மாபா | மாத்தறை |
| நிதி ஆலோசகர் - பொது | யு.ஜி.ஆர். நயனாசி | கம்பஹா |
| சந்தைப்படுத்தல் பிரதிநிதி - பொது | ஈ.ஏ.ஆர். எதிரிசிங்க | நீர்கொழும்பு |
| சந்தைப்படுத்தல் பிரதிநிதி - பொது | சுராஜ் பிரனாந்து | சிபிடியு |
| சந்தைப்படுத்தல் பிரதிநிதி - பொது | பி.வை. அருமதன்திரி | சிபிடியு |
| விற்பனை முகாமையாளர் - பொது | எஸ்.ஏ.எஸ். கித்சிறி | மாத்தறை |
| விற்பனை முகாமையாளர் - பொது | என்.ஐ.டி. குரே | சிபிடியு |
| விற்பனை முகாமையாளர் - பொது | ஏ.ஆர்.கே. அகலவெல | சிபிடியு |
| விற்பனை முகாமையாளர் - பொது | பி.கே.எஸ்.டி. டி சில்வா | சிபிடியு |

MBSL Insurance Co. Ltd.
காப்புறுதி நிறுவனம்

388, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 011 2574500 பெக்ஸ்: 011 2574499
மின்னஞ்சல்: info@mbslinsurance.lk இணையத்தளம்: www.mbslinsurance.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மனிதர்களை அஞ்சவைக்கும் அஞ்சாலை மீனினம்



கடலுக்கு அடியில் செல்லும் மனிதர்களை அஞ்சவைத்துவிரட்டும் அஞ்சாலை மீனினம், விசித்திரத் தன்மைகளைக் கொண்டது. மன்னார் வளைகுடாப் பகுதியில் வாழும் உயிரினங்களுள் ஒன்று அஞ்சாலை மீன் இனம் பவளப்பாறையின் இடுக்குகள், பொந்துகளில் மறைந்து வாழும் இவைகளை ஆராய்ச்சியாளர்களைத் தவிர ஏனையவர்கள் பார்த்திருப்பது கடினம்தான். கடல் குச்சிகளை உண்டு வாழும் இவற்றின் குணம் விசித்திரமானது. இவை மீன் இனத்தைச் சேர்ந்தவை என்றாலும் மீன்களுக்குரிய செதில்கள் இவற்றுக்கு இல்லை.

பாம்பின் தோற்றம் கொண்ட இவை 150 சென்ரி மீற்றர் நீளமுடையவை. சிறிய கண்களை உடைய இவற்றுக்குப் பார்வையும் குறைவாகவே உள்ளது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இரவில் மட்டுமே வெளியே வரும் இந்த விலங்கு வேட்டையாடி உண்ணும் வழக்கம் கொண்டவை. இந்தியப் பெருங் கடலில் 57 வகையும், மன்னார் வளைகுடாவில் ஆறுவகை அஞ்சாலையும் காணப்படுகின்றன. மனிதனின் விரல்களைப் பார்த்தால் சதையை மட்டும் உறிஞ்சி உண்ணக் கூடியது. இதனால் கடலுக்கடியில் செல்பவர்கள் இவற்றைக் கண்டவுடன் தலை மறைவாகிவிடுவர். இவற்றை உணவாக யாரும் உட்கொள்வதில்லை. அலங்கார மீனுக்காக மட்டும் சிலரால் இவை பிடிக்கப்படுகின்றன.

## வங்கியில் அடகு வைத்த நகைகள் இரும்பாக மாறிய அதிசயம்

அரச வங்கியில் அடகுவைத்த நகைகளை மீட்ட வாடிக்கையாளர் ஒருவர் அந்த நகைகள் அனைத்தும் இரும்பாக மாறியிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.

இவர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஒரு தொகை நகைகளை அரச வங்கிக்கிளையில் அடகு வைத்து 32 லட்சம் ரூபா பணம் பெற்றுக் கொண்டார். பின்னர் அண்மையில் அவர் அந்த நகைகளை மீட்கப் பணத்தைச் செலுத்தியபோது வங்கி அதிகாரி பெட்டகத்தில் இருந்த நகைப்பெட்டியை எடுத்து வந்து இவர் முன்பாக வைத்து நகைகளை எடுத்துப் பார்க்கும் போது அவை அனைத்தும் இரும்புகளாக இருப்பதைக் கண்டு வியப்படைந்துள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## சொக்லேட் நீரூற்று

Las Vegas ல் உள்ள Bellagio ஹொட்டலில் தான் உலகின் மிகப் பெரிய சொக்லேட் நீரூற்று அமைக்கப் பட்டுள்ளது. இந்த நீரூற்றின் உயரம் 27 அடி ஆகும்.

இந்த நீரூற்று முழுவதும் கண்ணாடியால் வடிவமைக்கப்பட்டது. இதில் சுமார் 2 தொன் எடையுடைய சொக்லேட்கள் காணப்படுகின்றன.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமிட்டுக்களின் அற்புதங்கள்

தற்கால எகிப்து தலை நகர் கைரோவில் அமைந்துள்ள கிசா பிரமிட்டுகள் உலகப் புகழ் பெற்றவை. உலக ஏழு அதிசயங்களில் ஒன்றாகப் போற்றப்படும் பிரமிடுகள் மிக விந்தையான, இன்னும் முற்றிலுமாக அறிந்து கொள்ளப்படாத விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

ஐநூறு அடி உயரம் கொண்ட இந்தப் பிரமிட்டுகள் இரண்டரைத் தொன் எடையுள்ள தனிச் சுண்ணாம்புக் கற்பாறைகளால் எழுப்பப்பட்டுள்ளன.

இவ்வளவு எடை கொண்ட கற்களை ஐநூறு அடி உயரத்துக்குக் கொண்டு சென்ற விந்தையை வரலாற்று நிபுணர்கள் இன்னும் ஆராய்ந்துவருகின்றனர்.

சுண்ணாம்பு கற்களின் மேலடுக்குகள் நன்றாக பளிச்சிடப்பட்ட 'க்ரநிடே சுண்ணாம்புக் கற்களால்' வெளிப்புறம் பதிக்கப்பட்டுள்ளன. பின்னர் இக்கற்கள் அரப் சுல்தானால் பெயர்த்தெடுக்கப்பட்டு, மசூதிகள் கட்டக்கொண்டு செல்லப்பட்டதாக வரலாற்றுத் தகவல்கள் கூறுகின்றன.

இருபத்து மூன்று லட்சம் சுண்ணாம்புக் கற்கள் எவ்வாறு அந்தளவு உயரத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டன என்பதும், அத்தகைய பாலைவனப் பரப்பில் எவ்வாறு சாத்தியம் என்பதும் ஆய்வில் உள்ளது.

கிசாவில் உள்ள மூன்று பிரமிட்டுகளும் பைதொகராஸ் என்கிற கணித விதிகளின் படியும், பிரபஞ்சத்தில் உள்ள மூன்று ஓரின் நட்சத்திரங்களைக் குறிக்கின்ற துல்லிய கோட்பாட்டில் அமைக்கப்பட்டுள்ளதையும் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இன்னும் முற்றிலுமாக கண்டறியப்படாத உள் அறைகளின் பயன்பாடுகளில் குறுக்கும் நெடுக்குமாகச் செல்கின்ற சதுர துளைகளின் பயன்பாடுகள் மர்மங்கலாகவே உள்ளன.

இத்தகைய சதுர துளைகளின் இரகசியங்களை அறிந்து கொள்ள ரோபோட்களை உள்செலுத்தி மேலும் சில வாயில்கள் அடைக்கப்பட்டிருந்ததை உலகம் கண்டு வியந்தது.

இவற்றைத் திறக்கவும் அதற்கு பின்புறம் உள்ள மர்மங்களை அறிந்து கொள்ளவும் தற்பொழுதும் ஆய்வு குழுக்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன.

Roche
Mannheim Germany

உங்களுக்கு நீரிழிவு நோய் உள்ளதா...?



நம்பிக்கையான சரியான பெறுபேறுகளை
சுயமாக அறிந்து கொள்ளலாம்
ஜேர்மனிய தொழில்நுட்பத்தில் உற்பத்தி செய்யப்பட்ட
ACCU-CHEK
சுயமாக குருதியிலுள்ள
குளுக்கோஸின் அளவினை அளவிடும் கருவி

நீரிழிவு நோய் உங்களுடைய இருதயம், சிறுநீரகம், கால்கள் மற்றும் கண்பார்வையில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் முதன்மை காரணம் என்பது உங்களுக்கு தெரியுமா...? அதனால் நிகழ் காலத்தில் உடனுக்குடன் குருதியிலுள்ள குளுக்கோஸின் (சீனி) அளவினை அளவிடுவது மிக அவசியமாகும். எக்கு-சேக் கருவி மூலம் சுயமாக குருதியிலுள்ள குளுக்கோஸின் அளவினை வீட்டில் இருந்தே அளவிட முடியும். நம்பகமான எக்கு-சேக் கருவியை உபயோகித்து குருதியிலுள்ள குளுக்கோஸின் அளவு அதிகரிப்பதால் ஏற்படும் பக்க விளைவுகளை தவிர்ப்பதற்கு வைத்தியரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ளவும்.



ஆயுட் கால
உத்தரவாதம்

அனைத்தும்
ரூ .6950/-

அழையுங்கள் 0718 -691697

விரைவாக,
5 வினாடிகளில்
குருதியிலுள்ள குளுக்கோஸின்
அளவினை அளவிட

ACCU-CHEK Active
Strips are in packs of 10s, 25s & 50s

பொதியில் உள்ளடங்கியவை - • அளவிடும் கருவி • தோலை துளையிடும் கருவி • குருதி மாதிரிகளை பெற்றுக் கொள்ளும் 10 துண்டங்கள் • 10 ஊசிகள்

Sole Agent :
J.L.MORISON SON & JONES (CEYLON) PLC
620, Biyagama Road, Pethiyagoda, Kelaniya. Tel 011 2904222

ACCU-CHEK®
Live life The way you want

**Dealers** : Union Chemists, Col-2,5&10. City Dispensary, Col-2. I.C. Drugs, Col-3. Medico Pharma, Col-3. Wellawatte Pharmacy/Drugs, Col-6. Watson's Pharmacy, Wellawatta.Sam's Pharmacy, Nugegoda. City Pharmacy, Maharagama. Lanka Pharmacy, Kiribathgoda. Prasanna Pharmacy, Ja-Ela. Unique Pharmacy, Negombo. The Pharmacy, Negombo. Sri Lanka Pharmacy, Kandy. Galle Drugs, Gampola. The Pharmacy, Kurunegala. City Medicals, Kurunegala. Crystal Pharmacy, Galle. United Pharma, Galle/Matara. New Pharmacy, Anuradhapura. Chami Pharmacy, Anuradhapura. Aruna Pharmacy, Matara. Empaire medicals Gampha. Waruna Pharmacy, Panadura. City Medicals, Jaffna. Rathnam Pharmacy, Jaffna. Raaj Medicals, Vavuniya and at all leading Chemists



கண்களுக்கு கீழ்
கருமை படர்வதையும்
சரும வரட்சியையும்
போக்குகிறது.

NNO - இலங்கையில் சரும பராமரிப்பிற்கு முதல்தர மெருகூட்டும் நைற் ஓயில்

நொரிஷிங் நைட் ஓயில் (போஷாக்கான இரவு எண்ணெய்) (NNO) என்பது விசேடமாக தயாரிக்கப்பட்ட சருமத்துக்கு ஈரலிப்பையும், போஷாக்கையும், பொலிவையும் இளமையான தோற்றத்தையும் வழங்கக்கூடிய ஜொஜோபா எண்ணெய் மற்றும் விற்றமின் நு அடங்கிய எண்ணெய் ஆகும். இது சருமத்திலுள்ள இயற்கை எண்ணெய்த் தன்மையுடன் சேர்ந்து இளமையான தோற்றத்தை வழங்குவதுடன் 2 – 3 வாரங்களில் கண்களின் கீழ் பகுதியில் ஏற்படும் கரும் புள்ளிகளையும் அகற்றுகிறது.

2-3
வாரங்களுக்குள்
நீக்குகின்றது

- உலகெங்கிலும் கோடிக்கணக்கான மக்களின் நம்பிக்கையை பெற்றுள்ளது.
- தினமும் இரவில் முகம், கழுத்து, கைகள் ஆகியவற்றில் பூசவும்.

NNO வில் உள்ள விசேட அம்சங்கள் என்ன?

- இது ஜொஜோபா எண்ணெய் கொண்டது, இதன் மூலம் சருமத்திலுள்ள இயற்கையான எண்ணெய்த்தன்மையுடன் சேர்ந்து இளமையான தோற்றத்தை வழங்குகிறது.
- சருமத்துக்கு ஈரலிப்பை வழங்கி, சருமத்தை மேலும் வன்மையாக்குகிறது.
- கண்களின் கீழ் பகுதியில் தோன்றும் கரும் புள்ளிகள், கடுமையான கோடுகள் மற்றும் சுருக்கங்களை அகற்றுகிறது.
- இலகுவாக எடுத்துச் செல்லக் கூடியது, சுலபமாக பாவிக்கக் கூடியது.
- சுகாதாரமானது, குறிக்கப்பட்ட பாவனை, வசதியான பாவனை முறை.




அனுமதி பத்திரம் வழங்கியவர்
மெகா உயிரியல்விஞ்ஞானம் (அவுஸ்திரேலியா) பிரை லிமிட்டெட
தொலைபேசி: +94 11 4305366, +94 11 4366576, 077 3410071
மின்னஞ்சல்: mega-sl@megawecare.com | www.bioforever.com

விலை. 570/ [illegible] ஒன்றில் 30 ஆப்ளிகப்புகள் உள்ளன

MEGA
We Care
Human Wellness

www.naptbs.com

நாடெங்கிலுமுள்ள சுப்பர் மார்கட்களிலும் பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம் | A Baur & Co. Ltd. 1897ஆம் ஆண்டிலிருந்து இறக்குமதி செய்து விநியோகித்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வடிவமைத்து பிரபல்யமடையுங்கள்

## லங்கையின் ஒவ்வொரு மாவட்டத்தினதும் அடையாளங்களை பிரதிபலிக்கின்ற விதத்தில் புதிய தொடர் ரூ.10 நாணயக் குத்தியினை வடிவமைப்பதற்கான போட்டி

ங்கையின் ஒவ்வொரு மாவட்டத்தினதும் தனித்துவ அடையாளங்களை நேர்த்தியாக உருவமைக்கும் தகுதியைக் கொண்ட படைப்பாற்றல் மிக்ச லஞர்களுக்கு இலங்கையின் ஒவ்வொரு மாவட்டத்தினதும் அடையாளங்களை பிரதிபலிக்கின்ற விதத்தில் புதிய தொடர் ரூ.10 நாணயக் குத்தியினை வமைத்து பெயரையும் புகழையும் ரூ.50,000 காசுப் பரிசினையும் பெற்றுக் கொள்வதற்கான அழைப்பினை இலங்கை மத்திய வங்கி விடுக்கிறது.

ட்டிக்கான விதிகளும் ஒழுங்குவிதிகளும் பின்வருமாறு இருக்கும்:

வடிவமைப்புக்களை இலங்கையின் 25 மாவட்டங்களில் விரும்பிய ஏதேனும் மாவட்டம்/ மாவட்டங்களுக்காக மர்ப்பிக்கலாம். அத்துடன், வடிவமைப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட குறிப்பிட்ட மாவட்டத்துடன் சேர்ந்து ரையப்பட்ட தோற்றம் அல்லது தொனிப் பொருளும் அத்தகைய தெரிவிற்கான அடிப்படையும் தெளிவாக டுத்துக்காட்டுப்படுதல் வேண்டும்.

வடிவமைப்புக்கள் 2009ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டு ற்பொழுது சுற்றோட்டத்திலுள்ள ரூ.10 நாணயக் த்தியினையொத்த நாணயக் குத்தியின் முன்புறத்திற்காக முன்பக்கம்) மாத்திரம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

அனைத்து வடிவமைப்புக்களும் கறுப்பு வெள்ளையில் இருத்தல் வேண்டும். நிறத்திலமைந்த வடிவமைப்புக்கள் ராகரிக்கப்படும்.

வடிவமைப்புக்கள் A4 அளவு தாளில் 18 செ.மீற்றர் விட்டத்தில் அமைந்த வட்ட வடிவமொன்றில் வரையப்படுதல் வண்டும். வடிவமைப்புக்கள் 26.4 மி.மீற்றர் விட்டத்தினைக் கொண்ட நாணயக் குத்திக்கு பொருத்தமானவையாக இருத்தல் வேண்டும்.

னினும், ஒவ்வொரு வடிவமைப்புடனும்/ வடிவமைப்புக்களுடனும் இவ்விளம்பரத்தில் தெரிவிக்கப்பட்டவாறு வடிவமைப்பாளரினால் செய்யப்பட்ட பிரகடனமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பூரணமாக நிரப்பப்பட்ட பிரகடனம் இணைக்கப்பட்டிராத ந்தவொரு வடிவமைப்பும் நிராகரிக்கப்படும்.

வடிவமைப்பானது, வடிவமைப்பாளரின் அடையாளத்தினை டுத்துக்காட்டக் கூடிய ஏதேனும் அடையாளம், தொடர்பு அல்லது இலச்சினை எதனையும் கொண்டிருக்கக்கூடாது.

ஒவ்வொரு வடிவமைப்பும் வடிவமைப்பாளரின் சொந்த ஆக்கமாக இருக்க வேண்டியதுடன் ஏற்கனவேயுள்ள ற்றைய ஏதேனும் வடிவமைப்பிலிருந்து எடுத்தாளப்பட்டதாக இருக்கக்கூடாது. வடிவமைப்பாளர் இதனை இவ்வறித்தலில் ஏற்பட்டுள்ள பிரகடனப் படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

பரிசு பெறுகின்ற வடிவமைப்புக்கள், இந்நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைப்புக்களை பரிசீலித்ததன் பின்னர் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் தெரிவு செய்யப்படும்.

9. வெற்றி பெறும் ஒவ்வொரு வடிவமைப்பாளருக்கும் ரூ.50,000 பணப் பரிசு வழங்கப்படும்.

10. சமர்ப்பிக்கப்பட்டு, தெரிவு செய்யப்படாத வடிவமைப்பிற்கு இலங்கை மத்திய வங்கி எந்தவொரு கொடுப்பனவினையும் செய்யமாட்டாது.

11. இலங்கை மத்திய வங்கியினால் வடிவமைப்பானது தெரிவு செய்யப்பட்டதும் அவ்வடிவமைப்பு இலங்கை மத்திய வங்கியின் புலமைச் சொத்தாக மாறி விடுவதுடன் வங்கி அதன் தேவைப்பாடுகளுக்குப் பொருத்தமான விதத்தில் வடிவமைப்பினை அத்துடன்/ அல்லது வங்கியினால் இறுதியாக மேற்கொண்ட தீர்மானத்திற்கமைய முழு தொனிப்பொருளையும் திருத்துவதற்குமான உரிமையையும் அதிகாரத்தினையும் கொண்டிருக்கும்.

12. போட்டியாளரின் தனிப்பட்ட தகவல்களை, அஞ்சல் முகவரி, தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் (கிடைக்கத்தக்கதாக இருப்பின்) என்பனவற்றுடன் சேர்த்து ஒவ்வொரு வடிவமைப்புடனும்/ வடிவமைப்புக்களுடனும் சமர்ப்பித்தல் வேண்டும்.

13. அனைத்து வடிவமைப்புக்களும் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு 07.10.2011 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும், அல்லது இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்தின் வரவேற்புப்பீடத்தில் நேரடியாகக் கையளிக்கப்படுதல் வேண்டும்.

14. வடிவமைப்பினைக் கொண்டுள்ள தாளினை மடிக்கக்கூடாது. இதனை பொருத்தமான கடித உறையிலிட்டு பாதுகாப்பான முறையில் சீல் இட்டு 'புதிய தொடர் ரூ.10 நாணயக் குத்தியினை வடிவமைப்பதற்கான போட்டி' என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

15. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அஞ்சல் மூலம் அல்லது தொலைபேசி மூலம் அறிவிக்கப்படும். தெரிவு செய்யப்படாத வடிவமைப்பாளர்களுக்கும் அறிவிக்கப்படும்.

16. சமர்ப்பிக்கப்பட்ட வடிவமைப்புக்களை ஏற்றுக்கொள்கின்ற அல்லது நிராகரிக்கின்ற உரிமையினை மத்திய வங்கி கொண்டுள்ளதுடன், அனைத்து வடிவங்களையும் நிராகரிப்பதென தீர்மானிக்குமிடத்து அவற்றை நிராகரிக்கும் உரிமையினையும் கொண்டிருக்கும்.

### வடிவமைப்பாளரின் பிரகடனம்

புதிய தொடர் ரூ.10 நாணயக் குத்தியினை வடிவமைப்பதற்கான போட்டி

பெயர்: ....................................................................

முகவரி: ....................................................................

....................................................................

தேசிய அடையாள அட்டை இலக்கம்: ....................................

தொலைபேசி: ........................ மின்னஞ்சல்: ........................

செல்லிடத்தொலைபேசி: ........................

நான் மேலே குறிப்பிட்ட போட்டிக்காக .............. வடிவமைப்பினை /வடிவமைப்புக்களை சமர்ப்பித்திருக்கின்றேன் என்பதனை இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

அ. என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இணைக்கப்பட்டுள்ள வடிவமைப்பு/ வடிவமைப்புக்கள் எனது சொந்தப் படைப்பு/ படைப்புக்களாகும்.

ஆ. இணைக்கப்பட்டுள்ள வடிவமைப்பு/ வடிவமைப்புக்கள் தொடர்பான அனைத்து உரிமைகளையும் இலங்கை மத்திய வங்கியிடம் கையளிக்க உடன்படுகின்றேன்.

இ. வடிவமைப்பினை இறுதிப்படுத்துகையில் இலங்கை மத்திய வங்கி அதன் தேவைப்பாடுகளுக்குப் பொருத்தமாக எனது வடிவமைப்பினை அல்லது அதன் ஒரு பகுதியினை மாற்றுவதற்கு நான் உடன்படுகின்றேன்.

ஈ. எனது வடிவமைப்பு தெரிவு செய்யப்பட்டாலொழிய எனக்கு எந்தவொரு கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது என்பதனை நானறிவேன். ஆகவே, எனது வடிவமைப்பு தெரிவு செய்யப்படாவிடின் செலவுகளாக அல்லது கட்டணமாக எந்தவொரு தொகையினையும் கோரமாட்டேன்.

..............................          ..............................

கையொப்பம்          திகதி

முக்கியம்: அனைத்து வடிவமைப்புக்களுடனும் வடிவமைப்பாளரின் பிரகடனம் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**உங்கள் வடிவமைப்புக்கள் பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்:**
நாணயக் கண்காணிப்பாளர்
நாணயத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01

**விசாரணை:**
தொலைபேசி: 2477355, 2477603, 2477014, 2477364
மின்னஞ்சல்: currency@cbsl.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவுக்கு சிங்கப்பூருக்கு

எங்களுடன் சவாரி செல்ல
நீங்களும் தயாரா?

செலிங்கோ லை.:.ப்
குடும்ப சவாரி 5



60 வெற்றியாளர்கள் அதிசயம் மிகுந்த சீனாவுக்கு!
மேலும் 200 வெற்றியாளர்கள் சிங்கப்பூருக்கு!
2,000 வெற்றியாளர்கள் லெஷர் வேர்ள்டுக்கு!

5000 மைல்களுக்கும் மேற்பட்ட நீளம் கொண்ட சீனப் பெருஞ் சுவர், சீனப் பாரம்பரிய கட்டிடக் கலையை பிரதிபலிக்கும் விதமாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் மனங்கவர் கட்டிடங்கள், அரிய பென்டாக்கள், உலக பொருளாதாரத்திற்கு சவாலாக அமையும் வானுயர்ந்த வர்த்தக நிலையங்கள், காதுகளுக்கு இனிமை தரும் இசை, நீண்ட விழிகளைக் கொண்ட பெண்மணிகள் என பல தனித்துவங்களை தன்னகத்தே கொண்ட ஆசியாவின் மிகப் பெரிய நாடான அதிசயம் மிகுந்த சீனாவிற்கான சவாரிக்கு நீங்களும் எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்! உல்லாசமாய் சிங்கப்பூர் செல்லும் அற்புத வாய்ப்பும் உண்டு. இல்லையெனில் லெஷர் வேர்ள்ட் சென்றும் மகிழலாம்.

செலிங்கோ லை.:.ப் ஆயுட் காப்புறுதி ஒன்றைப் பெற்றுக்கொண்டு, நீங்களும் இச்சவாரிக்கான குலுக்கலில் இணைந்து கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 011 2 461 461

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

செ லி ங் கோ லை .:. ப்

செலிங்கோ லை.:.ப் டவர், 106, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 5.
கம்பனி பதிவு இல. PQ24 தொ.இல.: (011) 2 461 461 ஈமெயில்: service@ceylife.lk இணையம்: www.ceylincolife.com



LG Life's Good

# சௌபாக்கியமான வாழ்வை
## ஆரோக்கியத்துடன் உங்களுக்கு கொண்டுவரும்

புதிய ப்ளாஸ்மா பில்டருடன் கூடிய LG லோ வொட் இன்வேட்டர் வளிச்சீராக்கியானது நோய்கிருமிகளை அழித்து ஆரோக்கியமான வளியை உங்களுக்கு தருவதோடு 60 சதவீதம் வரை மின்னை சேமிக்கக்கூடியது.

SRI LANKA vs AUSTRALIA 2011
LG | Abans

உலகில் முதல் தர வளிச்சீராக்கியாக தொடர்ந்து 7 முறையாகவும் தெரிவாகியுள்ளது 1




இன்வேட்டர் தொழினுட்பத்தின் மூலம் வளிச்சீராக்கியின் கொம்ப்ரசரின் தொழிற்பாட்டைக் வெகு குறைவாக தொழிற்படச் செய்கின்றது. இதனால் கொம்ப்ரசர் குறைந்த வேகத்தில் தொழிற்படுகின்றது. இதன் மூலம் அறையின் குளிர்த்தன்மையை ஒரே சீராக வைத்துக்கொள்ளச் செய்கின்றது. இதன் மூலம் 60 சதவீதம் வரை மின்சாரத்தை சேமிக்க உதவுகின்றது.

மின்னை 60% வரை சேமிக்கவல்லது

## 60% மின்னை சேமிக்கவல்ல LG லோ வெட் இன்வேட்டர் வளிச்சீராக்கிகள்



குறைந்த சக்தியில் திறன்மிக்க தொழிற்பாடு

• 9000btu • 12000btu • 18000btu • 24000btu ரூ.99,900 இலிருந்து



குறைந்த சக்தியில் திறன்மிக்க தொழிற்பாடு

• 9000btu • 12000btu • 18000btu • 24000btu ரூ.94,900 இலிருந்து

## ஆர்ட் கூல் வளிச்சீராக்கி



• 9000btu • 12000btu
• 18000btu • 24000btu
• நியோ ப்ளாஸ்மா பில்டர்
• தன்னியங்கியாக செயற்படக்கூடியது

ரூ.93,900 இலிருந்து

வளிச்சீராக்கிகளை வாங்கும் உங்களுக்கு மினி பார் குளிரூட்டி ஒன்று இலவசம்



ரூ.17,900

தெரிவு செய்யப்பட்ட கடனட்டையாளர்களுக்கு வட்டியின்றிய மீள் செலுத்தும் முறைகள்

*நிபந்தனைகளுக்குற்பட்டது

A-Z: 0773179593, அபான்ஸ்: • சுண்ணாகம்-0777684068, சங்கானை- 0773763503 • JVC-HAIER: 0776163420

நாடெங்கிலும் 100 அபான்ஸ் விற்பனைக்கு பிந்திய சேவை நிலையங்கள்

அபான்ஸ் காட்சியறைகள் 365 நாட்களும் எல்லா திறந்திருக்கும்.

அபான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org